பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 21 திங்கட்கிழமை (07.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 011

# இரு தரப்புகளுடனும் தொடர்ந்து பேச தமிழ்க் கூட்டமைப்புத் தலைமை முடிவு

## பொன்சேகாவுடன் நேற்று சம்பந்தன் சந்திப்பு

கொழும்பு, டிசெம்பர் 07

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் என்ன நிலைப்பாடு எடுப்பது என்பது சம்பந்தமாக அரசுத் தரப்புடனும் எதிர்க்கட்சிகளின் பிரதான கூட்டுடனும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தீர்மானித்திருக்கின்றது.

இந்தத் தொடர் பேச்சுகளின் ஓர் அம்சமாக எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் பேச்சு நடத்தினார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் I, II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் I, II, பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## ஐ.நா.பிரதிநிதி நேற்று இலங்கை வந்தார்

கொழும்பு, டிச. 07

சிறுவர்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பான ஐ.நா. ஆணையாளரின் விசேட பிரதிநிதியான மேஜர் ஜெனரல் பற்றிக் கமேயற் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுக் கொழும்பை வந்தடைந்தார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கைச் சிறார்களின் தற்போதைய நிலை குறித்து

(20ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கக் கோருகிறது கூட்டமைப்பு

கொழும்பு, டிச. 07

யாழ். குடாநாட்டில் சுமார் 40 ஆயிரம் துருப்பினர் நிலைகொண்டுள்ளனர் எனவும், அந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

40 ஆயிரம் படையினர் யாழ். குடாநாட்டில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும், இந்த எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் அல்லது சில இடங்களில் மட்டும் படையினரின் பிரசன்னத்தை வரையறுக்க வேண்டும் - என்று கூட்டமைப்பு எம்.பிக்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் முடிவுற்று ஆறு மாத காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எவ்வித

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தமிழ் பேசும் சுயேச்சை வேட்பாளர்

கொழும்பு, டிச. 07

இன்று யுத்தம் முடிவுற்று குருதி உறையும் முன்னரே ஒரு ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கின்றோம் என யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போது ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட உள்ளவருமான டாக்டர் ஐ.எம். இல்லியாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆறு வருடத்துக்கு முன்னர் முதிர்ச்சி பெறாத இந்தத் தேர்தல் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை ஒரு திருப்பு முனையாக அமையப்போகிறது. இத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எவரும் முறையான தீர்வு எதனையும் வைக்காத நிலையில் நாம் தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம்.

சிறுபான்மை மக்களின் வாக்கு சக்தி மிக்கதாக - பேரம் பேசக் கூடியதாக இருக்க வேண்டுமானால் நாம் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும். முதல் வாக்கை

(20ஆம் பக்கம் பார்க்க)

## நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணி ஜனவரி மாதத்தில் பூர்த்தி செய்யப்படுமாம்

கொழும்பு, டிசெ. 7

இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ள பகுதிகளில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் ஜனவரி மாத இறுதிக்குள் பூர்த்திச் செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது.

நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளை இராணுவத்தினர் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் பணிக்கு மேலதிகமாக வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் முடிவடைந்ததும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதகதியில் இடம்பெறும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

(சி)

## குடாநாட்டின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க இரணைமடுக் குளத்திலிருந்து நீர் விநியோகம்

### நிர்மாணப் பணிகள் அடுத்த வருடத்தில் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, டிச. 07

யாழ்ப்பாணம் குடாநாட்டுக்கு கிளிநொச்சி இரணைமடுவிலிருந்து குடிதண்ணீர் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் துணைஅமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் குடிதண்ணீருக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் பின்னான அபிவிருத்தித் திட்டங்கள் ஒரேயடியாகச் சீனத் தரப்பினரிடம் கையளிப்பு

கொழும்பு, டிச. 07

யுத்தத்திற்குப் பின்னரான பல விதமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் இலங்கை அரசு, அதனைச் செய்து முடிக்கும் பொறுப்பின் பெரும் பகுதியை சீனாவிற்கு வழங்கியுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பலாலி - காங்கேசன்துறை ரயில் பாதை, மதவாச்சி - தலைமன்னார் ரயில் பாதை, யாழ்ப்பாண வீதிகள் புனரமைக்கும் பணி உட்படப் பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களை இலங்கை அரசு சீனாவிற்கு வழங்கியுள்ளது. இதற்கான நிதி

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை நேற்று சந்தித்தார் எஸ்.பி. அவரது நிலைப்பாடு இன்று வெளிவரலாம்

கொழும்பு, டிச. 07

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான எஸ்.பி.திஸ்ஸாநாயக்க நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாரும் போட்டியிடாமல் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தமை குறித்து, அதிருப்தி கொண்ட அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பகைத்துக் கொண்டனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை நிரந்தரமாக விடுவிக்குமாறு இலங்கையை பிளேக் வற்புறுத்தவேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை அவரிடம் கோரிக்கை

கொழும்பு, டிச. 07

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து, ஆறு மாதங்களான பின்னரும் முகாம்களில் சட்டவிரோதமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை நிரந்தரமாக விடுவிக்குமாறு இலங்கை அரசிடம் அமெரிக்காவின் தென்னாசியாவிற்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் கோரவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

நாளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ரொபேர்ட் ஓ பிளேக்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்கக் கிளையின் நிர்வாக இயக்குநர் ரலி கொக்ஸ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 ஆயிரம் பேர்

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் எம்.பி. நந்தமித்திர ஜனாதிபதி பக்கம்

கொழும்பு, டிச. 07

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தாம் ஆதரிக்கப் போகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தமித்திர ஏக்கநாயக்கா அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்






வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் 'திருவுடையாள்' பிரதேச மலர் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மலரின் முதற் பிரதியை யாழ்.அரச அதிபர் க.கணேஷிடமிருந்து நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவையக உரிமையாளர் ச.பிறேம்குமார் பெற்றுக் கொள்வதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் மேல்வரிசையிலும்-

கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்திய சீலன், மலரின் இணைஆசிரியர் கி.நடராசா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட காரைநகர் உதவி அரசஅதிபர் த.ஜெயசீலன், யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.சிவச்சந்திரன், மலரின் மற்றொரு இணைஆசிரியர் த.கலாமணி, கரவெட்டி பிரதேச உத்தியோகத்தர் செல்வி செல்வசுகணா ஆகியோர் உரையாற்றுவதை கீழ்வரிசையிலும் - காணலாம். (படங்கள்: சுந்தா)

# முறிகண்டியில் பஸ்களை நிறுத்தி பயணிகள் வழிபட ஏற்பாடு

## அமைச்சர் தேவானந்தா நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 7

ஏ-9 பாதையூடாகச் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் திருமுறிகண்டியில் தரித்து நின்று விநாயகப்பெருமானை வணங்கிச் செல்வதற்கு வசதியாக அங்கு பஸ்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வரும் வழியில் முறிகண்டி ஆலயத்துக்குச் சென்ற சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருமுறிகண்டி தேவஸ்தானம் ஆனது தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து அதன் நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விவரிக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஆலயத்தின் பிரதமகுரு ஜெயந்த சர்மா குருக்கள் கூறுகையில், திருமுறிகண்டி கோயிலானது தெரு வழிபாட்டு தேவஸ்தானமாக விளங்கும் நிலையில் பொது மக்கள் வழிபாடு செய்வதற்கு அனுமதி பெற்றுத்தரவேண்டும். தற்போது மீள் குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்பட்டு வரும் நிலையில் முறிகண்டிப் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மக்களை உடனடியாக மீளக்குடியேற்றுவதன் ஊடாக தேவஸ்தானத்தின் அன்றாட நடவடிக்கைகளை இயல்புநிலைக்கு கொண்டு வரமுடியும். அம் மக்கள் பாரம்பரியமாக மேற்கொண்டு வந்த பூக்கட்டுதல், அர்ச்சனைப் பொருள்களின் விற்பனை உட்பட ஏனைய நடவடிக்கைகள் மற்றும் காலம் காலமாக பிரசித்திபெற்ற முறிகண்டிக் கோயில் கச்சான் விற்பனை என்பவற்றை ஆரம்பிப்பதன் ஊடாக அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

குருக்கள் தாம் முன்னர் வசித்து வந்த வீடு கோயிலை அண்டிய பகுதியிலேயே இருப்பதால் அதில் மீண்டும் வசிப்பதற்கு தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவ் வீட்டுக்கு மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகளைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இது குறித்து கூடிய கவனம் எடுத்த அமைச்சர் தேவானந்தா உடனடியாக அவ்விடத்தில் இருந்தவாறே முல்லைத் தீவு உதவி அரசாங்க அதிபர் திருமதி சுபாஷினியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கினார். அங்கு சமுகமளித்திருந்த பிரதேச பாதுகாப்பு அதிகாரிகளிடமும் அமைச்சர் மேற்படி விடயங்களை விவரித்துக் கூறினார். (ஓ-1)

# யாழ். வலயப் பாடசாலைகளில் நிலையறி மதிப்பீடு இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.07.

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான கணிதபாட நிலையறி மதிப்பீடு இன்று திங்கட்கிழமை காலை 9மணி முதல் 11 மணி வரை நடைபெறவுள்ளது.

தரம் 5 முதல் தரம் 10 வரையான சகல மாணவர்களும் மேற்படி மதிப்பீட்டில் கலந்துகொள்வர். பாடசாலைகள் வினாத் தாள்களை இன்று காலை உரிய கோட்டங்களில் பெற்று மதிப்பீட்டை நடத்து மாறும், விடைத்தாள்களை இன்றைய தினமே பொதிசெய்து கோட்டப்பணிமனையில் ஒப்படைத்தல் வேண்டும் எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (7)

# இடம்பெயர்ந்த மாணவருக்கு நாளை அனுமதி அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.07

இடம்பெயர்ந்து வலிகாமம் வலயப் பாடசாலைகளூடாக ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை செவ்வாய்க்கிழமை வழங்கப் படவுள்ளன.

வன்னி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பிராந்திய சேகரிப்பு நிலையம் யாழ்ப்பாணம் - II இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம், கோப்பாய்க் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பாடசாலைகளினூடாக விண்ணப்பித்த மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகளே நாளை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து அதிபர்களிடம் வழங்கப்படவுள்ளன.

அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் அனுமதி அட்டைகளைச் சரிபார்த்துப் பெற்று அன்றைய தினமே மாணவர்களுக்கு வழங்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக வலிகாமம் வலயத்தில் பழைய பாடத்திட்டத்தின்படி பரீட்சைக்குத் தோற்றும் 44 பேருக்கு 3 பரீட்சை நிலையங்களும், புதிய பாடத்திட்டத்தின்படி பரீட்சைக்குத் தோற்றும் 537 பேருக்கு 8 பரீட்சை நிலையங்களுமாக மொத்தம் 11 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் விசேட கணிதபாடப் பரீட்சைக்கு 144 பேரும் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-16)

# கைதடி சித்த வைத்தியசாலையில் மூன்று விடுதிகள் நேற்றுத் திறக்கப்பட்டன

கைதடி,டிசெ.07.

கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் மூன்று விடுதிகள் (வார்ட்டுகள்) நேற்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் திஸ்ஸகரலியத்த, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, சுதேச வைத்தியத்துறை ஆயுள்வேத ஆணையாளர் திருமதி. ரமணி குணவர்த்தன, வடமாகாண ஆயுள்வேதப் பணிப்பாளர் திருமதி. சியாமா துரைரட்ணம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். கேதீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கைதடி முத்துக்குமாரசாமிப் பாடசாலை மாணவர்களின் "பாண்ட்" வாத்திய இசை முழங்க விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.

முதலில் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸகரலியத்த கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் தேவைக்காகப் புதிய அம்புலன்ஸ் வாகனத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்க அவர் அதனை வடமாகாண ஆயுள்வேதப் பணிப்பாளரிடம் வழங்கினார்.

தொடர்ந்து மகப்பேற்று விடுதி உட்பட மூன்று விடுதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான சித்த வைத்தியத் துறையைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஓ-288)

# வைத்தீஸ்வராவில் இன்று ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் மன்றத்தினால் நிகழ்த் தப்படும் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற வுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு. எப்.ஆர். ஜெறோ செல்வநாயகம் கலந்து கொள்வார். நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு பி.எப். இராஜசிங்கம் ஆசிச் செய்தி வழங்குவார்.

ஓ-16


## ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை

## கேள்வி கோரல்

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புச் சேவை இரண்டையும் 2010 ஆம் ஆண்டு நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. 20-12-2009 நண்பகல் 12 மணிக்கு முன்பு விண்ணப்பப் படிவங்கள் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் காரியாலயத்தில் மீளளிக்கப்படாத தொகை ரூபா - 500/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழு,
பருத்தித்துறை. (சி/562986)

Dr. V. ஜெயராஜா
தலைவர்.


# மகாஜனாவில் புதிய ஆய்வுகூடம்

யாழ்ப்பாணம்,டிசெ.07.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் "நிக்கொட்" அனுசரணையுடன் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடத்தை நாளை மறுதினம் புதன்கிழமை கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த திறந்து வைப்பார்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், நிக்கொட் நிறுவனப் பணிப்பாளர், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்வர். (ஓ-16)

## மரண அறிவித்தல்

### இசைக்கம்பர் முத்துக்குட்டி

காரைநகர் மருதடியைச் சேர்ந்த இசைக்கம்பர் முத்துக்குட்டி (தவில் வித்துவான், ஈழத்துச் சிதம்பரம்) நேற்று (06-12-2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காஞ்சென்ற சுப்பையா கம்பர் (நாதஸ்வரம்) அவர்களின் மருமகனும், பொன்னம்மாவின் அன்புத் தம்பியும், சுப்பையா கம்பர் மந்திரமூர்த்தி, கம்சானந்தி, பாப்பாத்தி, பார்வதி, ராமலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வி பரமேஸ்வரி கணேசனின் (இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு காரைநகர் மருதடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி,
காரைநகர். (சி/562987)

தகவல் :
க. மந்திரமூர்த்தி (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கையில் வலுவடையும் சீனாவின் பிடி; பார்த்திருக்கும் பாரதத்தின் பரிதாப நிலை!

மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு போல காரியத்தைக் கனகச்சிதமாக நகர்த்துகின்றது இலங்கை - இந்திய, சீன விவகாரங்களில்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தென்னிந்திய மாநிலமான தமிழகத்துடன் தொப்புள்கொடி உறவு கொண்டுள்ள இலங்கைத் தமிழரைக் கைவிட்டு - இன்னும் கொஞ்சம் விரிவாகக் கூறப் போனால் அவர்களைக் காட்டிக் கொடுத்து - கொழும்பை அரவணைத்துப் போனது புதுடில்லி.

உறவாலும், உணர்வாலும் தனது தமிழக மக்களுடன் ஒன்றுபட்ட இலங்கைத் தமிழர்களை விட, அயல்தேச ஆட்சித் தரப்பின் நல்லுறவே முக்கியமானது எனக் கருதி, செயற்பட்ட புதுடில்லிக்கு கொழும்பு நல்ல 'மறுத்தான்' அடி கொடுத்திருப்பதான செய்திகள் இப்போது வெளியாகியிருக்கின்றன.

இலங்கையில் யுத்தத்தின் பின்னரான நடைமுறைத் திட்டங்களில் தனது பங்கு,பணி பிரதானமானது என இந்தியா கருதிக் கொண்டிருக்க, புதுடில்லியை உதாசீனப்படுத்தி, புறந்தள்ளிவிட்டு, அதன் எதிர்ச்சக்தியான சீனாவுடன் கைகோர்க்கின்றது கொழும்பு என்ற செய்தி இப்போது புதுடில்லியின் காதில் நாரசமாய் விழுந்திருக்கும் எனக் கருதலாம்.

இலங்கைத் தமிழர்களின் மீள்குடியமர்வு, அபிவிருத்தி போன்றவற்றுக்கு உதவ இந்தியா முன்வந்து அதற்கான எத்தனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, கொழும்போ இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு சீனாவுக்கு வெற்றிலை வைத்து அழைத்துக் கொண்டிருக்கின்றது.

சீனாவுடன் இவ்விடயங்களில் கொழும்பு அவசர அவசரமாகச் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்புவனவாக உள்ளன.

ஒன்று - இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்ற பெயரில் பல்லாயிரக் கணக்கான கோடி ரூபா, உயர்ந்த வட்டி வீதத்தில் கண்மூடித் தனமாக சீனாவிடமிருந்து கடனாகப் பெறப்படுகின்றது.

அடுத்தது - எல்லை மீறிய செலவின முரண்பாடுகள் இந்தத் திட்டங்களில் உள்ள ஊழல், முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் போன்றவை தொடர்பான சந்தேகங்களைக் கிளப்பியுள்ளன.

பளையிலிருந்து காங்கேசன்துறை வரையான 56 கிலோ மீற்றர் தூர ரயில்பாதை மறுசீரமைப்புக்கு மட்டும் சுமார் 2 ஆயிரத்து 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ மீற்றர் தூரப் பாதை அமைப்புக்கு 45 கோடி 60 லட்சம் ரூபா சராசரியாகச் செலவாகவுள்ளது.

அதேநேரம், ஓமந்தை முதல் பளை வரையான 92 கிலோ மீற்றர் தூர ரயில் பாதை மறுசீரமைப்புக்கு 2 ஆயிரத்து 100 கோடி ரூபாவே செலவிடப்படுகின்றது. அதாவது அங்கு ஒரு கிலோ மீற்றர் ரயில் பாதை அமைப்புக்கான சராசரிச் செலவு சுமார் 22 கோடி ரூபாதான்!

இது ஒன்றே, இந்தத் திட்டங்களை அவசர அவசரமாக அடுத்த முப்பது மாத காலத்துள் - பூர்த்திசெய்து தருமாறு வற்புறுத்தி, வேகமாகக் கேள்விப்பத்திரங்களைப்பெற்று, பணி உத்தரவுகளை வழங்குகின்ற அரசின் சூழ்ச்சியின் பின்னால் புதைந்து கிடக்கும் ஊழல், மோசடித் திட்டங்களைப் புரிந்துகொள்ளப் போதுமானது.

இந்தத் திட்டங்களுக்கான கடன், உயர் வட்டியுடன் சீனாவிடமிருந்தே பெறப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்ல, இத்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் அவசரப்பட்டு சீன நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டிருக்கின்றன.

அதுவும், யுத்தத்தின் பின்னரான இந்த ரயில் பாதைகள் மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றுக்கான சீன ஒப்பந்தப்படி, இந்த ஒப்பந்தப் பணிகளை ஆற்றுவதற்காக சுமார் இருபத்தியையாயிரம் சீனர்களே இலங்கை வருவர் என்று கூறப்படுகின்றது.

ஆக, வடக்கு - கிழக்குத் தமிழர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களுக்குரிய நிதி சீனாவிடமிருந்தே உயர்ந்த வட்டிக்குக் கடனாகப் பெறப்படுகின்றது. அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் சீன நிறுவனங்களுக்கே வழங்கப்படவுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துகையில் இங்கு எழும் வேலை வாய்ப்புகளுக்கும் சீனர்களே இங்கு வருவிக்கப்படவுள்ளனர். அவர்களுக்கே இந்த மறுசீரமைப்பு, அபிவிருத்தித் திட்டங்களின் கீழான வேலை வாய்ப்புகள் கிட்டும். பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு அல்ல.

ஆக, சீனாவிடமிருந்து பெறப்படும் கடன் மூலம் நாடும் மக்களும் பெரும் கடனாளியாக, கடனை வழங்கி வட்டியையும் அறவிடும் சீனா தனது ஆதிக்கத்தையும் இலங்கைக்குள் மேலும் பலப்படுத்தி இறுக்கப் போகின்றது.

இலங்கையின் புத்தளம் நிலக்கரி மின்திட்டம், அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித்திட்டம், அம்பாந்தோட்டை விமான நிலையம், மாத்தறை - கதிர்காமம் ரயில் பாதை சீரமைப்பு, தெற்கின் கடுகதி வீதிப் பாதை எனப் பிரதான திட்டங்களை எல்லாம் தனது கைக்குள் போட்டுக்கொண்டு சீனா ஒவ்வொன்றாகக் கபளீகரம் செய்து வருகின்றது. இப்போது யுத்தத்தின் பின்னரான வடக்கு - கிழக்கு மறுவாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளையும் தனது சூழ்ச்சித் திட்டத்துக்குள் அது மெல்ல வளைத்துப் பிடித்துக் கொண்டு வந்த வண்ணம் உள்ளது.

இந்தியா என்ன செய்யும்? பாவம்! - பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர!

# தொலைக்காட்சியில் உயர் இராணுவ அதிகாரிகள் சீருடையில் தோன்றி பொன்சேகாவுக்குப் பதில்

கடந்த மே மாதம் பாதுகாப்புப் படையினரால் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பிறகு சுதந்திரத்துக்குப் பின்னர் ஒருபோதும் இல்லாதவகையில் ஜனநாயக அரசியலுக்குள் இராணுவத் தன்மை தாராளமாகக் கலப்படமாகத் தொடங்கியிருக்கிறது. இது மெதுவாக வளர்ந்து வருகின்றமை மட்டுமல்ல உயிராபத்துக்களை விளைவிக்கும் ஒரு போக்கும் தென்படத் தொடங்கியுள்ளது.

> **'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை (06.12.2009) அன்று எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை இவை**

புலிகளின் பெரும் எண்ணிக்கையானவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்களின் பெரும் அளவிலான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுவிட்டன. எஞ்சியிருப்பவை ஒவ்வொருநாளும் கைப்பற்றப்பட்டு வருகின்றன. உயிருடனிருக்கும் போராளிகளில் காவலில் இருக்கும் 10 ஆயிரம் பேரில் அனேகர் அடையாளம் காணவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படவும் சட்ட நடவடிக்கைகளுக்காகவும் காத்திருக்கிறார்கள்; இன்னும் ஒரு சிலரே வெளியில் இருக்கக்கூடும். ஆயிரக் கணக்கில் இருப்பார்கள் என்று கூறப்படுவது மிகைப்படுத்திக் கூறுவதாகவே இருக்கும். அறிவுபூர்வமாக ஆராய்ந்தால் ஒரு சில நூறுபேரே அப்படி இருப்பார்கள் என்று கண்டறியலாம். நூறுபேருக்கும் குறைவாக இல்லாதுபோனாலும் அவ்வாறான ஒரு குழுவினால் நாடு முழுவதும் தாக்குதல்களை நடத்தக்கூடிய நிலையில் இருப்பார்களா? என்று கூறமுடியாது. இதற்கு 'ஆம்' என்பது விடையாக இருக்குமானால் புலிகளின் இராணுவத் திறமை தோற்கடிக்கப்பட்டுவிட்டது, புலனாய்வுத் திறமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அரசாங்கம் கூறிக்கொள்ளும் நிலைப்பாடுகள் முரணானவையாகக் காணப்படுகின்றன. இன்னொரு வகையில் 'இல்லை' என்பது பதிலாக அமையுமானால் நாடு முழுவதும் ஆயுதப் படைகளும் பொலிசாரும் சிவில் பாதுகாப்புப் படைகள் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் அளவு ஈடுகொடுப்பதாக இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

தலைவர்கள், ஆயுதபலம், மற்றும் நாடு முழுவதும் செயல்படுவதற்கான புலனாய்வுத்திறன்கள் யாவும் இழந்து இருக்கும் அவர்கள்தான் சாட்டுக்குக் கிடைத்துள்ளவர்கள். அரசின் கட்சி அரசியலானது மிகவும் தாழ்வான நிலைக்குப் போய்விட்டது.

இவ்வாறுதான் ஜெனரல் பொன்சேகா ஹில்டன் ஹோட்டலில் செய்தியாளர் மத்தியில் தேர்தலில் போட்டியிடப் போவது பற்றி முதல் தடவையாக அறிவித்ததுடன் போராட்ட நிலைகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு விட்டன.

அன்றைய நிகழ்வில் பத்திரிகையாளர்கள் மட்டும் கலந்துகொண்டார்கள் என்றில்லை. ஐ.தே.க குழுவொன்றும் கலந்துகொண்டு கைதட்டி மகிழ்ந்தது. மேற்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரும் முதல் வரிசையில் இருந்து கொண்டு கேள்விகளைத் தொடுத்தார்கள்.

வெளியில் ஜே.வி.பியின் அனுர குமார திஸாநாயக்க தனது கைத்தொலைபேசியைக் காதில் வைத்துக்கொண்டு அங்கும் இங்கும் உலாவிக்கொண்டிருந்தார். பொன்சேகாவின் ஆதரவாளர்களுக்கு அவர் பதில் கூறிக்கொண்டிருந்தார். அவருக்கு உள்ளே செல்ல அனுமதி கிடைக்கவில்லையென்ற அரச தரப்பு ஊடகங்களின் செய்திகளை அவர் மறுத்தார். பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கம் எதுவும் தமக்கு இருக்கவில்லையென்று அவர் கூறினார்.

இந்த மாநாட்டில்தான் பிரதான எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகத் தாம் போட்டியிட முன்வந்திருப்பதை பொன்சேகா அறிவித்தார்.

## சிரேஷ்ட படை அதிகாரிகள் மூவர் தொலைக்காட்சியில் தோன்றி அறிக்கை

பொன்சேகா முதல்தடவையாகத் தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கிறார் என்பதை அறிவித்த சில மணித்தியாலங்களுக்குள் அரசு வேகமாகச் செயலில் இறங்கியது. மரபுக்கு மாறாக மூன்று சிரேஷ்ட அதிகாரிகளை அரச ஊடகமான ரூபவாஹினியில் தோன்றி பொன்சேகாவின் கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவிக்குமாறு அரசினால் உத்தரவிடப்பட்டது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, முன்னாள் இராணுவப் பேச்சாளரும் தற்போதைய சிக்னல் அதிகாரியுமான பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, முன்னாள் இராணுவப் பேச்சாளரும் மீள்குடியமர்வின் பணிப்பாளர் நாயகமுமான மேஜர் ஜெனரல் தயாரட்னாயக்க ஆகிய மூவரும் இராணுவ உடையில் தோன்றி ஜெனரல் பொன்சேகாவின் சில கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்தனர். இதில் சுவாரஷ்யம் என்னவென்றால் பொன்சேகா பதவியில் இருந்த போது நாணயக்காரவும் சமரசிங்கவும் அவரைப் பலமாக ஆதரித்து நின்றவர்களாவர்.

எதுவானாலும் மேஜர் ஜெனரல் ரட்னாயக்க தாம் முன்னாள் இராணுவத் தலைவருடன் ஒத்துப்போகவில்லையென்றும் தமது பதவி உயர்வை அவர் மறுத்துவிட்டார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இராணுவம் அரசியல் மயமாக்கப்பட்டு விட்டது. மற்றும் சாதாரண உடையில் இராணுவத்தினர் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர் என்ற பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்களை பிரிகேடியர் நாணயக்கார மறுத்துரைத்தார். புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்தமைக்கு எந்த ஒரு தனிப்பட்ட இராணுவத்தினரும் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது என்று பிரிகேடியர் சமரசிங்க எடுத்துக் கூறினார்.

கடந்த காலங்களில் சேவையில் இருந்த எந்தவொரு இராணுவ அதிகாரியும் தேசிய தொலைக்காட்சியில் தோன்றி அரசியல் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும்படியாக பணிக்கப்பட்டிருக்கவில்லை.

## இராணுவத்துக்கு பதில் கடற்படையினர்

இதற்குப் பிந்திவந்த நாள்களில் கொழும்பு நகரில் சில இடங்களில் இராணுவ நிலைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. முக்கியமான சில இடங்களில் இராணுவத்துக்குப் பதிலாகக் கடற்படையினர் நிறுத்தப்பட்டனர். சில பிரதான பகுதிகளில் இராணுவம் அகற்றப்பட்டு கடற்படையினர் நிலை கொண்டனர். உயர்மட்ட நிலைகளிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. படைகளின் பிரதான அதிகாரியின் பணிமனையிலிருந்து மேலும் பலர் மாற்றப்பட்டு வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற சில இராணுவ அதிகாரிகள் ஜெனரல் பொன்சேகாவின் பிரசாரப் பணிகளில் இறங்கியுள்ளனர்.

கின்றது. இது கடந்த காலத்தில் பொன்சேகாவை வானளாவப் புகழ்ந்து வந்தது.

இராணுவத்திலுள்ள சில பெண் இராணுவத்தினரின் பிள்ளைகளின் தந்தையை நிர்ணயிப்பதற்கு மரபணுச் சோதனை செய்ய வேண்டியிருக்கும் என்று இந்த இணையத்தளம் இப்போது தெரிவித்துள்ளது. முன்னொரு தடவை பொன்சேகாவின் குடும்ப உறுப்பினர் ஒருவர் பாதுகாப்புத் தளபாட கொள்வனவில் கமிஷன் பெற்றதாகவும் தங்கள் சட்டத்தரணிகள் இலாபம் பெறுவதற்கு உதவிய தாகவும் இந்த இணையத்தளம் குற்றஞ்சாட்டியிருந்தது.

தேசிய வீரர் என்று முன்பு பொன்சேகாவைப் பாராட்டிய அரசாங்கம் இப்பொழுது சட்டவிரோதமாகக் குழந்தைகள் உற்பத்தியாக தந்தையாக விளங்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டுவதற்கு இணையத்தளம் ஒன்றுக்கு உதவி வருகின்றது.

இப்படியான குற்றச்சாட்டுக்கள் ஓர் இராணுவ ஜெனரல் மீதோ அல்லது வேறு ஓர் இலங்கையர் மீதோ தெரிவிக்கப்படுவதானது இலங்கையர் ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும்.

நாட்டுப்பற்றாளராகவிருக்கும் ஒருவர் மறுநாளே தேசத்துரோகியாகத் தூசிக்கப்படும் கலாசாரம் ஒன்று இங்கே தலைதூக்கி வருவதை உலகம் இதன்மூலம் அறிந்துகொண்டுவிடும்.

ஜெனரல் பொன்சேகா ஓய்வுபெற்றமை வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை யென்ற த்கவல் வெளிவந்ததையடுத்து ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் இரண்டு அறிவித்தல்கள் வெளிவந்துள்ளன.

ஜெனரல் பொன்சேகா இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார் என்பதும் கூட்டுப்படைகளின் பிரதான அதிகாரி பதவியிலிருந்து அவர் விலகிக் கொண்டார் என்பதும் திகதிகளுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## பொன்சேகாவின் இந்திய விஜயம்

ஜெனரல் பொன்சேகா கடந்த புதன் கிழமை முன் ஏற்பாடு அற்ற விஜயம் ஒன்றை மேற்கொண்டு மும்பைக்குச் சென்று வெள்ளிக்கிழமை திரும்பி வந்தார்.

இலங்கை விமான நிலையம் ராஜபக்ஷ ஆதரவாளர்களினால் கட்டுக்குள் வைத்திருக்கப்படுகின்றது. அண்மைக் காலத்தில் வெற்றி வீரராகத் திகழ்ந்த பொன்சேகாவை எவரும் கண்டுகொண்ட மாதிரியே காட்டிக் கொள்ளவில்லை. அவருக்கு அதிகாரிகள் எவரும் மரியாதைகள் செலுத்தவில்லை. இதுதான் இன்றைய இலங்கையின் அரசியல்.

# தலைநகரில் சில இடங்களில் இராணுவத்துக்கு பதில் கடற்படை

இலங்கை ரூபவாஹினியிலிருந்து பதவி விலகி பொன்சேகாவுடன் கடைசியாகச் சேர்ந்துகொண்டுள்ளவர் மேஜர் ஜெனரல் சுனில்சில்வா ஆவார். இராணுவத்தின் தளபதியாக பொன்சேகா இருந்த போது இவர் இராணுவச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தமது பிரசார வேலைகளை விரிவுபடுத்த ஆரம்பித்துள்ளனர். புதிய மஹிந்த சிந்தனையொன்றை அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது விநியோகிக்கப்பட்ட மஹிந்த சிந்தனையில் மேலும் சில மாற்றங்களைச் செய்வதாக இது இருக்கப் போகின்றது.

## ஒருவரை ஒருவர் வெறுக்கும் வெற்றியின் பங்காளிகள்

வேறு நாடுகளில் நடைபெற்றுள்ள இம்மாதிரி இராணுவ நடவடிக்கைகளுக்கும் இங்கு இடம்பெற்றுள்ள இராணுவ நடவடிக்கைக்கும் இடையிலான வேறுபாடுகள் இப்போது துலாம்பரமாக வெளிப்பட்டு வருகின்றன. ஏனைய நாடுகளில் இறந்தவர்களின் அல்லது அவயவங்களை இழந்தவர்களின் தியாகங்களின் மீது கிடைத்துவிட்ட வெற்றிகளின் மேன்மையை, புகழை அல்லது மாண்பினை வெற்றியாளர்கள் தொடர்ந்தும் பகிர்ந்துகொண்டு வருகிறார்கள். ஆனால் இங்கேயோ வெற்றியின் பங்காளிகள் வேலுப்பிள்ளை பிரபாகரனை வெறுத்ததைவிட அதிகமாக ஒருவரை ஒருவர் வெறுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அரசு நடத்தும் ஊடகங்களும் அரச சார்பு இணையத்தளங்களும் ஜெனரல் பொன்சேகாமீது கடும் தாக்குதல்களை, வசைபாடுதல்களை ஆரம்பித்துவிட்டன. ஓர் இணையத்தளம்-அரசிடமிருந்து தனது ஒருமாத காலப் பணிக்கு 25 ஆயிரம் அமெரிக்க டொலர்களைப் பெற்று வருகின்றது.

## பிரசாரத்திட்டம்

பல்வேறு அம்சங்களைக் கொண்ட பிரசாரத் திட்டங்களைத் தீட்டி வரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியினர் (UPFA) ஜெனரல் பொன்சேகா பதவியில் இருந்தபோது தொலைக்காட்சிப் பேட்டிகளில் வழங்கிய கருத்துக்களை அவர்களில் ஒரு பிரிவினர் தொகுத்து வருகின்றனர். குறிப்பாகப் பத்திரிகையாளர்கள் பற்றிய அவர் கருத்துக்களை அவர்கள் ஆராய்வதாகத் தெரிகிறது. பத்திரிகையாளர்களின் கொலைகள், அவர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் பற்றிய சம்பவங்களும் தொகுக்கப்படுகின்றனவாம். பிரசாரத்தின்போது இவைகளைத் தமக்குச் சார்பாக அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவிருக்கிறார்கள். இவைகளில் 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்தவிக்கிரமதுங்கவின் கொலையும் அடங்கும்.

கடந்த ஞாயிறன்று பத்திரிகையாளர் மத்தியில் ஜெனரல் பொன்சேகா பேசுகையில் ''விக்கிரமதுங்கவின் கொலை மட்டுமில்லை, கொழும்பில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் சம்பவங்கள் தொடர்பாகவும் என்னை அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

நான் மரபு ரீதியிலான ஓர் இராணுவத்தை வழிநடத்தியவன், என்னிடம் காடையர்கள், பாதைவஸ்துக்காரர்கள் போன்றவர்கள் இருக்கவில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க முயலவில்லை. இப்பொழுதும்கூட ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் அவைகளை ஊக்கமளித்து நடத்தியவர்களுமே பொறுப்பு'' என்று கூறினார்.

இவ்விதமான குற்றச்செயல்களின் போது அரசாங்கம் பேசாமல் இருந்தது என்றால், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டு முன்னணியானது தாங்கள் இவைகளுக்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்று நினைக்கிறார்களோ அவர்களை சுட்டிக் காட்ட இப்போது முனைகிறார்கள் என்றே கொள்ளவேண்டும். (ப)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 22 08.12.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஸப்தமி மு.இ.11.18 வரை |
| நட்சத்திரம்: | மகம் மாலை 05.50 வரை |
| சுபநேரம்: | 10.47-12.17 வரை |
| ராகுகாலம்: | 03.17-04.47 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கல்விகற்க விடுதி வசதிகள்

## அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 7

வன்னியில் இருந்து இடம்பெயர்ந் துள்ள வசதிகுறைந்த மாணவர்களுக்கு யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் விடுதிகள் அமைத்து அங்கு தங்கி கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வருகிறது.

இது தொடர்பாக மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தகவல் தருகையில்; தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் (5 முதல் 15 வயதுக் குட்பட்ட பெண்கள்), சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி (12 முதல் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள்), யாழ்.இந்துக் கல்லூரி (12 முதல் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள்), மன்னாரில் இந்து மாமன்றத்தினதும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்கள் ஒன்றியத்தினதும் ஆதரவுடன் இயங்கும் லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன சிறுவர் இல்லம் (5 முதல் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள்), மன்னார் அன்னை இல்லம் (5 முதல் 15 வயதுக்குட்பட்ட ஆண்களும், பெண்களும்) ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் விடுதிகளில் இணைந்து கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்குப் போதிய வசதிகள் இல்லை என்ற காரணத்தாலும், பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு ஆதரவு அவசியம் என்பதாலும் மேற்படி இடங்களில் மாணவர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படுகின்றன. பெற்றோர்களை இழந்தபிள்ளைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவிருப்பதுடன், பெற்றோரின் வறுமைநிலையைக் கவனத்திற் கொண்டும் மேற்படி விடுதிகளில் பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் - என்றார்.

இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களை நல்லூர் கோயில் வீதியிலுள்ள இந்து மாமன்ற பிராந்திய அலுவலகம், வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயம், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகம், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## மிருசுவிலில் மாணவர் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 7

மிருசுவில் றோ.க த.க. பாடசாலையில் கல்வி கற்று ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் சித்தயடைந்த மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா மற்றும் ஒளிவிழா ஆகிய நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எப்.ரி எடிசன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், மிருசுவில் பங்குத் தந்தை அருட்பணி. யோ.த. சோதிநாதன், சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு.என்.ஜே. ஞானபொன்ராஜா, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி கே.பொன்னம்பலம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜா, தென்மராட்சி பிரதேச மின்அத்தியட்சகர் ஏ.அன்ரன் ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஒ)

## நாவலர் குருபூசை

அகில இலங்கை திருமுறை மன்றம் வருடந்தோறும் கார்த்திகைமாத மகநட்சத்திரத் தினத்தன்று யாழ்.நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்திவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 4.30 மணிக்கு நடைபெறும்.

குருபூசையைத் தொடர்ந்து தேவாரப் பாராயணம், சொற்பொழிவு ஆகியன இடம்பெறும் என்று மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஒ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17 ★ 08 ★ 1935



மறைவு 07 ★ 11 ★ 2009

### அகஸ்ரின் எமில் ஜேம்ஸ்

கடந்த 07-11-2009 அன்று காலமாகிய அகஸ்ரின் எமில் ஜேம்ஸ் அவர்களின் 31 ஆம் நாள் நினைவாக இன்று (07.12.2009) திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு குளமங்கால் சவேரியார் ஆலயத்தில் நடைபெறும் நினைவுப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குளமங்கால்,
மல்லாகம். (92924)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.

## தேவை

TOYOTA டவுண் ஏஸ் VAN
தொடர்பு : 0777656230
நெல்லியடி. (90982)

## தவறிவிட்டது

எனது ஹொண்டா CD 50 மோட்டார் சைக்கிளின் பின்பக்க இலக்கத்தகடு (NPGH 5937) கண்டி வீதியில் அம்பிகா மருந்தகத்திற்கும் மீசாலைக்கும் இடையில் அல்லது பங்களா வீதியில் மீசாலைச் சந்திக்கும் எனது வீட்டிற்கு மிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மீசாலை மெடிக்கல் சென்றறில் ஒப்படைத்துத் தகுந்த சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

டாக்டர் பொ.வே.தம்பித்துரை
T.P: 0777492779 (சி/562980)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி வசந்தி ஜெயராஜா அவர்களின் அன்பு மகள்

### ஜெ. சாபினி

இறையடி சேர்ந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடை கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை. (சி/562985)

## துயர் பகிர்கின்றோம்

எமது சங்க உறுப்பினர், யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலய முதல்வர் சி. மனோகரன் அவர்களின் தந்தை

அமரர் **வேலன் சின்னையா**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குவதுடன், அவர்தம் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

தென்மராட்சிப் பாடசாலைகளின்
அதிபர்கள் சங்கம். (92925)

## விற்பனைக்கு

தரமான
★ சிறிய செங்கற்கள்
★ கொங்கிறீற் கற்கள்
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு : 0778330145 (சி/562984)

## விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதி, மாபியன் மில் அருகில் "கட்டப்பாளி" என்னும் காணி 6 ¼ பரப்பும் கிணறும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளலாம் :
சின்னையா - கமலாதேவி
இல. 262, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (91921)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 ★ 10 ★ 1992



ஆண்டவன் அடியில் 08 ★ 11 ★ 2008

### செல்வன் இரத்தினம் தனேஸ்

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

கப்பபுலம்,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
ஆயக்கடவை சித்திவிநாயகர் கோயிலடி.

குடும்பத்தினர். (92923)

## மரண அறிவித்தல்

### சங்கீத பூசணம் லயனல் திலகநாயகம் போல்



(இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளரும், முன்னாள் யாழ். பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரையாளரும் (சங்கீதம்), யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சகரும்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லயனல் திலகநாயகம் போல் 05.12.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் போல்-தங்கமலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் ஆசீர்வாதம் - விக்ரோறியா தம்பதியரின் மருமகனும் லூர்து இருதயறோசா, பத்தினியம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், பிரியம்வதா (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் கல்லூரி), பிரியவதனன் (இத்தாலி), பிரியவத்சலன் (வேள்ட் விஷன், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மக்ஸ்மிலன் (U.N.D.P, யாழ்ப்பாணம்), மொறின் ஷாமினா (பிரதேச செயலகம் - நல்லூர்) ஆகியோரின் மாமனாரும், பிரகாஷாவின் பேரனும், சுகிர்தம் போல் (லண்டன்), பான்ஷி நிர்மலா, லில்லி சுசிலா, ஸ்ரெலா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கடமைகளுக்காக இன்று (07.12.2009) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித சவேரியார் ஆலயத்திற்கு (மல்லாகம்) எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 3201 (92915)

தகவல்:
மகள்.

## நெஞ்சம் மறவாத நினைவலைகள்



சுந்தரலிங்கம் சிவபாலன்
மலர்வு 06.09.1986 உதிர்வு 19.12.2004



நாகலிங்கம் சுந்தரலிங்கம்
மலர்வு 10.10.1934 உதிர்வு 12.11.2007



சுந்தரலிங்கம் இந்திராதேவி
மலர்வு 12.06.1946 உதிர்வு 20.11.2008



சுந்தரலிங்கம்-சிறிதரன்
மலர்வு 31.03.1968 உதிர்வு 07.11.2009

உணர்வுகள் ஊமையாய் ஊருகின்றன!
நினைவுகள் உங்களைச் சுற்றியே
நித்தமும் சிறகடிக்கின்றன
உங்கள் சுவடுகள் இந்த மண்ணில்
எம் மூச்சோடு கலந்திருக்கும்.

இன்று (07.12.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சுந்தரலிங்கம்,
விவேகானந்த வீதி, மஞ்சத்தடி,
இணுவில். (92922)

தகவல்:
தம்பி (ரவி).

யாழ். மக்களுக்காக

லண்டன், சுவிஸ், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, இத்தாலி, நோர்வே, டென்மார்க், சிங்கப்பூர் , துபாய், நியூசிலாந்து, நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ்,இந்தியா ஆகிய பதினாறு நாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு நீங்கள் விரும்பும் D.V.D, C.D, உணவுப்பொருள்கள் மற்றும் புடைவை வகைகள் போன்றவற்றைத் துரிதமாகவும், பாதுகாப்பாகவும் அனுப்ப இன்றே தொடர்பு கொள்ளுங்கள்



★ S.V.N. ENTERPRISES
இல.14, நவீன சந்தை சாவகச்சேரி
தொ.பே : 021-5672015,
0215672016

★ யாழ். ரெக்ஸ், சாவகச்சேரி
தொ.பே : 021-5672017

★ யாழ். ரெக்ஸ், யாழ்ப்பாணம்
தொ.பே : 021-2229951,
0777279691

★ யாழ். - கொழும்பு, கொழும்பு - யாழ். ட்ரான்ஸ் போர்ட் சேவையும் உண்டு.

(சி/562963)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர் ந.பரமசிவத்தின் சேவைநயப்பும் மணிவிழாவும் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் 'பரமதீபம்' மணிவிழா மலரினை பேராசிரியர் சத்தியசீலன் வெளியிட ஓய்வுபெற்ற அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை பெற்றுக் கொள்வதையும், மணிவிழா நாயகருக்கு பாடசாலை மாணவி வாழ்த்துப்பா வழங்குவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் முதல் மூன்று படங்களில் காணலாம்.

பிரம்மஸ்ரீ ஞா.ஞானசம்பந்தக்குருக்கள் ஆசியுரை வழங்குவதையும், கல்லூரியின் ஆசிரியர் திருமதி லிங்கேஸ்வரன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் வே.தர்மரட்ணம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி ஸ்ரீசற்குணராஜா, பேராசிரியர் சத்தியசீலன் ஆகியோர் உரைநிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதகிருஷ்ணன், காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன், கலாநிதி வீரமங்கை யோகரட்ணம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதை இறுதி மூன்று படங்களிலும் காணலாம்.

(படங்கள்: விக்ரோறி)

# மயிலிட்டி காசநோயாளர் வைத்தியசாலையை மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மாவட்ட வைத்திய அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.7

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக இயங்காமல் உள்ள மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீளவும் இயக்குவதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்தார் மாவட்ட காசநோய் வைத்திய கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா.

இது தொடர்பாக அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் காசநோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கென அமைக்கப்பட்ட மயிலிட்டி காசநோய் வைத்திய சாலை பல வருடங்களாகச் செயற்படாமல் உள்ளது.

தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி இவ்வைத்தியசாலையை மீளவும் இயக்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதே காலத்திற்கு உகந்த சேவையாக இருக்கும்.

இதேசமயம் யாழ்.போதனா வைத்திய சாலையில் காசநோயாளர்களுக்கெனத் தனியான விடுதியொன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(04-224)

# யாழ்.நகரில் ஜனவரி மாதத்தில் தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள்

## யாழ்.நகர முதல்வர் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.7

''லேக்ஹவுஸ்'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாநகர சபையின் அனுசரணையில் தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள் உள்ளடங்கியதான பல்வேறு கலை நிகழ்வுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் ''லேக்ஹவுஸ்'' நிறுவனத்தினரால் யாழ்ப்பாணத்தில் எமது பாரம்பரிய கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் ஒவ்வொரு தை மாதத்திலும் நடத்தப்பட்டு வந்தது.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அத்தகைய நிகழ்வுகள் 30 வருடமாகத் தடைப்பட்டிருந்தன.

தற்போது ஏற்பட்டுள்ள சுமூகமான சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு ''லேக்ஹவுஸ்'' நிறுவனம் எமது பாரம்பரிய நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்வந்துள்ளது.

இந்த நிகழ்வுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் தமிழர் தம் பாரம்பரிய நிகழ்வுகளான மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கோலாட்டம், சிந்துநடைக்கூத்து எனப் பல்வேறு கலை நிகழ்வுகளும் மாட்டுவண்டிச் சவாரி, கிளித்தட்டு எனப் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன என்றார்.

(04-9)

# பண்ணை மீனாட்சியம்மன் வீதியைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.7

பண்ணை மீனாட்சியம்மன் வீதியைப் புனரமைப்புச் செய்யும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

கடந்த பல வருடங்களாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு குண்டும் குழியுமாக இவ்வீதி காணப்பட்டது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனினும் தற்போது வீதி செப்பனிடப்படுவதால் இதுநாள் வரையும் நிலவி வந்த அசௌகரியங்கள் நீங்கும் எனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(04-244)

# மூன்றாம் காலண்டுக்குரிய மருந்து வகைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மூன்றாம் காலண்டுக்குரிய மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

இந்த மருந்து வகைகள் தரைப்பாதையூடாக வாகனங்கள் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இந்த மருந்து வகைகளை விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(04-224)

# அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஜயந்தி தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 7

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் 157ஆவது ஜயந்தி தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 5.30 மணிக்கு மங்கள ஆராத்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை நடைபெறும்.

அன்னை சாரதாதேவி பற்றிய மலர் வெளியீடும் இதன்போது இடம்பெறும். தொடர்ந்து தொண்டைமானாறுப் பிரதேசத்தில் உள்ள வயோதிபர் ஒருவருக்கு சுயதொழில் வாய்ப்புக்கு உதவி வழங்கல், சேவாச்சிரமத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவரின் வீட்டுக்கு மின்சாரம் வழங்கல், தையல் இயந்திரம் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(04-201)

# உர விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.7

மல்லாகம் விவசாயிகளுக்கான காலபோக நெற்செய்கைக்கான மூன்றாம் கட்ட மானிய உரவிநியோகம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சண்டிலிப்பாயில் அமைந்துள்ள கீரிமலை கமநலசேவை நிலையத்தில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

# வணிகர் கழகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.மாவட்ட இரும்பகம், கட்டட நிர்மாணம், வங்கி, மின்சாரம், பெயின்ற், குளிரூட்டல் சாதனம், மோட்டார் சைக்கிள், கார் மற்றும் இயந்திர சாதனங்கள் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக பிரதிநிதிகளுக்கும், கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள சர்வதேச வணிகர்கழக உயர்மட்டத் தூதுக்குழுவினருக்குமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் நடைபெறும்.

(ஒ-7)

# விபத்தில் சிக்கியவர் சனியன்று மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.7

நீர்வேலியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனளிக்காது நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அரச பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நீர்வேலி வடக்கைச் சேர்ந்த முத்தையா செல்வராசா (60 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஒ-7-78)

# ஆங்கில செயற்றிட்டம்

தென்மராட்சி, டிசெ.7

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் பண்டிதர் வேலுப்பிள்ளை நிதியத்தின் அனுசரணையுடனான ஆங்கிலச் செயற்றிட்ட ஆசிரியர்களை (தரம் 3) இன்று திங்கட்கிழமை வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் சந்திக்குமாறு ஆரம்பக் கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார்.

எட்டுவரையான கையேடுகளைப் பெற்றுக்கொள்ளவும். மதிப்பீடுகள் அறிக்கைகளை நிறைவு செய்யவுமே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# நாவலர் பெருமான் நல்லூரில் விரைவில் மக்கள் பார்வைக்கு முன்னுக்கு வருவார்!

நல்லூர், டிசெ.7

இது வரை காலமும் ஏனோ மறைந்து, ஒதுங்கி இருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மக்கள் கண்ணுக்குத் தெரியக் கூடியதாக வந்து அமரப்போகிறார்.

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்த பெருமைக்குரியவர் நாவலர் பெருமான். நல்லூரில் அவதரித்த அவருக்கு அப்பகுதியிலேயே மண்டபம் அமைத்து அங்கு திருவுருவச் சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

அந்தப் புண்ணியசீலரின் உருவச் சிலை தற்போது நாவலர் கலாசார மண்டபத்துக்குள் உள் புறத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலையை மண்டபத்தின் முன் புறத்தில், அதற்கான [illegible] கப்பட்டு அங்கு அவரது சிலை நிலை கொள்ள வைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எடுத்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் கலாசார விழுமியங்களை மேம்படுத்திவரும் ''கோயிதே இன்ஸ்ரியூட்'' (Goethe Institute) என்ற ஜேர்மன் அமைப்பு இதற்கு உதவும் எனவும் அந்த அமைப்பின் பணியாளரான றிச்சாட் லாங்குடன் இது விடயமாக இன்று திங்கட்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது எனவும் முதல்வர் உதயனுக்குத் தெரிவித்தார்.

முதல்வரின் இந்த நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது என்றும் அது நிறைவேறினால் பாராட்டுக்கு உரியது என்றும் [illegible] தெரிவிக்கின்றனர்.

(ஒ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கிரான் கடற்கரையில் படையினர் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி

மட்டக்களப்பு, டிசெ.7

கிரான் கடலோரம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் பலியானார், மற்றுமொருவர் முதலை கடித்தும் காயமடைந்து வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த கடலோரம், சந்தேகத்திற்கிடமான முறையில் வள்ளமொன்றுக்கு அருகில் சிலர் காணப்பட்டதாகவும் இராணுவத்தினரைக் கண்டு தப்பியோட முற்பட்ட வேளை, துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாகவும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலம் கல்லடி திருசெந்தூரைச் சேர்ந்த 22 வயதான கிறிஸ்டியன் ரொபின்சன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. கே.கணேசன் (32 வயது) என்பவர் தப்பியோட முயன்ற சமயம் நீரோடையொன்றில் விழுந்து முதலைக் கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றார். காயமடைந்த இரண்டாவது நபர் பாக்கியராசா ரமணன் (27 வயது) எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில் உழவு இயந்திரமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் வெளிச்சத்தை அணைத்தவாறு வருவதாக இராணுவத்தினருக்குத் தகவல் கிடைத்தது. அவற்றை இராணுவத்தினர் வழி மறித்தபோது அதில் வந்தவர்கள் தப்பி ஓடி விட்டனர். இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். உழவு இயந்திரத்தினைச் சோதனையிட்டபோது உயிர்காப்பு அங்கிகள், உலர் உணவுப் பொருள்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து அந்தப் பிரதேசத்தில் இராணுவத்தினர் தேடுதல் மேற்கொண்ட போது பற்றைக்குள் மறைந்திருந்த ஒருவர் இராணுவவீரர் ஒருவரின் துப்பாக்கியைப் பறிக்க முற்பட்ட போது அது வெடித்ததனால் அவர் உயிர் இழந்தார்- என்று தெரிவித்துள்ளார்.

படைவீரரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் தனது வீட்டினை 5 லட்சம் ரூபாவுக்குவிற்று வந்த பணத்தில் குறிப்பிட்ட ஒரு தொகையை கப்பல் முகவர் ஒருவருக்குக் கொடுத்து அவுஸ்திரேலியாவுக்குச் செல்லத் தயாராயிருந்தார், அவ்வாறே மற்றையவர்களும் பயணம் செய்வதற்கென முகவருக்குப் பணம் கொடுத்திருந்தனர். என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

# மீள்குடியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு இன்று

மீள்குடியமர்த்தப்பட்ட விவசாயிகளுக்கான நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வடமாகாண விவசாய, காணி, கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்வளத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்தறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தி னர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், திட்டமிடலாளரும் யாழ்.மாவட்ட இணைப்பாளருமான வி.செ.சுவாமிநாதன், விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராஜன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட 175 விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கையினை மீள ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்குடன் அவர்களுக்கு 50வீத மானிய அடிப்படையில் 110 'எட்னா' நீரிறைக்கும் இயந்திரங்களும் 65 'றொபின்' நீரிறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் விவசாய உற்பத்திகளின் பெறுமான அதிகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் மாதர் அமைப்புக்களை வலு வூட்டும் நோக்குடன் சாவகச்சேரி, கரவெட்டி, உரும்பிராய், வேலணை ஆகிய மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு 4 சிறியரக மாவரைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

(04-224)

## கூட்டம்

கோப்பாய்,டிசெ.7

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறுமென கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சித்திரவேல் அறிவித்துள்ளார்.

(201-72)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 • 4 • 1928



மறைவு
18 • 11 • 2008

**அமரர் கந்தையா இராசா**
50, டிஸ்பென்சரிலேன் சுன்னாகம்

அன்பான அப்பா!

எங்களுடன் வாழ்ந்த காலம் முழுவதும் எங்களுக்காகவே வாழ்ந்தீர்கள். உங்களுக்கென்று எதையும் செய்ததில்லை.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**Tel. No. 2810933**

## மரண அறிவித்தல்



**அரவமூர்த்தி தங்கவேல்**

(உரிமையாளர் - சந்திரா ஐஸ்கிறீம்)

சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட அரவமூர்த்தி தங்கவேல் (சந்திரா ஐஸ்கிறீம்) நேற்று (06.12.2009) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரவமூர்த்தி - உலோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தங்கவேல் செல்வவடிவுவின் அன்புக் கணவரும், நாகேந்திரன் (இந்தியா), மங்கையர்க்கரசி(இந்தியா), இரவீந்திரன், மங்களேஸ்வரி (இந்தியா), மகேஸ்வரி(இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகவல்லி, சுகிர்தலிங்கம், நமசிவாயம், செல்வராம் ஆகியோரின் அன்பு மாமனாரும், தினேஸ்வரன், மோனிகா, இந்துஜா, வேதராஜேஸ்வரன், தயாளேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2009) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: த.இரவீந்திரன் (மகன்)
சந்திரா ஐஸ்கிறீம்

(92920)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி-திக்கம்
**A/L 2010 Day**
கலைப்பிரிவு

ஆரம்பம் 07.12.2009 மு.ப.9

| | |
|---|---|
| Tam | : நந்தன் |
| H.C | : சீலன் |
| Log | : சிறிராம் |
| Geo | : ஜெராட் |
| Sat | : தவசேகர் |
| Eng | : ரஞ்சித் |

*** A/L Day**
வர்த்தகப் பிரிவு
ஆரம்பமாகிவிட்டது.
தரம் 3 - தரம் 11 வரை
ஆரம்பம்: 12.12.2009
மு.ப 9.00

## காணி விற்பனைக்கு

சப்பச்சி மாவடி, தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி எனும் இடத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: T.P: 0778025795 (92903)





**டயிடஸ் ஸ்ரோஸ்**
**2439422**

## தவறிவிட்டது

18, துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய க.மகாகணபதீஸ்வரக் குருக்கள் என்பவரது தே. அ.அட்டை (460470137V), வாகன சாரதிப்பத்திரம், மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் என்பன உள்ளடங்கிய கைப்பை ஒன்று யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாகத் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் அல்லது பின்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும்.

T.P: 021 222 5851 (92901)

## ★ மத்திய வங்கியின் வங்கி உதவியாளர் ★ போட்டிப் பரீட்சை வகுப்பு

திங்கள் முதல் வெள்ளிவரை பி.ப 2.30 மணி தொடக்கம் 5 மணி வரை.
ஆரம்பம்: இன்று (07.12.2009) திங்கள் 2.30மணி (92906)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக

## வாழ்த்துகின்றோம்

"வடமாகாணத்தில் கட்டுமான மற்றும் குடிசார் பொறியியல் துறையில் முதலாவதாக சர்வதேசதரச் சான்றிதழ் ISO - 9001:2008 பெற்ற EUROVILLE ENGINEERING & CONSTRUCTORS (PVT) LTD (யூரோவில் இன்ஜினியர்ஸ் அன்ட் கொன்ஸ்ரக்ரேஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனம் நிர்மாணத் துறையில் மேன்மேலும் பல சாதனைகளைப் படைத்து பல விருதுகள் பெற வாழ்த்துகின்றோம்."

வாழ்த்துவோர்:
ரேபோ குறூப் சிவில் இன்ஜினியறிங் கொன்ஸ்ரக்ஸன்
TURBO GROUP Civil Engineering construction
தவசிகுளம், கொடிகாமம். (92916)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
18 • 11 • 1951



விண்ணில்
08 • 11 • 2009

**திருமதி மேரிறூலியட் அருமைநாயகம்**

அன்னைக்கு அக அஞ்சலி

கல்லூரியில் கற்ற கல்வி, காற்றோடு கரைவதில்லை
அம்மா உங்களால் பெற்ற கல்வி அச்சுப் பிழையில் மறைவதில்லை
பல்கலைக்கழகம் வரை, செல்ல வழிகாட்டினீர்கள்
உயர்தரம் அனைவரும் கற்க உறுதுணையாய் இருந்தவர் நீங்கள்

பணமில்லை அதுவெதுவும் படிப்பிற்கு தடையில்லை என
எதுவொன்றும் செய்வீர்கள், கல்வியில் நாம் உயர்வடைய
கதை சொல்வீர் கருத்துடனே, பசிதீர்ப்பீர் அமுதருந்தாய்
வரலாறு பலவும் சொல்வீர்கள், வணங்க ஓர் இறையும் சொன்னீர்கள்

வன்னிக்கு இடம் பெயர, நோய் வந்து எமைசேர
மடு அன்னை வரம் கேட்டு, குணம் தந்த வைத்தியர் நீங்கள்
உமை சேர்ந்த புற்றுநோய், யாழ். மண்ணை தாக்காதிருந்திடவே வேண்டுவீர்
உமக்காய் நாம் வேண்டுகின்றோம் ஓரிறைவன் அவனிடம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (08.12.2009) செவ்வாய்க்கிழமை நடைபெறும் வழிபாட்டிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

அத்துடன் அன்னாரின் இறப்புச் செய்தி அறிந்து உடன் வந்து உதவியோர்களுக்கும், ஆறுதல் தந்த உறவினருக்கும் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டும், தொலைபேசி மூலமும் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்த குருக்கள், துறவியர்களுக்கும், இறுதி அஞ்சலி செலுத்திய யாழ்ப்பாணம் பல்கலைக்கழ கிறிஸ்தவ நாகரிகத்துறை தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்களிற்கும் மற்றும் அச்சுவேலி கார்மேல் கன்னியர் மட அருட்சகோதரியர்கள், மாணவர்கள் மற்றும் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் சுன்னாகம் யாழ்.இராமநாதன் கல்லூரி ஆசிரியர்கள், மாணவியர்களுக்கும் தொலைபேசி மூலமும், தபால் மூலமும் ஆறுதல் அளித்தவர்களிற்கும் மேலும் செப உதவி, பண உதவி, பொருளுதவி நல்கிய அனைத்து உள்ளங்களிற்கும் எம் மனமார நெகிழ நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஐயனார் வீதி, சுன்னாகம்.

அன்புடன்
குடும்பத்தினர்.

(இ/562979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கணிக்கப்படும் வீரர்களுக்கு உரிய வசதிகளை பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் முன்வருவார்களா?

**2009** ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத்துறையைப் பொறுத்த வரையில் சாதனை மிகுந்த ஆண்டாகவே நோக்கப்படுகின்றது. மாகாண மட்டம் தேசிய மட்டம் என நடைபெற்ற போட்டிகளில் பாடசாலை மாவட்ட அணிகளின் வீர வீராங்கனைகள் பங்கு பற்றி வெற்றி கொண்டதுடன் சாதனைகள் பலவற்றுக்கு சொந்தக்காரர்களாக வீறு நடை போடுகின்றனர்.

விளையாட்டுப் போட்டிகளில் பல வெற்றிகளைக் குவித்த நாயகர்கள் பல சோதனைகளுக்கு உள்ளாகியே இச்சாதனைகளைப் புரிந்தனர்.

சாதனைகள் பலவற்றை நிகழ்த்தும் போது சோதனைகள் பல அவற்றுக்குக் குறுக்காக நிற்பது இயற்கையே. ஆனால் இச்சோதனைகள்

> வீரர்களின் கருத்துக்கள் தொடர்பாக வடமாகாண விளையாட்டு அதிகாரி சத்தியபாலன் அவர்களை தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவர் நாட்டில் இல்லாததன் காரணமாக அவருடைய கருத்துக்களைப் பெற முடியவில்லை. இது தொடர்பாக ஏனைய அதிகாரிகள் கருத்துக்களை தெரிவிக்கும் பட்சத்தில் அதனை 'உதயன்' தயங்காமல் வெளியிடுவான்.

பல இவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டிய அதிகாரிகளினாலேயே ஏற்பட்டுள்ளன என்பது வேதனைக்குரியதே.

அண்மையில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றச் சென்ற வீரர்களுக்கு உரிய தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று வீரர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தவிர போட்டி நடைபெறும் மைதானங்களுக்கு அருகே எனைய வீரர்களுக்கு இடம் வழங்கப்பட்டதாகவும் யாழ். மாவட்டத்தின் வீரர்களுக்கு 2 கிலோ மீற்றர் அப்பால் அமைந்த இடத்திலேயே தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறான புறக்கணிப்புக்கு என்ன காரணம் என ஆராய்ந்த போது போட்டி நடைபெறுவதற்கு முன்னர் போட்டி ஏற்பாட்டாளர்கள் நடத்தும் கூட்டத்திற்கு உரிய அதிகாரிகள் சொல்லாமையினாலேயே இவ்வாறு தமக்கு அநீதிகள் இழைக்கப்படுவதாக பொறுப்பாசிரியர்கள் பலரும் கூறுகின்றனர். ஏனைய மாவட்ட, மாகாண அதிகாரிகள் போட்டி ஏற்பாட்டாளர்களால் நடத்தப்படும் சந்திப்புக்களில் பங்குபற்றி தமக்குத் தேவையான இடவசதியை பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் வடமாகாண, யாழ். மாவட்ட அதிகாரிகள் மட்டும் இச் சந்திப்புக்களில் கலந்து கொள்வதில்லை ஏன்? என்னும் கேள்வியை அதிகாரிகளிடம் விட்டுச் செல்கின்றோம்.

இப்புறக்கணிப்புப் பாடசாலை அணிகளுக்கு மாத்திரம் ஏற்படவில்லை. மாவட்ட அணிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அண்மையில் மாவட்ட அணியினர் பொலநறுவைக்குச் சென்றிருந்தனர். அங்கு போட்டிகள் நடைபெறும் மைதானத்தில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்திலேயே அவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும் ஆனால் அங்கு உறங்குவதற்கோ, குளிப்பதற்கோ அல்லது தமது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதற்கோ உரிய வசதிகள் இருக்கவில்லை என்றும், இதனால் தாம் குளிப்பதற்கு ஆற்றைநோக்கி செல்லவேண்டிய தேவைப்பாடு இருந்ததாகவும் வீரர்கள் கூறினர்.

தவிர பெண்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு உரிய வசதிகளற்ற நிலையிலேயே அங்கு தாம் போட்டிகளில் பங்கேற்றதாதகவும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதற்கு உரிய அதிகாரிகள் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களுக்கு செல்லாததாலேயே தமக்குரிய வசதிகள் கிடைக்காமல் போவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இவ்வாறான கூட்டங்களுக்கு அதிகாரிகள் செல்லாது விடுவதற்கான காரணத்தை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கோருகின்றனர்.

பாடசாலைகளின் அணிகள் பங்கு பற்றும் போட்டிகளில் விளையாடும் வீர வீராங்கனைகளின் வயதினை உறுதிப்படுத்துவதற்காக இரு அணிகளுக்கும் பொறுப்பானவர்கள் வீரர்களின் அடையாள அட்டையைப் பார்வையிடுவது வழமையாகும். ஆனால் யாழ். வீரர்களின் அடையாள அட்டையை பார்வையிடும் எதிரணியின் பொறுப்பாளர்கள் அவ்வணியினரின் அடையாள அட்டைகளை தாம் பார்வையி டுவதற்கு அனுமதிப்பதில்லையென பொறுப்பாசிரியர் ஒருவர் கூறுகின்றார். இது தொடர்பாக தாம் மேலதிகாரிகளுக்கு முறையிட்ட போதும் அவர்கள் எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்றும் கூறுகின்றார்.

வீரர்களுக்கான உணவு வழங்கப்படுகின்ற போதும் அதில் வீரர்களுக்குத் தேவையான போஷாக்கான உணவு வழங்கப்படுவதில்லை என்றும் அவ்வுணவை தாமே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைப்பாடும் காணப்படுவதாக கூறுகின்றனர். தவிர போட்டிகளுக்கான அட்டவணை தயாரிக்கும் போது அங்கு அனைத்து மாவட்ட அல்லது மாகாண அதிகாரிகள் பங்கேற்று போட்டிக்கான Bye வழங்கும் போது அது தொடர்பாகத் தமது கருத்துக்களை வழங்குவது வழக்கமாகும்.

ஆனால் வடமாகாண அல்லது யாழ். மாவட்ட அதிகாரிகள் இதில் பங்கேற்காததால் தமக்கான வாய்ப்புக்கள் பறிபோவதாகவும், வீரர்களும்



பொறுபாசிரியர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் இதற்கான அதிகாரிகள் இது தொடர்பான விடயங்களில் பங்குபற்றாதுடன் பாதிக்கப்படுபவர்களுக்கு உரிய பதிலும் வழங்காமல் தவிர்த்து வருகின்றனர். இக் காரணத்தினால் தாம் ஒரு நாளில் அதிக போட்டிகளில் விளையாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் கூறுகின்றனர். அண்மையில் நடைபெற்ற மைலோ கிண்ண உதைபந்தாட்டத்தில் பங்கு கொண்ட அணி ஒன்று ஒரு நாளில் தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் விளையாடியது குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்திற்கு அதிகாரிகள் பங்கேற்காததால் தாம் தொடர்ச்சியாக ஐந்து தடவைகள் மாகாண சம்பியன் பட்டத்தை தக்க வைத்த போதும் தேசிய ரீதியிலான போட்டியில் முதற்சுற்றிலேயே வெளியேற வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் குற்றஞ்சாட்டும் ஒரு பாடசாலை அணி அதற்கான காரணத்தைக் கூறும் போது ''தாம் போட்டிகளில் பங்கேற்க செல்வதற்கு சில நாள்களுக்கு முன்னரே தயாராக வேண்டிய நிலை உள்ளது. ஆனால் எமது பயணம் தூரமாக இருப்பதனால் நாம் முற்கூட்டியே பயணத்தை திட்டமிடுகின்றோம். இதற்காக எமக்குரிய பணம் சில நாள்களுக்கே ஒதுக்கப்படுகின்றது. கூடுதலான நாள்கள் குறிப்பாக ஒரு நாளேனும் தங்குவதானால் எமது சொந்தப் பணத்திலேயே செலவு செய்ய வேண்டியுள்ளது. இக் காரணத்தினால் நாம் போட்டிக்கு முதல் நாளே செல்லவேண்டியுள்ளதால் பயணக்களைப்புடன் எம்மால் விளையாட முடியாத நிலை ஏற்படுகின்றது. தவிர மோதுகின்ற அணியும் பலமான அணியாக இருப்பதனால் குறிப்பாக சம்பியன் பட்டத்தை வெல்லும் அணியுடனே பெரும்பாலும் முதல் போட்டிகள் அமைவதனால் நாம் தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது தொடர்பாக நாம் மேலதிகாரிகளுக்கு கூறினோம். ஆனால் அவர்கள் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.'' என்கிறார்.

அண்மையில் தேசிய ரீதியில் நடைபெற்ற குத்துச் சண்டைப்போட்டியொன்றில் யாழ். வீரர் ஒருவர் மூன்றாம் இடத்தைப் பெற்றிருந்தார். அவர் முதலிடத்தைப் பெறக்கூடிய நிலை இருந்தும் அங்கு கடமையாற்றிய நடுவர்கள் பக்கச்சார்பாக நடந்துகொண்டதாலேயே மூன்றாம் இடத்திற்கு அவர் தள்ளப்பட்டார் என்று தமது பெயர் குறிப்பிட விரும்பாத விளையாட்டு அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், போட்டியின் போது முதலிடத்தைப் பெற்றவர் மயங்கி வீழ்ந்திருந்த போதும் காயமடைந்திருந்த இவருக்கு மருத்துவர் போட்டியில் பங்கேற்க முடியாது என்று மருத்துவச் சான்றிதழை வழங்கியதனால் இவர் தமது சம்பியன் பட்டத்தை இழக்க நேர்ந்தது என்றும் கூறுகின்றார்.

பாடசாலை அணிகள் போட்டிகளில் பங்கேற்க செல்லும் போது அங்கு உள்ள பாடசாலைகளிலேயே பெரும்பாலும் தங்குகின்றனர். ஆனால் அங்குள்ள சில பாடசாலை அதிபர்கள் இவர்களை தங்க விடாது வேறு இடங்களுக்குச் செல்லுமாறு வற்புறுத்துவதாகவும் பாடசாலை அதிபர்கள் கூறுகின்றனர். யாழ். மாவட்டத்திற்கு விளையாடுவதற்காக வரும் வெளிமாவட்ட அணிகள் உட்பட யாழ். மாவட்டப்பாடசாலைகளிலேயே தங்குவது வழமை. அவர்களுக்கு உரிய வசதிகளையும் பாடசாலை அதிபர்களும் பாடசாலை சமூகத்தினரும் செய்து கொடுப்பது வழக்கம். ஆனால் வெளிமாவட்ட பாடசாலைகளின் அதிபர்களின் இவ்வாறான நடவடிக்கை வீரர்கள், ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

யாழ். மாவட்ட அணிகளுக்கான போட்டிகள் நடைபெறும்போது அதற்கான உரிய அறிவிப்பு தமக்கு உரிய கால அவகாசத்தில் கிடைப்பதில்லை என்றும் சில வேளைகளில் போட்டிக்கு முதல் நாளே கூட அறிவித்தல் கிடைப்பதாகவும் இதனால் தாம் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்படுவதாகவும்கூறுகின்றனர்.

குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கூட தாம்போட்டிக்கு ஒரு நாள் முன்னர் செல்லவேண்டிய நிலைஇருப்பதாகவும்போக்குவரத்து சீரற்ற காலத்தில் சந்தர்ப்பங்களை இழந்து தாம் தற்போதும் சந்தர்ப்பங்களை இழக்க வேண்டி ஏற்படுவதாகவும் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர் பாடசாலை அதிபர்கள்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக யுத்தம் நடைபெற்றது. இந்நிலையிலும் வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி நின்றனர். யுத்தம் முடிவுற்று தமது திறமைகளை மேலும் வெளிக்காட்டவும் பயிற்சிகளைப் பெறும் பொருட்டும் வெளிமாவட்டத்திற்கு குறிப்பாக கொழும்புக்குச் செல்லும் வீரர்கள் அங்கு இனத்தின் பெயரால் புறக்கணிக்கப்படுகின்றனர். இந்த நிலையை மாற்றி சகோதரத்துவத்தை ஏற்படுத்த வேண்டிய அதிகாரிகள் இந்நடவடிக்கையில் பாராமுகமாகவுள்ளனர்.

யுத்தத்தின் வெற்றியில் மூழ்கியுள்ள தென்னிலங்கைச் சமூகம் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தும் விளையாட்டுக்களில் கூட இனப்பாகுபாட்டைக் காட்டுவது என்பது கவலைக்குரிய விடயமே. ஆனால் புறக்கணிக்கப்படுகின்ற அணியினருக்கு உரிய வசதிவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய அதிகாரிகள் மௌனமாக இருப்பதால் சாதனை வீரர்கள் சோதனைகளுக்குள்ளாக வேண்டியிருக்கின்றது. இதற்குரிய தீர்வைப்பெற்று விளையாட்டின் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எனவே அதிகாரிகளே உங்கள் மௌனத்தைக் கலைத்து வீரர்களுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். இது உங்கள் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைமட்டுமல்ல;காலத்தின் கட்டாயமும் கூட.

★★★

-தமிழரசன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு** K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கு, துரை வீதிக்கு முன்பாக 100 யார் தொலைவில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0714747481, 0112441230 (92894)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1145 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 11 12 25 34

04-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 6,232,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,134 | 20/- | 4,302,680/- |
| 2 இலக்கங்கள் | 19,346 | 40/- | 773,840/- |
| 1 இல. + லக்கினம் | 19,560 | 60/- | 1,173,600/- |
| 2 இல. + லக்கினம் | 1,781 | 200/- | 356,200/- |
| 3 இலக்கங்கள் | 510 | 1000/- | 510,000/- |
| 3 இல. + லக்கினம் | 43 | 10,000/- | 430,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,232,200/- | - |
| மொத்தம் | | | 8,146,320/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 256,382 | | 8,646,320/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,718,975/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ரஞ்ஜன லால் நாணயக்கார தம்பகல்ல

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ரஞ்சனி மாயாதுன்ன மாலபே

2009 டிசெம்பர் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 500758516-3-06 |
| கம்பஹா | 500764516-4-19 |
| பதுளை | 500760771-5-20 |
| நுவரெலியா | 500773839-7-32 |
| குருநாகல் | 500759315-8-03 |

## மெய்வன்மைப் போட்டி

யாழ் [illegible] டிசெ.7

வலிகாமம் கல்வி [illegible] கல்விப் பிரிவிற்கான மெய்[illegible]ட்டி இன்று திங்கட்கிழமை கா[illegible]ரிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் க.சிவப்பிரகாசமும் சிறப்பு விருந்தினராக வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசனும் கலந்து கொள்வர். பரிசில்களைத் திருமதி சி.சர்வேஸ்வரி சிவப்பிரகாசம் வழங்கவுள்ளார். (201-16)

## நூல் வெளியீட்டு விழா

கோப்பாய், டிசெ.7

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர் கோபாலரெத்தினம் விஜே எழுதிய "நாடக எழுத்துருக்கள் - ஒரு பார்வை" நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பாடசாலை அதிபர் இ.இராஜசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி செல்வி தி.நல்லையா கலந்து கொள்வார். நூலின் வெளியீட்டுரையை விரிவுரையாளர் க.திலகநாதனும், வாழ்த்துரையை விரிவுரையாளர் இ.கமலநாதனும், ஆய்வுரையை உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி ஆசிரியர் க.கனகேஸ்வரனும் நிகழ்த்துவர். நூலின் முதற்பிரதியை பிரபல வர்த்தகர் சி.சண்முகானந்தன் பெற்றுக் கொள்வார். (201-72)

## மாணவர்களுக்கான பாராட்டு விழா

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதர் வித்தியாசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை அதிபர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (04-9)

## பாராட்டி வாழ்த்து



**Paranthaman Sasikumar**
BBA (Hons), MSc.(Hons),
Northumbria University

இன்று (07.12.2009) திங்கட்கிழமை ஐக்கிய இராச்சியத்தில் (UK) Northumbria Universityஇல் MSc.(Hons) பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளும் பரந்தாமன் சசிக்குமார் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்கள்,
*141, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்*

(C/562902)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 06 . 1945



மறைவு 18 . 11 . 2008

**அமரர் தம்பிஜயா சிறிஸ்கந்தராஜா**

*திதி:கார்த்திகை அபர பக்க சஷ்டி (07-12-2009)*

உள்ளத்தை எம்மிடம் தந்துவிட்டு
ஊமையாக உறங்குவதை எங்கள் மனம் ஏற்கவில்லை
எமை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
ஆருயிர் அணைந்து ஓர் ஆண்டு ஆனதே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

*85, மணிக்கூட்டுவீதி,*
*யாழ்ப்பாணம்.* (92845)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் மீண்டுமோர் உதயத்தின் ஒளிக்கீற்றாக விளங்கிய உயர் பொறிஞர் இரத்தினம் சர்வானந்தர் FI Mech.E.(London) அவர்களின் மறைவுக்காக மனம் நெகிழ்கின்றோம்.



தென்கிழக்கு ஆசியாவிலே சிறந்து விளங்கிய மிகப்பெரும் ஸ்தாபனமான மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை காலத்துக்குக் காலம் ஏற்பட்ட போர் அனர்த்தங்களாலும், பிற காரணங்களாலும் நலிவுற்று, மெலிவுற்று செயல் இழந்திருந்தபோது அதை நின்று நிலைத்து நிமிர வைப்பதற்காக அர்ப்பணிப்போடு பாடுபட்ட அன்பு உள்ளங்கள் பலவற்றில் அமரர் உயர்திரு.இரத்தினம் சர்வானந்தர் அவர்கள் மீண்டுமோர் உதயத்தின் ஒளிக்கீற்றாவார். இங்கிலாந்து நாட்டிலே மிகச்சிறந்த பொறியியலாளராக, ஆய்வாளராகக் கடமையாற்றிய அமரர் சர்வானந்தர் அவர்கள் 2005 இல் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையோடு மிக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தினார். அதற்கான காரணங்களிலொன்று அவருடைய மூதாதையரான அமரர் வைத்திய கலாநிதி K.கனகராயர் அவர்கள் வைத்தியசாலையின் ஸ்தாபக வைத்தியராவார். வைத்தியசாலையுடன் தொடர்பினை ஏற்படுத்திய அமரர் சர்வானந்தர் அவர்கள் தன்னுடைய தமையனார் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் அவர்களைக் கொண்டு தமது தந்தையார் உயர்திரு.சுப்பிரமணியம் இரத்தினம் (ஆசிரியர்) அவர்களின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட இரத்தினம் அறக்கட்டளை என்ற நிறுவனம் மூலம் பல வழிகளிலும் வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கு உதவி வந்தார்.

முதலில் கண்பார்வைக் குறைபாடுடையோரின் நலனுக்காக வைத்தியசாலையில் ஒரு பிரிவை ஏற்படுத்தி அதற்கு உதவ முன்வந்த அமரர் சர்வானந்தர் அவர்கள் பின்னர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வைத்தியசாலையில் நீரிழிவு நிலையத்தை நிறுவுவதற்கும்அதனைப் திறம்பட செயலாற்றவைக்கவும் அதன் செலவை இரத்தினம் அறக்கட்டளை நிறுவனம் மூலம் பெறுவதற்கும் உழைத்தவர். வைத்தியசாலையை நவீனமயப்படுத்தவேண்டும் என்பதற்காக பல கணனிக் கருவிகளையும் அன்பளிப்புச் செய்ததோடு வைத்தியசாலை ஊழியர்கள் கணனிஅறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்குக் கணனி அறிவைப் போதிக்க இரத்தினம் அறக்கட்டளை நிறுவனம் மூலம் நிதியுதவியும் பெற உழைத்தார். அடுத்து வைத்தியசாலையின் பிரபல்யம் மிக்க பிரசவ நிலையத்தினை அவதானித்த அமரர் சர்வானந்தர் அவர்கள் அங்கே இருக்கின்ற வசதிகள் போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்துகொண்டு அதனை காலத்திற்கேற்றவாறு நவீனமயப்படுத்துவதற்குத் தமையனாருடன் இணைந்து உதவிக்கொண்டிருந்தார். மேலும் வைத்தியசாலையிலே சிறந்த பயிற்சி பெற்ற தாதியர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத் தாதியர் பயிற்சி நெறி ஒன்றினையும் ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியதோடு தமையனாருடன் சேர்ந்து அதற்கான செலவீனங்களையும் இரத்தினம் அறக்கட்டளை பொறுப்பேற்க உழைத்தார்.

அது மட்டுமல்லாமல் இங்கிருந்து இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றிருந்த எமது வைத்தியசாலையின் தலைவர் அவர்களை வைத்தியசாலையின் நலன்விரும்பிகளுடனும், வைத்தியத்துறை சார்ந்தவர்களுடனும் கலந்துரையாடுவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து பல வழிகளிலும் அவர்கள் வைத்தியசாலைக்கு உதவுவதற்கான உத்தரவாதங்களைப் பெற்றுக் கொடுத்ததோடு, தானும் நாட்டின் சூழல் ஏற்புடையதாக இருக்கும் போது வைத்தியசாலைக்கு வந்து, அதன் அபிவிருத்திக்கு இயலுமான வரை உழைத்து, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை மீண்டும் மக்களுக்கு அளப்பெரும் சேவையாற்றுகின்ற நிறுவனமாக மாற்றுவதற்கு உதவுவேன் என்கின்ற காத்திரமானதோர் வாக்குறுதியோடு, வைத்தியசாலைக்கும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அன்பளிப்பு வழங்கி தலைவரை வழியனுப்பி வைத்தார்.

15.07.1944 இல் அவதரித்து கல்வித்துறைக்கும், வைத்தியத்துறைக்கும் அளப்பெரும் சேவையாற்றி 2005 இல் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையோடு உறவு கொண்டு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் மீண்டுமோர் உதயத்திற்காகப் பல பொது அமைப்புக்களோடும், தனது குடும்பத்தவர்களோடும் இணைந்து ஒரு காத்திரமான ஒளிக்கீற்றாகத் திகழ்ந்த அமரர் உயர்திரு.இரத்தினம் சர்வானந்தர் அவர்கள் எங்களுடைய எதிர்பார்ப்புக்கள் எல்லாம் தவியாய்த் தவிக்க 28.11.2009இல் அகாலமாகி எமது இதயவானை விட்டு மறைந்தார் என்ற செய்தி கேட்டுத் துடியாய்த் துடிதுடித்தோம். பண்பாளன், திறமைசாலி, சேவையாளன், உத்தமன் உயர்திரு.இரத்தினம் சர்வானந்தர் அவர்களுடைய மறைவிற்காய் மனம் நெகிழ்ந்து வருந்துவதோடு பெரியாருடைய ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும், ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர் சபை, ஊழியர்கள்,
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்.

*மூளாய், சுழிபுரம்.* (சி/562910)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**13.12.1985**

- ★ யாழ்ப்பாண நகரில் இராணுவத்தினர் திடீர் பாய்ச்சல்; துப்பாக்கிச்சூடு, குண்டு வெடிப்பு, இருவர் பலி
- ★ உருத்திரபுரத்தில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையின்பின் வயல்வெளியில் எட்டுப்பொதுமக்களின் சடலங்கள் மீட்பு
- ★ யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 'இன்ரசிற்றி' ரயிலில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது
- ★ தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலியின் தலைமையிலான குழு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த இந்திய அரசு ஏற்பாடு
- ★ ஜனாதிபதித் தேர்தலில் தனது 'கழுதை' சின்னத்தைக் கைவிட அமெரிக்க ஜனநாயகக் கட்சி திட்டமிட்டுவருகிறது

**14.12.1985**

- ★ வவுனியா மாவட்டத்தின் அகதி முகாம்களில் தங்கியுள்ளோரை வவுனியா நகரில் ஒரு முகாமில் தங்க வைக்குமாறு உதவி அரச அதிபர்களுக்குப் பணிப்பு
- ★ அமெரிக்க நகரமொன்றில் நடந்த மகாநாடொன்றில் இலங்கைக்கு புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம்
- ★ மட்டக்களப்பு ஆயித்திமலைப் பகுதியில் ஏழு அரச கட்டிடங்கள் குண்டுவைத்துத் தகர்ப்பு

**15.12.1985**

- ★ மட்டக்களப்பு தபால் நிலையம், கல்வித் திணைக்களம் இரண்டிலும் கொள்ளை
- ★ வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரவு நேர ரோந்துக்கும் திடீர் சோதனைக்கும் ஆயுதப் படையினருக்கு அனுமதி
- ★ நீர்கொழும்பில் பதற்றம்: தமிழர்களுக்கு அச்சுறுத்தல்
- ★ மூதூரில் உள்ள 6 ஆயிரம் அகதிகள் பசி, பட்டினியில்.

**16.12.1985**

- ★ தமிழ்க் குழுக்களை அழைத்து இந்தியா பேச்சு நடத்தும்
- ★ இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க பாகிஸ்தான் விருப்பம்
- ★ மகாதேவா தாம்போதி திறந்து வைப்பு

**17.12.1985**

- ★ வடக்கே குவிகிறது அரச படைபலம்
- ★ ஜே.ஆரைச் சந்தித்த கையோடு இந்தியத் தூதுவர் டிக்ஸ்ற் புதுடில்லி விரைவு
- ★ அரசியல் தீர்வு காண்பதே அரசின் நோக்கம் என அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு

**18.12.1985**

- ★ வலந்தலை பொன்னாலையில் துப்பாக்கிப் பிரயோகம். இருவர் மரணம்
- ★ தமிழர் தாயகத்தை துண்டுபோட நாம் அனுமதியோம்-கூட்டணி எம்பிக்கள்
- ★ கீரிமலையில் வீடுகள் தீ வைப்பு

**19.12.1985**

- ★ வடபகுதி ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதில் இழுபறிநிலை
- ★ கூட்டணியுடன் கொழும்பில் பேச அரசு விருப்பம்
- ★ திருகோணமலையில் அடிக்கடி தமிழர்களது வீடுகளில் கொள்ளைகள் இடம்பெறுவதாக பிரஜைகள் குழுவிடம் முறைப் பாடு

**20.12.1985**

- ★ சுவிற்ஸர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் இலங்கையில் அவர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்படும் அபாயம்

**21.12.1985**

- ★ விமானங்கள் தாழப் பறக்க கொழும்பகம் அரியாலையில் திவிர சண்டை
- ★ தமிழர்களுக்கு எதிரான அநீதிகள் நிறுத்தப்படும்வரை அரசுடன் பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாதென கூட்டணி முடிவு

**22.12.1985**

- ★ குடாநாட்டில் பரந்த அளவில் விமானத் தாக்குதல்
- ★ நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என ஜே.ஆர்.கருத்து
- ★ மட்டக்களப்பு நேற்று முற்றுகை; 500 பேர் கைது

**23,12.1985**

- ★ கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனைக்குப் பதிலாக சமஷ்டி அமைப்பை முன்வைக்க அரசு விருப்பம்
- ★ பளைக்கு அருகே பஸ் விபத்து-பத்தொன்பதுபேர் படுகாயம்
- ★ வெளியேறிய சிங்களக் குடும்பங்கள் திருகோணமலையில் மீண்டும் போதிய பாதுகாப்புடன் குடியமர்த்தப்படுவர்
- ★ வடக்குக்கு வர செஞ்சிலுவைச் சங்க அவதானிப்புக் குழுவை அனுமதிக்கக் கோரிக்கை

**24.12.1985**

- ★ சென்னையில் அன்ரன் பாலசிங்கத்தின் வீட்டுக்குக் குண்டுவீச்சு
- ★ போராளிகளுக்கு எதிராகப் பயன்படுத்த அரசு ஆறு நாடுகளில் இருந்து ஆயுதங்கள் கொள்வனவு
- ★ வடக்கு-கிழக்கை இணைக்கும் யோசனையை அரசு நிராகரித்து விட்டதாக லலித் அத்துலத்முதலி கருத்து

**25.12.1985**

- ★ இலங்கையில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது குறித்து முழு இந்தியாவும் கவலையடைவதாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு
- ★ பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக அதனைச் சூழ வாழும்பொது மக்களை வெளியேற உத்தரவு.
- ★ அரசு தாக்கினால் போராளிகளின் பதிலடி கடுமையாக இருக்கும் என மக்கள் கட்சித் தலைவர் விஜய குமாரணதுங்க தெரிவிப்பு.

**26.12.1985**

- ★ இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பும்வரை இந்திய வம்சாவளியினரை ஏற்றுக்கொள்வதில்லை என்ற ராஜீவ்காந்தியின் அறிவிப்புக்கு தமிழ்க் குழுக்கள் வரவேற்பு
- ★ கூட்டணி முன்வைத்த மாற்றுத் திட்ட யோசனைகளை வைத்து அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை.

**27.12.1985**

- ★ இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பது இந்தியாவின் கடமை என தமிழ்நாடு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் கருத்து
- ★ வடக்கு, கிழக்குக்கு வரும் உணவு, மருந்து லொறிகளை கடுமையாக சோதனையிடுமாறு படையினருக்கு அரசு உத்தரவு

**28.12.1985**

- ★ இலங்கையில் இடம்பெறும் கொலைகள் தொடர்பான ராஜீவின் கருத்தை இலங்கை அமைச்சரவை ஆராயும். அரசாங்க வட்டாரங்களுக்கு கடும் மனத் தாங்கலாம்.
- ★ சங்கிலியன் ராஜதானி அமைந்திருந்த இடத்தில் யாழ்.மாநகரசபை அலுவலகம் அமையும்.

**29.12.1985**

- ★ மட்டக்களப்பில் ஆயுதப்படை அத்துமீறல் நடத்தியதாக கண்காணிப்புக்குழு அறிக்கை
- ★ மன்னாரில் நேரடிச் சமர்

**30.12.1985**

- ★ இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க இந்தியா உதவுவது உறுதி. கடைசி நேரம் காங்கிரஸ் தீர்மானத்தில் இணைப்பு.
- ★ நிலாவெளியில் 19 பேர் சுட்டுக்கொலை
- ★ அவசர அவசரமாக 43 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்க இலங்கை அரசு ஏற்பாடு

**31.12.1985**

- ★ இனப்பிரச்சினை தொடர்பாக ஆலோசிக்க பிரதிநிதியொருவரை அனுப்புமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கைக்கு இந்தியா நிபந்தனை விதிப்பு
- ★ கிழக்கில் கைதான 168 தமிழர்கள் பற்றிய தகவல் எதுவும் தெரியாதுள்ளதாக கண்காணிப்புக்குழு விசனம் தெரிவிப்பு.
- ★ புலி வாலைத் தொட்டுவிட்டோம்; இனி கழுத்தையும் [illegible] தேசிய பாதுகாப்பு [illegible] முதலி தெரிவிப்பு

# கேதீஸ்வர புனருத்தாரணப் பணிகளுக்கு இந்திய சிற்பாசாரியர்கள் வருவர்

## இந்து மாமன்றக் குழுவிடம் பஸில் உறுதிமொழி

கொழும்பு, டிசெ.7

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இந்தியாவில் இருந்து சிற்பாசாரியர்களை அழைத்துவர இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்வதாக அரசு உறுதி தெரிவித்துள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த உறுதிமொழி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று இலங்கை இந்து மாமன்றப் பிரதிநிதிகள் குழு கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை அலரி மாளிகையில் அவரைச் சந்தித்தது. நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவும் இச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மன்றப் பிரதிநிதிகள் குழுவால் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. குழுவில் சென்றிருந்த இந்து மாமன்றத் தலைவரும் திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவல் சபைத் தலைவருமான வி.கயிலாசபிள்ளை திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு மாமல்லபுரத்திலிருந்து சிற்பக்கட்டடத் தூண்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அவற்றை நிறுவுவதற்குப் பொருத்தமான சிற்பாசாரியர்களின் சேவையைப் பெற முடியவில்லை என்றும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சிற்பாசாரியர்களை அங்கிருந்து அழைத்து வந்து திருக்கேதீஸ்வர ஆலயத்தில் புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்து தரும்படியும் கேட்டார். இது தொடர்பாக இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக பஸில் ராஜபக்ஷ உறுதிமொழி வழங்கினார்.

திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குச் செல்லும்போக்குவரத்துப் பாதையையும் ஆலய சூழலையும் சீர்திருத்தி அமைத்துத் தருவதாகவும் சிவராத்திரி வைபவத்துக்கு முன்பதாக திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் அவர் வாக்குறுதி அளித்தார்.

அடுத்த வருடம் சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறவுள்ள பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளவதற்கு தமிழ் நாடு பக்தர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதை மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் பஸிலின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி வசதிகளை வழங்கும் வகையில் யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் விடுதிகளை அமைத்து அவர்களை அங்கு தங்கவைத்து பராமரிப்பதற்கான ஏற்பாடுகளை மனித நேய நிதியமும் இந்து மாமன்றமும் செய்து வருவது பற்றி மாமன்றப் பிரதிநிதிகள் குழுவால் எடுத்துச்சொல்லப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகம் மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதன் அவசியத்தை வலியுறுத்தியபோது, இது விடயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

மாமன்றப் பிரதிநிதிகள் குழுவில் வி.கயிலாயபிள்ளை, கந்தையா நீலண்டன், மா.தவயோகராஜா, மு.கதிர்காமநாதன், வே.கந்தசாமி, திருமதி அ.கயிலாயபிள்ளை, சி.தனபாலா, எஸ்.ரி.எஸ். அருளானந்தன், எஸ்.பி.சாமி, உதவிச் செயலாளர் ந.கார்திகேயன், மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர் ந.மன்மதமராஜன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (ஒ-1)

# வாகனம் மோதியதில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ.7

வீதியில் மிதிவண்டியில் சென்ற இளைஞரை அவ்வழியே வேகமாக வந்த வாகனம் மோதித் தள்ளி விட்டு தப்பிச் சென்றது.

இச்சம்பவம் கடந்த 4ஆம் திகதி கெற்பேலியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பெரிய மாவடியைச் சேர்ந்த கனகசபை சசிக்குமார் (வயது-23) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (50-207)

# யாழ். -கைதடி இ.போ.ச. பஸ் சேவை சீரின்மையால் மாணவர்கள் அவதி

கைதடி, டிசெ.7

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் யாழ்ப்பாணத்திலிருந்து கைதடிப் பிரதேசத்திற்கென நடத்தப்படும் பஸ்சேவை ஒழுங்கின்மையால் பொதுமக்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் காலை நேரத்தில் உரிய நேரத்திற்கு வராது நின்று விடுவதனால் பாடசாலைக்குச் செல்லவெனத் தயாராக நிற்கும் மாணவர்கள் நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்புவதாகவும், வைத்தியசாலை மற்றும் அரச வேலைத்தலங்களுக்குச் செல்பவர்களும் இவ்வாறு பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகப் பல தடவைகள் போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு முறையிட்டபோதும் அவர்கள் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பொதுமக்களும், மாணவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களதும் மாணவர்களதும் நலனைக் கருத்திற்கொண்டு இப்போக்குவரத்துச் சேவையைச் சீர்செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (50-288)

# வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இதுவரை 17 குளங்கள் புனரமைப்பு

## கமநல உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.7

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தில் உள்ள குளங்களைப் புனரமைக்கும் வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் இதுவரை 17 குளங்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதில் சங்கானை நாவியசுட்டகுளம், பொன்னகுளம், நாவற்குழி கோப்பயன் கிராமகுளம், சாவகச்சேரி இவ்வாரை குளம், வாதரவத்தையில் வாதரவத்தைக்குளம், நீர்வேலி நல்ல தண்ணீர் குளம், வேலணை முந்தாய்குளம், புங்குடுதீவு [illegible]குளம், அனலைதீவு [illegible]குளம், நாரந்தனை துலாவில் குளம், சண்டிலிப்பாய் வேடுவன்குளம், நெடுந்தீவு பெரியகள்ளிக்குளம், காரைநகர் மாவட்ட குளம், காரை நகரில் காரைநகர் பெரியகுளம், குடத்தனை கீரிக்கோட்டு குளம், கரவெட்டி பெரியகிராய் குளம், கரவெட்டி தில்லையம்பலக்குளம் ஆகிய 17 குளங்களின் புனரமைப்புப் பணிகள் தற்போது நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நெடுந்தீவு சின்னவெட்டுகளிக்குளம், சண்டிலிப்பாய் தவட்டைக்குளம், குடத்தனை சாளம்பன் குளம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பிரதேச விவசாய சம்மேளனங்கள் ஊடாக இடம்பெயர்ந்து வரும் இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கென 26.9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இவ்வருடம் இறுதிக்குள் வேலைத் திட்டங்கள் யாவும் நிறைவு பெறவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# இறுதி மாதிரி வினாத்தாள்கள்

## தொகுதி II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I

**34-T-I**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. உணர்திறன் காணப்படுவது,
    1) உயிர் வாழ்வனவற்றில் மாத்திரம். 2) தாவரங்களில் மாத்திரம்.
    3) விலங்குகளில் மாத்திரம்.
    4) நரம்புத் தொகுதியையுடைய விலங்குகளில் மாத்திரம்.

02. பின்வருவனவற்றுள் எது ஓர் இளம் பன்னத் தாவரத்தைத் தரவல்லது?
    1) வித்து. 2) வித்தி.
    3) கருக்கட்டிய முட்டை. 4) புணரி.

03. மூளையின் பின்வரும் பகுதிகளுள் எது உட்கொள்வதையும் வாந்தியெடுப்பதையும் ஒழுங்குபடுத்துகின்றது?
    1) மூளையம். 2) மூளி.
    3) நீள்வளையமையவிழையம். 4) பரிவகக்கீழ்.

04. பின்வரும் எச்செயற்பாட்டின் மூலம் முலையூட்டிகளின் சிறுநீரகங்களிலே, நாடிக் குருதிகளிலிருந்து நீரானது போமனினுறையினுள்ளே செல்லுகின்றது?
    1) பரவல். 2) வடிகட்டல்.
    3) பிரசாரணம். 4) அகத்துறிஞ்சல்.

05. தாவரங்கள் மண்ணிலிருந்து பின்வருவனவற்றுள் எதனை உறிஞ்சுகின்றன?
    1) சுயாதீன நீர் 2) பருகு நீர்
    3) மயிரிழை நீர் 4) சுயாதீன நீரும், மயிரிழை நீரும்

06. A+B → C+D எனும் தாக்கத்துக்கு தாக்கசக்தியும், தாக்கவெப்பமும் முறையே -10KJ, 4KJ ஆகும். C+D→A+B என்பதற்கு தாக்கச்சக்தியும், தாக்க வெப்பமும் முறையே (KJஇல்)
    1) 4,6. 2) 4,10. 3) -4,10. 4) 6,14.

07.


| அணு | A | B | C | D |
|---|---|---|---|---|
| நேரேற்றம் கொண்ட துணிக்கை | 20 | 21 | 21 | 22 |
| ஏற்றமற்ற துணிக்கை | 21 | 20 | 22 | 21 |


மேலே தரப்பட்ட அணுக்கள் (A,B,C,D) என்பவற்றில் எவை சமதானிகள்?
1) A,B 2) B,C 3) C,D 4) A,D

08. பின்வரும் சேர்வைகளுள் எது நிறைப்படி நைதரசனின் ஆகவும்கூடிய நூற்று வீதத்தைக் கொண்டிருக்கும்? (H=1, C=12, N=14, O=16)
    1) $NH_3$ 2) $(NH_4)_2SO_4$
    3) $(NH_4)_2SO_4$ 4) $N_2O_4$

09. பின்வரும் கரைசல்களில் எது ஆகவும் கூடிய PH பெறுமானத்தைக் கொண்டிருக்கும்?
    1) பொற்றாசியம்சல்பேற்று. 2) சோடியம் அசற்றேற்று.
    3) அமோனியங்குளோரைட்டு. 4) செப்புநைத்திரேற்று

10. ஓர் இரும்பு ஆணி துருப்பிடிப்பதற்கு ஈரப்பற்று அவசியமா என்பதை அறிவதற்கு மாணவன் ஒருவன் அருகிலுள்ள பரிசோதனை அமைப்பைப் பயன்படுத்தினான். இதன் பொருட்டு கட்டுப்பாட்டு பரிசோதனை ஒன்றும் அவசியம் என்று அவனுடைய நண்பன் ஒருவன் கூறினான். பின்வருவனவற்றுள் எந்த பரிசோதனை அமைப்பு சிறந்த கட்டுப்பாட்டு அமைப்பாகப் பயன்படும்?






11. பின்வரும் கணியங்களுள் எதன் அலகு Ns ஆகும்?
    1) விசை. 2) அமுக்கம். 3) உந்தம். 4) வலு.

12. AD எனும் நீளமான ஒரு சட்டக்காந்தத்தை அதன் மையத்தில் வெட்டுவதன் மூலம் AB,CD எனும் குறுகிய இரு சட்டக்காந்தங்கள் பெறப்பட்டன. AD யில் முனை A ஆனது ஒருவடமுனைவு எனில், B,C எனும் முனைகள் முறையே,
    1) தெற்கும் தெற்கும் ஆகும். 2) தெற்கும் வடக்கும் ஆகும்.
    3) வடக்கும் தெற்கும் ஆகும். 4) வடக்கும் வடக்கும் ஆகும்.

13. நேர்க்கோடொன்றிலே இயங்கிய துரொல்லி ஒன்றினால் உண்டாக்கப்பட்ட திக்கொலிநாடா பின்வருமாறு உள்ளது. ஆரம்பத்திலே, நாடாவின் முனை A ஆனது அதிரியிலிருந்தது,



துரொல்லியின் இயக்கத்தைச் சரியாகக் குறிக்கும் பெயர்ச்சி (S) - நேர(t) வரைபு எது?





14. 0.016kg திணிவுடைய அலுமினியத்துண்டொன்று, 855 $Kgm^{-3}$ அடர்த்தியுடைய திரவமொன்றிலே முற்றாக அமிழ்த்தப்பட்டுள்ளது. அலுமினியத்தின் அடர்த்தி 2300 $Kgm^{-3}$ எனின், அதன் மேல் செயற்படும் மேலுதைப்பானது கிலோகிராம் நிறையில்,
    1) $\frac{0.016}{2300} \times 855$ 2) $\frac{2300}{0.016} \times 855$
    3) $\frac{0.016}{2300} \times \frac{1}{855}$ 4) $0.016 \times 2300 \times 855$

15. மாறா வெப்பநிலையில் நிலையான திணிவுடைய வாயுவொன்றின் அமுக்கம் P உம் கனவளவு V உம் ஆகும். பின்வரும் வரைப்படங்களிலே எது ஒரு நேர்கோடாய் இராது?
    1) p எதிர் 1/v 2) p எதிர் v 3) 1/p எதிர் v 4) pv எதிர் v

16. பின்வரும் ஊடகங்களுள் எதிலே ஒலியானது அதிவிரைவாகச் செல்லும்?
    1) வளி. 2) ரெஜிபோம். 3) இரும்பு. 4) நீர்.

17. பொன்னிலை மின்காட்டியொன்றைத் தூண்டல் மூலம் மின்னேற்றும் கட்டங்கள் நான்கு காட்டப்பட்டுள்ளன.




    1) A,B,C,D 2) A,C,B,D 3) B,A,C,D 4) A,C,B,D.

18. மனிதனில் ஓர் அங்கத்தில் ஆரம்பித்து இன்னோர் அங்கத்தில் முடிவடையும் இதயம் தவிர்ந்த குருதிக்கலன் ஒன்றைப் பெயரிடுக.
    1) சுவாச நாளம். 2) ஈரல் வாயில் நாளம்.
    3) பிற்பெரு நாளம். 4) சிறுநீரக நாளம்.

19. சீமெந்தைத் தயாரிக்கப் பயன்படுகின்ற பிரதான மூலப்பொருள்கள் யாவை?
    1) சுண்ணக்கல், படிகம். 2) சுண்ணக்கல், களிமண்.
    3) களிமண், உறைகளிக்கல். 4) சுண்ணக்கல், உறைகளிகல்.

20. பின்வரும் நோய்களுள் எது ஒரு பற்றீரியா இனத்தினால் ஏற்படுத்தப்படுகின்றது?
    1) சிறு பிள்ளை வாதம். 2) மலேரியா.
    3) நீர்வெறுப்பு நோய். 4) தைபோயிட் காய்ச்சல்.

21. மனித உடலிற் பின்வரும் எந்த ஓர் அங்கத் தொகுதியில் பிசிர்க்கலங்கள் மிகவும் பிரதானமான ஒரு தொழிற்பாட்டினைச் செய்யும்?
    1) சுவாசத் தொகுதி. 2) கழிவுத் தொகுதி.
    3) சமிபாட்டுத் தொகுதி. 4) சுற்றோட்டத் தொகுதி.

22. பின்வருவனவற்றுள் எது கூர்ப்பிற்கு அநேகமாக மிகவும் குறைந்தளவு செல்வாக்கை உடையதாக இருக்கும்?
    1) விகாரம் நிகழ்தல். 2) விகாரத்தின் தலைமுறையுரிமை.
    3) சூழல் நிலைமைகளின் பொருட்டான இசைவாக்கம்.
    4) தனிமையாக்கல்.


23. x,y,z என்பன மூன்று நிக்குரோம் கம்பிகள் ஆகும். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| கம்பி | நீளம் (cm) | வெட்டுமுகப்பரப்பு ($mm^2$) |
|---|---|---|
| x | 10 | 10 |
| y | 20 | 10 |
| z | 10 | 20 |

கம்பிகளின் தடைகளை ஏறுவரிசையில் ஒழுங்கு செய்தால் பெறப்படும் ஒழுங்கு,
1) y,x,z 2) x,z,y 3) z,y,x 4) z,x,y


24. பின்வரும் எத்தாக்கத்தின் தாக்கவீதம், அமுக்கத்தைக் கூட்டுவதனால் கூடமாட்டாது,
    1) $N_2 + 3H_2 \rightarrow 2NH_3$ 2) $2SO_2 + O_2 \rightarrow 2SO_3$
    3) $Cl_2 + H_2 \rightarrow 2HCl$ 4) $NO_2 + NO_2 \rightarrow N_2O_4$

25.




படத்திலே காட்டிய மூன்று மின்சுற்றுக்கள் அமைக்கப்பட்டால் எம் மின்சுற்றுக்களில் உள்ள மின்குமிழ்கள் தொடர்ந்து ஒளிரும்,
1) Aயும் Bயும். 2) Aயும் Cயும்.
3) Bயும் Cயும். 4) Aயும் Bயும் Cயும்.


26. இரசாயனத் தாக்கம் ஒன்று நடைபெறுவதற்கு 20g ஊக்கி தேவைப்பட்டது. அவ்வாறு தாக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் குறித்த நேர இடைவெளிகளில் ஊக்கியின் திணிவு (y அச்சில்) நேர (x அச்சில்) வரைபு வரையப்பட்டால் அவ் வரைபு பின்வருவனவற்றில் எது போல அமையும்?




27. மருத்துவ வசதிகள் அற்ற ஒரு கிராமத்தில் நோயினால் அவதிப்பட்ட ஒருவருக்கு அக்கிராம விவசாயி ஒருவர் சில பூண்டுகளின் சாறைப் பிழிந்து குடிக்கக் கொடுத்தார். சில நாட்களின் பின் அந்நோயாளி குணமடைந்தார். இந் நிகழ்ச்சி பற்றி பின்வரும் கூற்றுக்களில் எது நியாயமானது எனக் கருதுகிறீர்?
    1) பூண்டுகளின் சாறினால்தான் நோயாளி குணமடைந்தார் என நிச்சயமாகக் கூற முடியாது.
    2) பூண்டுகளின் சாறுகள் நோயைத் தீர்க்கும்.
    3) மருத்துவ வசதிகள் அற்ற கிராமத்தில் உள்ள நோயாளிகள் கிராம விவசாயிகளிடம் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.
    4) கிராம விவசாயிகள் எப்போதும் பூண்டுகள் மருத்துவப் பெறுமதியை அறிந்திருப்பர்.

28. சமிபாட்டுத் தொழிற்பாடு பற்றிய மூன்று மாணவர்களின் கருத்துக்கள்,
    A சிக்கலான பெரிய மூலக்கூறுகள் சிறிய மூலக்கூறுகள் ஆக்கப்படுகின்றன.
    B நீரில் கரையாத மூலக்கூறுகள் நீரில் கரையக்கூடிய மூலக்கூறுகளாக ஆக்கப்படுகின்றன.
    C நொதியங்களின் உதவியுடன் நடைபெறும் ஓர் இரசாயன மாற்றமாகும். இவற்றுள் சரியானவை.
    1) A மட்டும். 2) B மட்டும்.
    3) C மட்டும். 4) A,B,C மூன்றும்.

29. மேற்படி அமைப்பில் சில மணிநேரத்தின் பின் அவதானிக்கக்கூடியது,
    1) பொட்டலத்தில் உள்ள அயடீன் கரைசல் நீலமாகி இருக்கும்.
    2) பாத்திரத்தில் உள்ள மாக்கரைசல் நீலமாகி இருக்கும்.
    3) இரு கரைசல்களும் நீலமாகி இருக்கும்.
    4) மாற்றம் ஏதும் நடைபெற்று இருக்காது.




30. மானிடப் பெண்ணின் இனப்பெருக்கல் செயற்பாட்டுடன் தொடர்பற்ற ஓமோன் எது?
    1) ஈஸ்திரோஜன். 2) FSH
    3) ஒக்சிரோசின். 4) தெஸ்தெஸ்திரோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 ஆம்பக்கம் பார்க்கவும்

# விஞ்ஞானம் I - தொடர்ச்சி....

31. வீட்டு மின்சுற்று ஒன்றில் உயிர்க்கம்பி,நொதுமற்கம்பி, புவிக்ககம்பி ஆகிய மூன்றும் இணைக்கப்பட்டிருக்கும் பகுதி,
    1) பிரதான ஆளி. 2) மின்மணி.
    3) தடக்கு ஆளி. 4) பரம்பற்பெட்டி.

32. எரிசோடா தயாரிப்பின்போது வெளிவிடப்படும் பக்கவிளைபொருள் ஒன்றையும் , சுண்ணாம்புச் சூளையின் பிரதான விளைபொருளொன்றையும் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இரசாயனக் கைத்தொழில்,
    1) மேசையுப்பு. 2) சவர்க்காரம்.
    3) கடதாசி. 4) வெளிற்றும் தூள்.

33. படத்தில் காட்டப்பட்டிருப்பது ஓர் இலத்திரனியற்சுற்றில் பயன்படும் கூறு ஆகும். இது குறிப்பது பற்றிய சிறந்த கூற்று,
    1) இருவாயி; A → + ; B → -
    2) இருவாயி; A → - ; B → +
    3) ஒளிகாலும் இருவாயி; A → + ; B → -
    4) ஒளிகாலும் இருவாயி; A → - ; B → +





34. கந்தகத்தைக் கரைக்கக்கூடிய முனைவற்ற அசேதனக் கரைப்பான்,
    1) $H_2O$ 2) $C_6H_6$ 3) $CS_2$ 4) $CHCl_3$

35. சுவாலைக்கு ஊதா நிறத்தைக் கொடுக்கும் உலோகம் எது?
    1) இலிதியம். 2) கல்சியம். 3) பொற்றாசியம். 4) அலுமினியம்.


36. பின்னவல யானைகள் சரணாலயம் எவ்வகைக்குரியது?
    1) உள்நிலைக்காப்பு. 2) வெளிநிலைக்காப்பு.
    3) பொதுவானகாப்பு 4) ஒன்றும் கூறமுடியாது.

37. பின்வருவனவற்றில் எத்தொகுதி விசைகள் "O" என்னும் புள்ளிப் பொருளைச் சமநிலையில் வைத்திருக்கும்,





    1) Aயும் Cயும். 2) Bயும் Dயும். 3) Aயும் Dயும். 4) Bயும் Cயும்.

38. W நியூற்றன் நிறையுடைய மரக்குற்றியொன்று சாய்வான பலகை மீது நிலையாய் உள்ளது. குற்றி மீது தாக்கும் விசைகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் எவை செவ்வன் மறுதாக்கத்தையும் உராய்வு விசையையும் குறிக்கின்றன,
    1) Bயும் A யும். 2) Bயும் Dயும்.
    3) Cயும் Aயும். 4) Cயும் Dயும்.




39. தைனமோக்களில் தூண்டப்படும் மி.இ.வி நேரத்துடன் மாறும் விதத்தைக் காட்டும் படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து நாம் அறியக்கூடியது,




    1) A ஆடலோட்டத் தைனமோ, CDE ஒரு முழுச்சுற்று. B நேரோட்டத் தைனமோ, FGH ஒரு முழுச்சுற்று.
    2) A ஆடலோட்டத் தைனமோ, CDE ஒரு அரைச்சுற்று. B நேரோட்டத் தைனமோ, FGH ஒரு அரைச்சுற்று.
    3) A நேரோட்டத் தைனமோ, CDE ஒரு முழுச்சுற்று. B ஆடலோட்டத் தைனமோ, FGH ஓர் அரைச்சுற்று.
    4) A நேரோட்டத் தைனமோ, CDE ஒரு முழுச்சுற்று. B ஆடலோட்டத் தைனமோ, FGH ஒரு முழுச்சுற்று.

40. "பஞ்சிகாவத்தையில் காணப்படும் ஒரே வகையான பெரிய நுளம்புகள் ஓர் அங்குலம் வரை நீளமுள்ளது. இதன் குடம்பிகள் அனொபிலிஸ், கியூலாக்ஸ் நுளம்புகளின் குடம்பிகளைப் பிடித்து உண்கின்றன." இது செய்தியாகும். இது தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எதனை நீர் ஏற்றுக்கொள்கிறீர்?
    1) இதனை நிச்சயமாக உயிரியற் கட்டுப்பாட்டு முறைக்கு பயன்படுத்தலாம்.
    2) மற்றைய வகையை அழித்தாலும் இது தீங்கு பயக்கும்.
    3) இந் நுளம்பு பெரியதாகையால் இதன் தாக்குதலில் இருந்து எளிதில் எம்மைப் பாதுகாக்கலாம்.
    4) இந் நுளம்பு பற்றிய வேறு தகவல்கள் தெரியாது எனில், இது நன்மை பயக்கும் எனக் கூறமுடியாது.


# விஞ்ஞானம் - II

**34-T-II**

### பகுதி A - அமைப்புக்கட்டுரை வினாக்கள்


*** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. மனித உடற்தொகுதி ஒன்றின் முக்கிய பகுதி தரப்பட்டுள்ளது.
    1) பின்வரும் பகுதிகளைப் பெயரிடுக.
       A - ..............................
       B - ..............................
       C - ..............................
       D - ..............................
       E - ..............................





    2) B குறிக்கும் பகுதியில் உள்ள பாதுகாப்புப் பகுதிகளைப் பெயரிடுக.
    ..............................
    3) C இன் ஆக்கக்கூறு எது? ..............................
    4) E இல் காணப்படும் திரவத்தைப் பெயரிடுக. ..............................
    5) தரப்பட்ட பகுதியுடன் தொடர்பான முக்கிய செயற்பாட்டினைப் பெயரிடுக.
    ..............................
    6) பகுதி 5 இல் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டுடன் தொடர்பான கணத்தாக்கப் பாதையை ஒழுங்காக எழுதுக. ..............................
    7) மனித நரம்பினூடாக கணத்தாக்கம் செல்லும் முறையைப் பெயரிடுக.
    ..............................
    8) நரம்பிணைப்பு என்பதனை விளக்கி இதனூடாக கணத்தாக்கம் எவ்வாறு செல்கிறது என விளக்குக.
    ..............................

02. ஒருவன் நேர்கோட்டுப் பாதையில் வடக்கு நோக்கி சென்று தன் வீட்டை அடைந்து உடனடியாக அதே பாதையில் உள்ள கடைக்குச் சென்றான். அவனது பயணத்திற்கான இடப்பெயர்ச்சி (km) நேர (நிமிடம்) வரைபு தரப்பட்டுள்ளது.




    1) வடக்கு நோக்கிய இயக்கத்தின் வேகத்தை கிலோ மீற்றருக்கு மணி எனும் அலகில் காண்க.
    2) அவனது இறுதி நிலையை புறப்பட்ட இடத்தில் இருந்து தருக. ..............................
    3) மேற்படி இயக்கத்திற்குப் பொருத்தமான வேக-நேர வரைபை வரைக.
    4) 5(kg) திணிவுடைய பொருளை $10ms^{-2}$ எனும் ஆர்முடுகலுடன் இயங்கச்செய்ய பிரயோகிக்கவேண்டிய விசையின் அளவு யாது?
    ..............................
    5) தாக்கத்திற்குரிய மறுதாக்கம் உண்டெனக் காட்டக்கூடிய அன்றாட வாழ்வின் இரு சந்தர்ப்பங்கள் தருக. ..............................
    6) பொறிகளிலும், உபகரணங்களிலும் உராய்வு விசையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இரண்டு தருக.
    ..............................

03. சோடியம் குளோரைட்டுக் கரைசலின் மின்பகுப்புக்கான உபகரணத்தைப் படம் காட்டுகிறது.




    1) மின்பகுப்பு என்பதனை விளக்குக.
    ..............................
    2) இவ்வமைப்பில் அனோட்டாகத் தொழிற்படும் மின்வாய் எது?
    ..............................
    3) 'U' குழாயின் வாயில்கள் x, y இனூடாக வெளியேறும் வாயுக்களைத் தருக.
    ..............................
    4) மென்சிவப்பு நிறம் எப்பகுதியில் காணப்படும் என எதிர்பார்க்கின்றீர்?
    ..............................
    5) உமது விடைக்கான காரணத்தைக் கூறுக.
    ..............................
    6) 'U' குழாயின் மத்தியில் பஞ்சு வைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் யாது?
    ..............................
    7) 'B' பகுதியில் இருந்து வெளியேறும் வாயுவின் உபயோகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. ..............................
    8) அ. சவர்க்காரம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களில் ஒன்று எப்பகுதிகளில் உருவாகிறது?
    ..............................
    ஆ. சவர்க்காரத்தின் மூலக்கூறு ——○. எனும் குறியீட்டினால் குறிக்கப்படுகிறது. இதில் தலை, வால் பகுதிகள் எதனைக் குறிக்கின்றன?
    ..............................

04. 01) சூழல்தொகுதி என்பதனை விளக்குக.
    ..............................
    02) காவுதிறன் என்றால் என்ன? ..............................
    03) நன்னீர்க் குளச்சூழலில் காணப்படக்கூடிய மூன்று இணைப்புக்கொண்ட உணவுச்சங்கிலி ஒன்றினை எழுதுக.
    ..............................
    04) "சூழலைக் காப்போம்" என்பதன் மூலம் நீர் அறிந்துகொண்டது யாது?
    ..............................
    05) காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய மூன்று விளைவுகள் தருக.
    ..............................
    06) சூழல் மாசடைதல் என்பதனை விளக்குக.
    ..............................
    07) வளி மாசடைதலுக்கான பிரதான மாசாக்கிகளைத் தருக.
    ..............................
    08) நீர் மாசடைதலுக்கான பிரதான மாசாக்கிகளைத் தருக.
    ..............................
    09) முழு உலகமும் வெப்பமடைவதற்கான காரணத்தை விளக்குக.
    ..............................
    10) ஓசோன் படை பாதிப்புக்கு உள்ளாவது ஏன்?
    ..............................

### பகுதி B - கட்டுரை வினாக்கள்

*** உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை அளிக்குக.**

## உயிரியல்

01. 1) இலத்திரன் நுணுக்குக் காட்டியில் அவதானிக்கப்படும் பொதுவான கலம் ஒன்றின் அமைப்பை வரைந்து பகுதிகளுக்குப் பெயரிடுக.
    2) தாவரக் கலங்களில் மாத்திரம் காணக்கூடிய பகுதிகள் எவை?
    3) சுவாசச் செயற்பாட்டுடன் தொடர்புடைய கலப்புன்னங்கம் எது?
    4) பிறப்புரிமையியல் என்பதனை விளக்குக.
    5) மனிதனில் இலிங்க நிர்ணயம் எவ்வாறு ஏற்படுகிறது என விளக்குக.
    6) புளிப்புச் சுவையான பழங்களைத் தரும் தோடை மரத்தில் இருந்து பெறப்பட்ட வித்துக்கள் சில முளைத்து இனிப்புச் சுவையான பழங்களைத் தரும் மரத்தினைத் தோற்றுவித்தது. இதனை விஞ்ஞானபூர்வமாக எவ்வாறு விளக்குவீர் எனக் குறிப்பிடுக.

02. 1) எந்த வடிவத்தில், எந்த அங்கத்தின் ஊடாக ஒரு பச்சைத் தாவரம் அதன் நைதரசன் வழங்கலைப் பெற்றுக்கொள்கின்றது?
    2) நைதரசன் நுழையும் இடத்தில் இருந்து அது பயன்படுத்தப்படும் இடம் வரை செல்லவேண்டிய பாதையைக் காட்டுக.
    3) விலங்குகள் நைதரசனை எந்த அங்கத்தினூடாக எந்த வடிவத்தில் என்ன முறையில் பெற்றுக்கொள்கின்றது?
    4) அ. மனிதனால் கழிக்கப்படும் சிறுநீரில் உள்ள நைதரசன் சேர்வைகள் 2 தருக.
    ஆ. நீர் குறிப்பிடும் சேர்வைகள் எங்கு எச்செயன்முறை மூலம் உருவாக்கப்படுகின்றது எனக் கூறுக.
    இ. இச்சேர்வைகளில் ஒன்று உற்பத்தி இடத்தில் இருந்து கழித்தல் உறுப்புக்கு கொண்டுசெல்லப்படும் பாதையை ஒழுங்காகத் தருக.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கத்தில்....)


ஆசிரியர் திரு.இரா.செல்வவடிவேல், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் II – தொடர்ச்சி....


## பௌதிகவியல்

03. ஒவ்வொன்றும் 4Ω தடையுடைய 3 தடைகள் 6V மின்முதல் ஒன்றுடன் இணைக்கப்பட்டிருப்பதைச் சுற்றுப்படம் காட்டுகிறது.




1) அ. மின்முதலின் மின்னியக்க விசையை அளவிடுவதற்குத் தேவையான உபகரணம் எது?
   ஆ. இவ்வுபகரணத்தை, மின்னியக்க விசையை அளவிடுவதற்கு எவ்வாறு இணைப்பீர் எனக் காட்டுக. நேர், மறை முடிவிடங்களையும் குறிக்குக.
2) சுற்றில் செல்லும் மின்னோட்டத்தை அளவிடுவதற்குத் தேவையான உபகரணம் எது? இதனைச் சுற்றில் இணைத்து நேர், மறை முடிவிடங்களைக் குறித்துக்காட்டுக.
3) மேலே சுற்றில் இணைக்கப்பட்ட இரு உபகரணங்களையும் சுற்றில் மாற்றிப் பொருத்தமுடியுமா? உமது விடைக்குக் காரணம் தருக.
4) தரப்பட்ட சுற்றின் மொத்தத் தடைப் பெறுமானத்தைக் காண்க.
5) சுற்றில் செல்லும் மின்னோட்டத்தின் பெறுமானத்தைக் காண்க.
6) சுற்றில் செல்லும் மின்னோட்டத்தின் பருமனை அளவிடுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள விதியைத் தருக.

04. A. OA எனும் 2 Cm (ச.மீ) உயரமுடைய நேர்கோட்டுப் பொருள் ஒன்று வில்லையின் முன் (L) 6 Cm தூரத்தில் வைக்கப்படுகிறது. வில்லையில் இருந்து 12 Cm தூரத்தில் உள்ள திரை x,y இல் விம்பம் பெறப்படுகிறது.




1) இங்கு பயன்படும் வில்லை எத்தகையது?
2) அளவிடைக்கமைந்த கதிர் வரிப்படம் மூலம் விம்பம் உருவாவதைக் காட்டுக.
3) நீர் வரைந்த கதிர் வரிப்படத்தில் இருந்து வில்லையின் குவியத் தூரத்தைக் காண்க.
4) இரண்டு வில்லைகள் பயன்படுத்தப்பட்டு விண் உடுக்கூட்டம் ஒன்றைத் தெளிவாகப் பார்க்கும் முறையைப் படம் மூலம் காட்டுக.

B. 1) அலையியக்கங்களின் இரு வகைகளைப் பெயரிடுக.
2) சுனாமி அலை எவ்வாறு உருவாகிறது என விளக்குக.
3) மின்காந்த அலையின் முக்கிய இயல்புகள் மூன்று தருக.
4) பின்வரும் அலைகளின் பயன்பாடுகள் ஒவ்வொன்று தருக.
   அ. X கதிர்கள். ஆ. செங்கீழ்க்கதிர்கள்.
   இ. காமாக்கதிர்கள்.

## இரசாயனவியல்

05. A. 1) யூரியாவின் மூலக்கூற்றுச் சூத்திரத்தை எழுதுக.
2) அவகாதரோ எண் என்பதனை விளக்கி, அதன் பெறுமானத்தைத் தருக.
3) யூரியாவின் மூலக்கூற்று நிறையைக் கணிக்குக.
4) 30g யூரியாவிலிருக்கும் மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் காண்க. (C=12, O=16, N=14, H=1)

B. $C_6H_{12}O_6 \xrightarrow{\text{நொதித்தல்}} A + CO_2$  $A \xrightarrow{\text{ஒட்சியேற்றம்}} B$
இரசாயனவியல் தாக்கங்கள் மேலே தரப்பட்டுள்ளன.
1) A எனும் பொருளின் பெயர் என்ன?
2) A இல் காணப்படும் தொழிற்படுக் கூட்டம் எது?
3) A இன் கட்டமைப்புச் சூத்திரத்தை அதன் எல்லா அணுக்களுக்கும் இடையிலான பிணைப்புக்களைக் காட்டும் முறையில் தருக.
4) B எனும் பொருளின் பெயரையும், சூத்திரத்தையும் தருக.
5) A.B இன் பயன்பாடு ஒவ்வொன்று தருக.
6) மேலேயுள்ள தாக்கங்களில் நுண்ணங்கிகளுக்கு உள்ள தொடர்பை விளக்குக.

06. பின்வரும் உலோகங்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.
இரும்பு, செம்பு, மக்னீசியம், அலுமினியம், நாகம், பொட்டாசியம் இவை தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) அ. இவ்வுலோகங்களுள் எந்த இரு உலோகங்கள் பித்தளையை அமைக்கும்?
   ஆ. பித்தளைத்துண்டிற்கு ஐதான சல்பூரிக்கமிலம் சேர்க்கப்படும்போது நீர் அவதானிக்கக்கூடிய இரு நோக்கல்களைத் தருக.
2) மேலே தரப்பட்ட உலோகங்களுள் மின்னரிப்புக்கு எதிராக நாகத்திற்கு கதோட்டுப் பாதுகாப்பை அளிக்கும் ஓர் உலோகத்தின் பெயரைத் தருக.
3) தரப்பட்ட உலோகங்கள் மின் இரசாயன வரிசையில் உள்ள நிலையை எழுதுக.
4) அ. கொதிநீராவியுடன் மீளும் தாக்கத்தை ஏற்படுத்தும் உலோகம் எது?
   ஆ. இத் தாக்கத்தை நிகழ்த்துவதற்கான உபகரண அமைப்பைக் காட்டும் படம் வரைக.
   இ. மேற்படி தாக்கத்திற்குரிய சமன்செய்த சமன்பாட்டைத் தருக.
5) தரப்பட்ட உலோகங்களில் எதன் காபனேற்று வெப்பத்தினால் பிரிகையடைவதில்லை?
6) அலுமினியம் தாக்கவிதத்தொடரில் மேலேயிருந்தபோதும் மின்னரிப்புக்கு உட்படாமைக்குக் காரணம் யாது?

-நிறைவுற்றது-


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

04.12.2009

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2186

வெற்றி எழுத்து: T வெற்றி எண்கள்: 2 9 5 9 4 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T | 2 | 9 | 5 | 9 | 4 | 3 | ரூபா.17,793,520/= | பரிசு - |
| 1 பரிசுகள் | ■ | 2 | 9 | 5 | 9 | 4 | 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | ■ | ■ | 9 | 5 | 9 | 4 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | ■ | ■ | ■ | 5 | 9 | 4 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 155 |
| 4 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | 9 | 4 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1482 |
| 5 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | ■ | 4 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் 15015 |
| 6 பரிசுகள் | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 147613 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | ■ | 2 | 9 | 5 | 9 | 4 | ■ | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | ■ | 2 | 9 | 5 | 9 | ■ | ■ | ரூபா. 1,000/= | பரிசுகள் 151 |
| 9 பரிசுகள் | ■ | 2 | 9 | 5 | ■ | ■ | ■ | ரூபா. 100/= | பரிசுகள் 1475 |
| 10 பரிசுகள் | ■ | 2 | 9 | ■ | ■ | ■ | ■ | ரூபா. 50/= | பரிசுகள் 14774 |
| 11 பரிசுகள் | T | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா. 20/= | பரிசுகள் 59120 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 15,255,360.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு
Rs. 18,289,452.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


# மரண அறிவித்தல்



## திருமதி தாட்சாயணி நாகராசா

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாட்சாயணி நாகராசா 01.12.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கம்மா - பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மகளும் சபாபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசாவின் (ஓய்வு பெற்ற கலால் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் அமிர்தகௌரி, சேதுபதி, கலாகரன், ஞானசோதி, உமாபதி, கமலவதி, ஜெகசோதி, சீத்தாலக்சுமி, ரகுபதி ஆகியோரின் அன்புத் தாயும் தெய்வேந்திரம், அம்பிகாபதி, பவானி, வாமதேவன், பத்மினி, லோகேந்திரா, ஜெயமோகன், வைத்தீஸ்வரன், கலாமதி ஆகியோரின் அன்பு மாமியும் கனன், கனேன், வித்தியா, விதுஷன், துவாரகா, சாம்பவி, மதுரா, மதுஷன், கஜனி, வைஸ்ணவன், பிரணவி, பைரவி, அட்சயா, தர்சன், சுஜனி, அபிஷேக், அபிநயா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, தேவராசா மற்றும் பத்மலோஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2009) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொ.பே. : 0214591290,
0213205126
0777162673

தகவல் :
குடும்பத்தினர்.

(92890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் நீர்வளத்தைப் பாதுகாத்துக்கொள்ள தூவல் நீர்ப்பாசனம் ஒரு பயன்தரும் பொறிமுறை

பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு நீர்ப்பாசனம் இன்றியமையாத செயற்பாடாகும். பயிர்ச்செய்கைக்குத் தேவைப்படும் நீரின் அளவு.

- தெரிவு செய்யப்படும் பயிர் வகை
- மண் வகை
- காலநிலை என்பவற்றின் அடிப்படையில் வேறுபடுகின்றது.

உத்தம அளவில் நீரினைப் பயிர்களிற்கு வழங்கும்போது, அவை சிறப்பாக வளர்ந்து உயர் விளைச்சலைத் தருகின்றன. உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் நன்னீரில், 71 வீதம் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. நீர் வளப் பற்றாக்குறை விவசாயத்துறையின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

யாழ்.மாவட்டத்தில் நீர்ப்பாசனம் செய்வதற்கு நிலத்தடி நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து பட்டுக்காணப்படும் 19,261 விவசாயக் கிணறுகளும் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு மற்றும் தீவகப் பகுதிகளிலுள்ள 2,433 துரவுகளும் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவுகள் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய 1,000 சிறு குளங்களும் பரந்து பட்டுக் காணப்படுகின்றன.

இந் நீர் மூலங்களுக்கு நீர் வழங்கியாக மழை வீழ்ச்சி காணப்படுகின்றது. வரண்ட வல்யத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்டத்தில் ஆண்டிற்கான சராசரி மழைவீழ்ச்சி 1200 மில்லியன் கனமீற்றர் ஆகும்.

ஐப்பசி, கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் கூடியளவு மழைவீழ்ச்சி பெறப்படுகின்றது. சித்திரை, வைகாசி மாதங்களில் குறைந்தளவு மழைவீழ்ச்சி பெறப்படுகின்றது.

குடாநாட்டின் ஆவியாதல் வீதம் தைமாதம் முதல் புரட்டாதி மாதம்வரை 4மி.மீ./நாள் ஆகவும், ஐப்பசி முதல் மார்கழி மாதம் வரை 3மி.மீ./நாள் ஆகவும் காணப்படுகின்றது.

பெறப்படும் மழை வீழ்ச்சியில்



- ஆவியாதல் மூலம் 470 மில்லியன் கனமீற்றர் நீர்
- மேற்பரப்பு வழிந்தோடல் மூலம் 420 மில்லியன் கனமீற்றர் நீர்
- பக்க ஊருடுவல் மூலம் 50 மில்லியன் கனமீற்றர் நீர் இழக்கப்படுகின்றன.

ஈற்றில் 260 மில்லியன் கனமீற்றர் நீரே நிலத்தடி நீரைச் சென்றடைகின்றது.

ஊடுபுகும் மழைநீர் நன்னீர் வில்லைகளாக உவர் நீரில் மிதக்கின்றன. யாழ்.குடாநாட்டு சிவப்பு லற்றசோல் மண்ணில் நீர் ஊடுபுகவிடும் திறன் 360 மி.மீ./மணி ஆகும். அத்துடன் 149,000 ஏக்கர் அடி நிலத்தடி நீர் சேமிக்கப்பட்டுள்ளது.

நிலத்தடி நீர் பின்வரும் தேவைகளுக்காக நுகரப்படுகின்றன.

- வீட்டுத் தேவைகள் 16.2 மி.க.மீ
- பழமரச் செய்கை 56 மி.க.மீ
- பெரிய மரங்கள் 51.1 மி.க.மீ
- பழமரச் செய்கை 56 மி.க.மீ
- ஆண்டுப் பயிர்கள் 167.4 மி.க.மீ

மொத்தமாக, 290.7 மில்லியன் கனமீற்றர் நீர் வருடாந்தம் நுகரப்படுகின்றது. 30 மில்லியன் கனமீற்றர் நீர் கடந்த காலங்களில் சேமிக்கப்பட்ட நிலத்தடி நீரில் இருந்து வருடா வருடம் மேலதிகமாக நுகரப் பட்டுக்கொண்டு செல்லு கின்றது. இதில் பெருமளவு பங்கு நீர்ப்பாசனத் திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது.




### நிலத்தடி நீரின் முறையற்ற பயன்பாடு

சேமிக்கப்படும் தரைக்கீழ் நீரின் பெரும்பகுதி கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள் மூலம் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதில் கணிசமான பகுதி பயிர்ச்செய்கை நடவடிக்கைக் காகவே நுகரப்படுகின்றது.

விவசாயிகள் பயிர்களுக்கு பாத்திமுறை மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்கின்றார்கள். இந் நீர்ப்பாசன முறையில் பயிருக்குத் தேவையான நீரைவிடக் கூடியளவு நீர் வழங்கப்படுகிறது.

உதாரணமாகக் குடாநாட்டில் வெங்காயப் பயிருக்கான நீர்த்தேவை 900மி.மீ ஆகும். எனினும் பாத்திப்பாசனம் மூலம் வழங்கப்படும் நீரின் அளவு 1,200மி.மீ ஆகும்.

திட்டமிடப்படாத முறையில் நிலத்தடி நீர் வெளியேற்றப்படும்போது நன்னீர் - உவர்நீர் சமநிலை குழப்பப்படுகின்றது. இதனால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடிய வகையில் நிலத்தடி நீரானது உவராதல் பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

நீர் தொடர்ச்சியாக வெளியேற்றப்படும்போது உள் நிலப்பகுதிகளை நோக்கிய உவர் நீரின் அசைவு அதிகரிப்பதோடு கிணறுகளின் உவர்த்தன்மையும் அதிகரிக்கும். அளவுக் கதிகமாக நிலத்தடி நீரினைப் பயிர்ச்செய்கைக் குப் பயன்படுத்துவதே இப்பிரச்சினைக்கான காரணமாகும்.

விவசாயிகள் வலுக்கூடிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின்சார மோட்டார்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பாத்திப் பாசனத்தை மேற்கொள்கிறார்கள்.

இவ் இயந்திரங்கள் கூடியளவு நீரினைக் குறைந்தளவு நேரத்தில் கிணறுகளிலிருந்து அகத்துறிஞ்சி வெளியேற்றுகின்றன. இதனால், அகத்துறிஞ்சப்படும் நீரினளவை நன்னீர் ஊற்றுக்களால் ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. இச் செயற்பாடு நிலத்தடி நீர் உவராதலை அதிகரிக்கின்றது.

அத்துடன் மிதமிஞ்சிய பாத்திப்பாசனத்தினால் இரசாயன உரம், கிருமிநாசினி என்பவை நிலத்தடி நீரிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இதனால், நிலத்தடி நீரின் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபன சிபாரிசிற்கமைய நீரில் இருக்கக்கூடிய உச்ச நைதரேற்றினளவு 10mg/l ஆகும். ஆயினும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஆய்வின்படி

- தொட்டிலடி - 15.4 mg/l
- உடுவில் - 19.4 mg/l
- சிறுப்பிட்டி - 21.9 mg/l
- புலோலி - 17.5 mg/l
- கரணவாய் - 18.0 mg/l
- கைதடி - 15.0 mg/l

ஆகிய பிரதேசங்களில் நீரில் நைத்ரேற்றினளவு உயர்வாகக் காணப்படுகின்றது. இந் நைத்திரேற்று செறிவு கூடிய நீரை குடிநீராகப் பயன்படுத்தும்போது பல வேண்டத்தகாத நோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும்.

இந் நிலையில், கிணறுகள் மற்றும் துரவுகள் என்பவற்றிலிருந்து நீரினை எடுத்துச் செல்லும் வாய்க்கால்களில் ஏற்படும் நீரிழப்பினைக் குறைத்தல் வேண்டும். அத்துடன் தோட்டத்தினுள்ளும் நீர் முகாமைத்துவத்தி னைச் சிறப்பாகச் செய்து குறைந்தளவு நீருடன் நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.

எனவே இப் பிரச்சனைகளிற்குக் குறைந்தளவு நீருடன் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக்கூடிய நுண்நீர்ப்பாசன முறையை யாழ். மாவட்டத்தில் விரிவுபடுத்தல் அவசியமாகும். இதில் தூவல், சொட்டுநீர்ப்பசன முறைகள் அடங்குகின்றன.

### தூவல் நீர்ப்பாசனம்

நீரானது உயர் அமுக்கத்தின் கீழ் பிளாஸ்ரிக் குழாய்கள் மூலம் பயிர்களின் மீது விசிறப்பட்டு குறித்த மேற்பரப்பு முழுவதும் சீராக ஈரலிப்பு ஏற்படக்கூடியவாறு மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசனம் தூவல் நீர்ப்பாசனம் எனப்படும். குடாநாட்டில் நீரின் தரத்தைப் பாதுகாக்கும் அதேநேரம் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட நீர் வளத்தைக் கொண்டு பயிர்ச் செய்கையை மேற் கொள்ள நுண்நீர்ப்பாசன முறையான தூவல் நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களமானது முதன்முறையாக 2003 ஆம் ஆண்டு 08 தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளை விவசாயிகளுக்கு வழங்கியது. பின்னர் பல வேறுபட்ட திட்டங்களிற்கூடாக 240 நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது கமநெகும திட்டத்தின் கீழ் உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, நல்லூர், கோப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 540 விவசா யிகளுக்கு தூவல் நீர்ப்பா சனத் தொகுதிகள் வழங் கப்படவுள்ளன. இத் தொகுதி ஒவ்வொன்றும் ¼ ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படும் வெங்காயம், மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற் கொள்ள போதுமானதாகும்.

### தூவல் நீர்ப்பாசனத் தொகுதியின் நன்மைகள்

- பாத்திப் பாசனத்தில் பயன்படுத்தப் படும் நீரில் 40 வீதத்தினை இந் நீர்ப்பாசன முறையில் சேமிக்க முடியும். நீர் வெளியேற்றப்படும் வீதத்திற்கும் ஊறும் வீதத்திற்கும் இடையில் ஓர் சமநிலை பேணப்படுவதால் உவர்நீர் ஊற்றுக்கள் நன்னீரினுள் உட்புகுதல் குறைக்கப்படும்.
- பயிர்களுக்கு மழைவீழ்ச்சி போல நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுவதால் பயிர்களுக்கிடையே ஓர் குளிர்மையான நுண் காலநிலை பேணப்படும். குறைந்த வெப்பநிலையானது பீடைகளின் தாக்கத்தைப் பெருமளவில் குறைப்பதற்கு வழிவகுக்கும். உதாரணமாக வெங்காயம், மிளகாய் பயிர்களில் பனிப்பூச்சியின் தாக்கம் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்படும். அத்துடன் நீரை விசிறியடிக்கும்போது பனிப்பூச்சி முட்டைகள் போன்ற பீடைகள் பயிரின் மேற்பகுதியிலிருந்து கழுவியகற்றப்படுவதால் பொறிமுறை ரீதியான பீடைக்கட்டுப்பாடும் சாத்தியமாகின்றது.
- தூவல் நீர்ப்பாசனம் மூலம் தினமும் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் மண் ஈரப்பதன் வயற்கொள்ளவில் பேணப்படும். எனவே பயிர்களிற்கு நீர்த்தகைப்பு ஏற்படாது. இது தரமான மற்றும் உயர் உற்பத்தியைப் பெற வழி வகுக்கும். சுன்னாகம், உடுவில், சாவகச்சேரி போன்ற பகுதிகளில் தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட வெங்காயத்தில் 25 வீதம் அதிகரித்த விளைவைப் பெறமுடிந்துள்ளது.



- வெங்காயம் போன்ற பயிர்களில் பனி காலங்களில் பயிர்களின் இலைகளில் படிவடைந்த பனி, காலையில் சூரிய வெப்பத்தினால் ஆவியாகும்பொழுது நுனி கருகல் ஏற்படும். எனினும் தூவல் நீர்ப்பாசனம் அப்பனி நீரைக் கழுவிச் செல்வதால் நுனி கருகல் முற்றாகக் கட்டுப்படுத்தப்படும்.
- தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர்கள் செய்கை பண்ணப்படும்போது நீர்ப்பாசன வாய்க்கால்கள் தேவையில்லை. இப்பகுதியிலும் பயிரினை நாட்ட முடியும்.


உதாரணமாக 1000 மிளகாய் கன்றுகள் பயிர் செய்கை பண்ணப்படுகின்ற எண்ணிக்கைத் தரையில் 1200 கன்றுகள்வரை பயிரிடப்பட முடியும்.

- நீர்ப்பாசனத்திற்குத் தேவையான தொழிலாளர் கூலியை 30% வரையிலும் மற்றும் பாத்திகள் அமைத்தலுக்கான தொழிலாளர் கூலியை 50% வரையிலும் மீதப்படுத்த முடியும்.
- பயிர்களின் வேர் வலயத்தில் 1/3 பங்கு மட்டுமே ஈரப்படுத்தப்படுகின்றது. இதனால் பயிர்களிற்கு இடப்படும் இரசாயன உரம் நிலத்தடி நீரிற்கு எடுத்துச் செல்லப்படுதல் கட்டுப்படுத்தப்பட்டு வினைத்திறனான உரப்பாவனைக்கு வழிவகுக்கும். நிலத்தடி நீரின் தரமும் பாதிக்கப்படமாட்டாது.
- பயிர்களிற்குத் தேவையான நீரின் அளவினை மட்டுமே மண்ணிற்கு வழங்குவதால் மண்ணில் உவர்த்தன்மை உருவாக்கப்படும் சாத்தியக்கூறுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.
- மண்ணரிப்புத் தடுக்கப்படுவதன் மூலம் மண்வளம் பேணப்படும்.

### தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினை தெரிவு செய்யும் போது கவனிக்கப்பட வேண்டியவை

♦ மண்ணின் தன்மை

தூவல் நீர்ப்பாசனமானது சகல வகை மண்களிற்கும் பாவிக்கப்படக்கூடியதாய் உள்ளது. தூவல் நீர்ப்பாசனத்தில் பயன்படுத்தப்படும் விசிறியின் விசிறல் அளவானது மண்ணில் ஊடு புகவிடும் தன்மையினைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.



எப்பொழுதும் விசிறியின் விசிறல் அளவானது மண்ணின் ஊடுபுகவிடும் தன்மையினை விடக்குறைவாக இருத்தல் வேண்டும். கூடவாக இருப்பின் மேற்பரப்பினூடாக நீரானது வழிந்தோடி மண்ணரிப்பை ஏற்படுத்தும்.

♦ பயிர் வகைகள்

தூவல் நீர்ப்பாசனமானது வரிசையாகவும், அடர்த்தியாகவும் பயிரிடப்படும் பயிர்களான வெங்காயம், மிளகாய், கோவா, முள்ளங்கி, பீற்றூட், கறிமிளகாய், கீரைவகை, பயறு, கௌபீ போன்ற பயிர்களுக்கு வினைத்திறனாகப் பயன் படுத்தப்பட முடியும்.

♦ அமுக்கம்

இத் தொகுதி உரிய முறையில் நீரை விசிறுவதற்கு 2 வளிமண்டல அமுக்கம் இருத்தல் வேண்டும். அமுக்கம் போதுமானதாக இல்லாவிடில் விசிறப்படும் நீர்த் துளிகளின் பருமன் பெரிதாக இருக்கும். சீரான நீர்ப் பரம்பல் இருக்காது. அத்துடன் மண் இறுக்கமடையும். ரொபின் EY 20 மற்றும் 1.5 இக்கு மேல் பரிவலுக் கொண்ட மின்சார நீர் இறைக்கும் பம்பி ஆகியன இவ் அமுக்கத்தை வழங் கக்கூடிய நீர் இறைக்கும் பம்பிகள் ஆகும்.

♦ விசிறல் தலை

விசிறும் தலைகள் தொகுதியின் பக்கக் குழாய்களில் 5.0-5.5 மீற்றர் இடைவெளிகளில் பொருத்தப்படல் வேண்டும். ஒரு பக்கக் குழாயில் 4-6 விசிறும் தலைகள் பொருத்தப்படல் வேண்டும். விசிறும் தலைகள் பயிரின் உயரத்திலும் பார்க்க 30-45செ.மீ உயரமாக இருத்தல் வேண்டும். இரு பக்கக் குழாய்களிற்கிடையேயான இடைவெளி 5.0-5.5 மீற்றராக இருத்தல் வேண் டும். எல்லா விசிறல் தலைகளும் ஒரே சீரான அமுக்கத்தில் நீரை விசிறக் கூடியவாறு பொருத்தப்பட வேண்டும். ஒரு தலையிலிருந்து விசிறும் நீர் மற்றைய தலை பொருத்தியுள்ள எல்லைவரை நீரை விசிறக் கூடியவாறு பொருத்தப் படவேண்டும். ஒரு விசிறல் தலையானது 25-30.25 சதுரமீற்றர் விஸ்தீரணத்திற்கு நீர்ப்பாசனம் செய்யக் கூடியது. அந்த வகையில் 1/4 ஏக்கர் செய்கைக்குத் தேவைப்படும் விசிறும் தலைகளின் எண்ணிக்கை 32-36 ஆகும். 600 லீற்றர்/மணி என்னும் வீதத்தில் நீரை விசிறியடிக்கும் விசிறல் தலையே எமது மண்ணிற்குப் பொருத் தமானது ஆகும்.

### நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்கு

வி. இளங்குமார்,
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்,
பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

### உகந்த காலம்

- காலை வேளைகளில் நீர் விசிறப்பட வேண்டும்.
- மண் சூடாக உள்ள போது விசிறக் கூடாது.
- விசிறப்படும் நீர் சூடாக இருக்கக்கூடாது.
- பூக்கள் விரிந்து மகரந்தச் சேர்க்கை நடைபெறும் நேரங்களில் விசிறலைத் தவிர்த்தல் வேண்டும்.

♦ நீர்ப்பாசன நேரம்

நீர்ப்பாசன நேரம் மண்ணின் வகை, பயிரின் நீர்த்தேவையைப் பொறுத்து 15-20 நிமிடம் வரை நீர் விசிறப்படல் வேண்டும்.

♦ நீர்ப்பாசன இடைவெளி

தினமும் நீர் விசிறப்பட வேண்டும்.

### தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினை இயக்குவதற்கு முன் அவதானிக்க வேண்டியவை

- ⊙ பொருத்துகள் சீராக இணைக்கப்பட வேண்டும்.
- ⊙ கசிவுகள், வெடிப்புகள் இருக்கக்கூடாது.
- ⊙ கடும் காற்று வீசுமாயின் காற்றுத்தடை அமைக்கப்பட வேண்டும்.

⊙ தூவல் நீர்ப்பாசனத் தொகுதிஇயங்கும் போது அவ தானிக்க வேண்டியவை

## பயிர்களுக்கிடையே குளிர்மையான காலநிலையை பேணுவதற்கும் அது சிறந்த முறையில் உதவும்

- ⊙ விசிறும் தலைகள் சீராக இயங்குகிறதா என்பதை கவ னிக்க வேண்டும்.
- ⊙ நீர்த்துளிகள் சிறிதாகவும் சீராகவும் பரவலாகவும் விசிறப்படுகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- ⊙ ஒரு தலையிலிருந்து மற்றைய தலைவரை நீர் விசிறப்படுகின்றதா என அவதானித்தல்.

### பராமரிப்பு

- நீரின் தன்மையைப் பொறுத்து வடிகட்டியைத் துப்பரவுசெய்தல்வேண்டும்.
- ஒரு போகஇடைவெளியில் நீர் வழங்கல் குழாயின் அந்தங்களிலுள்ள தலை முனைகளை அகற்றி அவற்றினூடாக நீரை வெளியேற்றுவதன் மூலம் குழாய்களில் தேங் கியுள்ள படிவுகளை அகற்றவேண்டும்.
- விசிறல் தலையில் சுண்ணாம்புப் படிவுகள் ஏற்பட்டு விசிறலுக்குத் தடையாக இருக்குமாயின் அவற்றை அகற்றுவதற்கு விசிறல் தலைகளைக் கழற்றி ஐதான வினாகிரி கரைசலில் அல்லது 1 வீத செறிவுள்ள ஐதான சல்பூரிக் அமிலத்தில் ஓர் இரவு ஊற விடுவதன் மூலம் அகற்றலாம்.

எனவே இத்தகைய சிறப்புகள் பொருந் திய தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தி நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் நிலை பேறான விவ சாயத்திற்கு வழி வகுக்க முடியும். #

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை, டிசெ. 7

ஊர்காவற்றுறை பிரதேசசபை பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

கீழ்ப்பிரிவு:

முதலாம் இடம்: அன்ரன் சாள்ஸ் டிலக்சன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

இரண்டாம் இடம்: வாகீசன் கிருசாந்தினி (ஊர்காவற்றுறை சிறியபுஸ்பம் மகளிர் வித்தியாலயம்)

மூன்றாம் இடம்: செல்லக்குமார் உசாந்தினி (நாரந்தனை றோ.க.தமிழ்க்கலவன் பாடசாலை)

மத்தியபிரிவு:

முதலாம் இடம்: செல்வநாயகம் அருள்ராஜ் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

இரண்டாம்இடம்: அன்ரன் உதயகுமார் யாழினி (நாரந்தனை றோ.க.தமிழ்க் கலவன் பாடசாலை)

மூன்றாம் இடம்: தவதாசன் தர்சாயினி (கரம்பன்சிறியபுஸ்ப மகளிர் வித்தியாலயம்)

வெற்றிபெற்றோருக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் விரைவில் வழங்கப்படும் என பிரதேச சபையின் பொது நூலகர் எஸ்.வைகுந்தவாசன் தெரிவித்துள்ளார். (201-21)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.7

குட்டியப்புலம் அ.த.க பாடசாலையின் ''தேனீ'' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை அதிபர் செ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) வி.கந்தையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

''தேனீ'' சஞ்சிகையின் முதற் பிரதியை பாடசாலையின் நலன்விரும்பி சி.சுத்தானந்தம் பெற்றுக் கொள்ளவுள்ளார். (04-9)

## தொலைபேசிக் கம்பங்கள் வந்து சேர்ந்தன

யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்துக்குத் தென்பகுதியிலிருந்து புதிய தொலைபேசிக் கம்பங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தத் தொலைபேசிக் கம்பங்கள் கனரக வாகனங்கள் மூலம் ஏ-9 வீதியூடாகக் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (09-224)

## முன்பள்ளிகளின் கலைவிழா நிகழ்வு

கைதடி குடும்ப முன்பள்ளிகளின் வருடாந்த கலைவிழா நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய மண்டபத்தில் தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி த.சுபத்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (201-288)


## யா/ கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை புலமைப்பரிசில் பரீட்சை - பாராட்டுவிழா-2009


த.லீரோமா
153 புள்ளிகள்


ஆ. காயத்திரி
145 புள்ளிகள்


க.கோபிகா
150 புள்ளிகள் (முல்லைத்தீவு)

இவர்களுடன் 119 புள்ளிகளைப் பெற்ற அ.டிலக்ஷனா ஆகியோரை பாராட்டி மேலும் பல சாதனைகளைப் படைக்க மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம். இம் மாணவர்கள் எமது பாடசாலைக்கும், கிராமத்துக்கும் பெருமை சேர்த்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இவர்களது வெற்றிக்குதவிய உள்ளங்களுக்கும் நன்றிகள் (சி/562975)

பாடசாலைச் சமூகம்.

## ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்

Reg. No. ED-6711SL

(International Academy of Education - Reg- IAE/I/LL261)

தொடருறு தொழில் வாண்மைப் பாடநெறிகளுக்கான விண்ணப்பம் - 2010

★ முன்பள்ளி மற்றும் சுய தொழிலில் ஆர்வமுள்ளோருக்கான முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா - Dip. in pre school Education

★ பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான பாடசாலை ஆதார முகாமைத்துவ டிப்ளோமா - Dip. in school Based management

★ அரச, அரசசார்பற்ற, தனியார் துறைகளில் கடமையாற்றுவோருக்கான மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா - Dip. in Human Resource management

★ முன்பள்ளி -ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் ஆர்வமுள்ளோருக்குமான (பேச்சு, எழுத்து, பாடல், நாடகம், உரையாடல், அபிநயம்) உள்ளடங்கிய ஆங்கில சான்றிதழ் பாடநெறி Cert. in English

வார இறுதி, விடுமுறை நாள்களில் நடைபெறவுள்ள இப்பாட நெறிகள் நவீன கற்றல் முறையியல்கள், கள வேலைகள், குழுச் செயலாற்றுகைகள், சுயகற்றல் சமர்ப்பிப்புக்கள், விடய ஆய்வு, நேரடி கள அனுபவம், ஒப்படைகள், கல்விச் சுற்றுலா என சர்வதேச கல்வி நிறுவக தர நிர்ணயங்களுக்கு ஒப்பான தேர்ச்சிகள் வழங்கப்படும். இப்பாட நெறிகளைப் பின்பற்ற விரும்புவோர் டிசெம்பர் 27ஆம் திகதிக்கு முன் சுயவிவரங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,
226, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்தால் அரச, அரசசார்பற்ற, தனியார், பாடசாலை ஆசிரியர், மாணவர், அதிபர், உறுப்பினர்கள், வளவாளர்களுக்கான தலைமைத்துவ, தொழில்வாண்மை, ஆளுமைவிருத்தி, நேரமுகாமைத்துவம், 5S,5M, 5E, 3R மன அழுத்த முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவம், உட்படுத்தல் கல்வி, வழிகாட்டல் ஆலோசனை மேற்பார்வை, தொழில் வழிகாட்டல், நாடக ஆற்றுகை, அழகியல் ஆற்றுகை, ஆக்கத்திறன் ஆற்றுகை, ஆங்கில மொழித் தேர்ச்சி செயலமர்வுகள் உயர் வாண்மையுள்ள வளவாளர்களால் ஒழுங்கு செய்து தரப்படும்.

(92912) தொடர்புகளுக்கு: 0779360607


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் குழந்தையா செல்லத்துரை

தோற்றம்: 14✱08✱1914 மறைவு: 22✱11✱2005

திதி: சஷ்டி

அமரர் நல்லம்மா செல்லத்துரை

தோற்றம்: 16✱05✱1924 மறைவு: 06✱08✱2005

ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
என்றும் உங்களை மறவோம்.

கட்டுவன் வீதி, கெட்டப்போல் வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை. (92350)

குடும்பத்தினர்.

## இருபத்திரண்டாம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 12 ✱ 09 ✱ 1928



இறப்பு 07 ✱ 12 ✱ 1987

அமரர் வே.த.தணிகாசலம் (அதிபர்)
(குருமாமணி)

வாழ்க்கைப் பயணமதில் வானுயரப் பறந்து
ஆசிரியப் பாதைதனில் அதிபராக உயர்ந்து
கல்விச்சாலை பல கண்டு, கல்விமான்கள் பலரை உருவாக்கிக்
கணப் பொழுதில் எமைவிட்டு விண்ணுலகம் சென்றீரே!

இராஜஸ்தலம்,
மனோகரா, அல்வாய்.
0213001911 (சி/562961

என்றென்றும் உங்களை மறவாத:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் நடேசு பரம்சோதி (நோர்வே)
(முன்னாள் ஊழியர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (07.12.2009) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து இடம்பெறம் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

''ராஜா பேக்கரி'',
வதிரி, கரவெட்டி. (சி/562973)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
இளையதம்பி
செல்லையா

மலர்வு: 10.08.1914
மறைவு: 05.11.2009
திதி: திருதியை (05.12.2009)

கடந்த 05.11.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தியறிந்து எமக்கு உந்து சக்தியாகவும் பக்கபலமாகவும் நின்ற உயர்ந்த உள்ளங்களுக்கும் மற்றும் நேரடியாகத் துயரில் பங்கெடுத்தவர்களுக்கும் தபால், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அனைத்துவகையான உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (07.12.2009) திங்கட்கிழமை ந.ப. 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சேச்லேன்,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:-
பிள்ளைகள். (92898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் கே.ஞானகாந்தன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும் திருமதி கமலாதேவி இராசையா மாணவி ஒருவருக்குத் தங்கப்பதக்கம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சை; மேலும் சில முடிவுகள்

யாழ்ப்பாணம்.டிச.7

கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குரிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் சில முடிவுகளை பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பி வைத்துள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு:

யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

கலைப் பிரிவு

சி.அருண்யா-3ஏ,நா.நிறோஷா-3ஏ, த.நிசாந்தினி-3ஏ, மு.அருந்தஷா-2ஏபி, பா.நிலோயினி-2ஏபி, ஞா.நிஷாழினி-2ஏபி, பா.தர்சிகா-2ஏபி, ச.பாரதி-2ஏபி, நா.காயத்திரி-2ஏபி, கு.சுலக்ஷனா-2ஏசி, ஜெ.நிலூஜா-ஏ2பி, சி.நித்யா-ஏ2பி, ம.சிந்துஜா-ஏ2பி, த.தனுசியா-ஏ2பி, யோ.மிதுலா-ஏ2பி, கி.வானதி-ஏ2பி, ஜெ.ஜெயசுதா-ஏபிசி, சி.ரேகா-ஏபிசி, அ.சசிகலா- ஏபிசி, ப.லக்ஷனா-ஏ2சி, மா.சுமித்ரா- ஏ2சி, சு.சுகனியா-ஏ2சி, சு.அருணா-2பிசி, கு.மதிவதனி-2பிசி, க.நித்யா-2பிசி, எஸ்.நிலோயினி-2பிசி, இ.நந்தினி-2பிசி, வ.ரேகா-2பிசி, க.சிந்துயா-2பிசி, சி.விதுஷா-2பிசி.

வர்த்தகப் பிரிவு

வி.பிரியங்கா-3ஏ, சி.துவாரகா- ஏபிசி, கி.வேணுஜா-பி2சி.

இளவாலைக் கன்னியர் மடம்

விஞ்ஞானப் பிரிவு

வி.விஜகுமாரி-பி2சி,ச.கஜந்தி-3சி, ஜொ.றுபினா-2சிஎஸ், ஜெ.இமாக்குளின்-2சிஎஸ்.

வர்த்தகப் பிரிவு

தே.கௌசல்யா-2பிசி.

கலைப் பிரிவு

ம.லக்ஷனா-3ஏ, பீ.மெல்னி-2ஏபி, யோ.ஜென்சியா-2ஏபி, டி.சிந்துஜா-ஏ2பி, கெ.றேனுகா-ஏ2பி, அ.சிந்துஜா-ஏ2பி, எஸ்.குயின்நீனா-ஏ2பி, ஞா.மெற்றில்டா-2ஏசி, சி.டிலோஜி-ஏபிசி, அ.ஜெபமலர்-ஏபிசி, ம.றெக்ஷிமிலோன்-ஏபிசி, அ.தயா

# நாய் கடியை அலட்சியப்படுத்தியதால் வினை; ஆபத்தான நிலையில் இளைஞன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், டிசெ.7

கட்டாக்காலி நாய் கடித்ததை அலட்சியப்படுத்தியதன் காரணமாக நோய் எல்லைமீறியதனால் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கட்டாக்காலி நாய் கடித்ததை அடுத்து உரிய வேளையில் சிகிச்சை பெறத்தவறியதால் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த சு.சிவகரன் (வயது28) என்ற இளைஞனே யாழ். போதனா வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மழைக்காலம் தொடங்கியுள்ள காரணத்தால் தொற்றுநோய்கள் போன்றன பரவும் அபாயம் உள்ளதால் இதுபோன்ற கட்டாக்காலி நாய்களால் பாதிக்கப்படுவோர் காலதாமதமின்றி உரிய வேளையில் வைத்தியரை நாடி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. (04-16-207)

# காசநோயின் தாக்கத்தால் குடாநாட்டில் இந்த வருடம் மட்டும் 90 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து நவம்பர் மாதம் வரைக்கும் 90 பேர் காசநோய்க்கு இலக்காகிச் சிகிச்சை பெற் றுள்ளனர்.

மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த ஆண்டில் காசநோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக காசநோய்க்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் இதற்கான கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக பாடசாலை மட்டங்களில் விசேட விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை 90 பேர் காசநோய்க்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்- என்றார். (04-204)

## ஐ.தே.கட்சி மாநாட்டுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

கொழும்பு, டிசெ. 7

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் செய்தி சேகரிக்கச் சென்ற அரச தொலைக்காட்சி நிறுவனங்களின் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.ரி.என்.தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு பேரும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நான்கு பேரும் தாக்கப்பட்டனர் என்றும் அவர்கள் கொழும்பு பிரதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறியவந்துள்ளது. (அ-1)



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ். கோட்டைப் பகுதியைச் சூழ சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனொரு பகுதியாக கோட்டையின் அகழிப்பகுதி சுத்திகரிக்கப்பட்டுள்ளது. இதனால் அகழியில் கடல்நீர் உட்புகுந்து பார்ப்போரைக் கவரும் வகையில் காணப்படுகின்றது. சீர்ப்படுத்தப்பட்ட அகழியின் வாய்க்காலையும், நீர்நிறைந்து காணப்படும் அகழியையும் இங்கு காணலாம்.

(படங்கள்: நந்தன்)

## செய்தியாளர் மாநாடு

யாழ்ப்பாணம், டிசெ.7

வடமாகாண அபிவிருத்தி குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி வடமாகாணத்தின் தற்போதைய நிலைகுறித்தும் எதிர்கால அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்க வுள்ளார் என்று அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். (04-9)

## புகைப்படங்களை பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தினைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்கள் ஞாயிற்றுக் கிழமைதோறும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை 'உதயன்' பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். நகர் றோட்டறக்ட் கழகச் செயல் திட்ட இயக்குநர் ரி.வல்லவக்குமரன் அறிவித்துள்ளார். (14)

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தால் குடாநாட்டு மக்கள் செழிப்புடன் வாழமுடியும்

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

இறக்குமதியின் அளவைக் குறைத்து உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவதன் மூலம், எமது மக்கள் பொருளாதார செழிப்புடன் வாழமுடியும்- என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

'ஐஸ்லாண்ட்' ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை அண்மையில் யாழ். நகரப்பகுதியில் திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:

கடந்த இருபது வருடங்களாகக் கடற்றொழிலை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனால் கடற்றொழிலாளர்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டு வந்தனர். கடந்த யூன் 18ஆம் திகதிக்குப் பின்னர் ஒரு சில கட்டுப்பாடுகளுடன் 24 மணி நேரமும் கடற்றொழில் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை தொடர வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 1983இல் 48 ஆயிரம் மெற்றிக் தொன் கடல் உணவுகள் பிடிக்கப்பட்டன. கடந்த வருடகால வரலாற்றில் இது சாதனையாக பார்க்கப்படுகின்றது. இதன் பின்னர் வந்த சமாதான காலங்களில் கூட அவ்வளவு தொகை கடல் உணவுகள் பிடிக்க முடியாமல் போனது.

தற்போது 900 - 1000 மெற்றிக் தொன் கடல் உணவுகள் மாதாந்தம் பெறக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமன்றி மூன்று அல்லது நான்கு கூலர் வாகனங்களில் தென்பகுதிக்கு கடல் உணவு அனுப்பப்பட்டு வருகின்றது. இவ்வாறு அனுப்பப்படும் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அதன் மூலம் மக்கள் பயனுற வேண்டும்.

காலத்தின் தேவை கருதி 'ஐஸலாண்ட்' உற்பத்தி தொழிற்சாலை திறக்கப்பட்டிருக்கிறது. இத் தொழிற்சாலை சிறப்பாக இயங்கி எமது மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கும், உற்பத்திகளுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் எமது மக்களே அதிகம் பயனடையக் கூடியதாக இருக்கும்- என்றார். (04-14-15)

# தபால் மூல வாக்களிப்புத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் தபால் மூல வாக்களிப்பிற்குரிய விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 7 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது தபால் மூல வாக்களிப்பிற்கு வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம் என்று தேர்தல் திணைக்கள ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்புகின்ற வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை "மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (04-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் தலைசிறந்த விமர்சகராக தரணியில் மிளிர்ந்த பேராசிரியர் கைலாசபதி

1957 ஆம் ஆண்டில் கைலாசபதி தினகரன் இதழின் துணை ஆசிரியராகச் சேர்ந்தார். ஓராண்டிற்குள் அதன் பிரதம ஆசிரியரானார். 1961 இல் பத்திரிகைத் துறையை விட்டு விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1982 இல் காலமாகும் வரை 25 ஆண்டு காலம் இலக்கிய உலகில் தீவிரமாக உழைத்தார். தமிழின் தலைசிறந்த விமர்சகர்களில் ஒருவர் என்ற சிறப்பைத் தேடிக்கொண்டார். கைலாசபதி மார்க்சிய விமர்சனத்தின் அடிப்படைகளைத் தமிழில் நிறுவிய சிலரில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

நவீன இலக்கிய விமர்சன அரங்கில், கைலாசபதி புகுந்த வேளையில் முனைப்புப் பெற்றிருந்த இலக்கியக் கோட்பாடு யாது என்பதை நாம் கவனித்தல் வேண்டும். அவ்விமர்சனக் கோட்பாட்டை புது விமர்சனக் கோட்பாடு (New Criticism) என்று கூறலாம். 1920, 30 துகளில் பிரிட்டனில் டீ.எஸ்.எலியட்,

ஐ.ஏ. ரிச்சார்ட்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட இலக்கிய விமர்சன இயக்கமே புதுவிமர்சனம் என்னும் கோட்பாடாகும். இக் கோட்பாடு 1940 களிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறை மூலமாக இலங்கைக் கல்வி உலகில் பரவியிருந்தது. அக்காலத்தில் ஆங்கிலத்தில் ஆங்கிலத்துறையில் பேராசிரியராக இருந்த லுடோவைக் என்பவர் இவ்விமர்சன முறையை கைக்கொண்டவர். பன்முக ஆளுமைமிக்க ஆய்வறிவாளர் லூடோவைக், இக்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக இருந்த வி.செல்வ நாயகம் புது விமர்சனக் கோட்பாடுகளை மிக ஆழமாக உள்வாங்கிக் கொண்ட ஒருவராகத் திகழ்ந்தார். இவர் கைலாசபதியின் ஆசிரியராகவும் இருந்தார். தமிழகத்தில் பல்கலைக் கழங்களுக்கு வெளியே இயங்கிய இலக்கியவாதிகள் பலர் புது விமர்சனக் கோட்பாடுகளை தழுவியிருந்தனர். க.நா.சு க. செல்லப்பா ஆகியோர் இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர்கள்.

கைலாசபதி தம் இளமைக்காலத்தில் புது விமர்சனக் கோட்பாட்டின் மூலக் கருத்துக்களையும் தமிழில் அதன் வெளிப்பாடுகளையும் மிக ஆழமாக கற்று அறிந்தார். அதே சமயம் அவரது உள்ளம் மார்க்சியச் சிந்தனையினால் ஆட்கொள்ளப்பட்டது. இரு 'மகாகவிகள்' என்னும் இவரது ஆய்வு 1960இன் முற்பகுதிகளில் வெளிவந்தது. புது விமர்சனக் கோட்பாட்டிலிருந்து வேறுபட்ட ஒரு பாதையை இவர் வகுத்துக்கொண்டாரென்பதை அந்நூல் எடுத்துக் காட்டுவதாய் அமைந்தது.

வ.வே.சு. ஐயர் முதல் டி.கே.சி, க.நா.சு ஈறாக புது விமர்சனம் தன் ஆழமான பதிவுகளை தமிழில் விட்டுச் சென்றது. இவற்றைக் கைலாசபதி மிகுந்த அக்கறையோடு கற்றார், விவாதித்தார், எதிர்வினை புரிந்தார். புது விமர்சனச் சிந்தனைக்கு மாறாக மாற்றுக்கோட்பாடு ஒன்றை தமிழ்இலக்கியக் களத்தில் முன்வைத்தார். இம் மாற்றுக்கோட்பாடு மார்க்சிய விமர்சனக் கோட்பாடாகும்.

இப்பணியில் கைலாசபதி தனித்து நின்று இயங்கினார் என்று கூறுவதற்கு இல்லை. ஆனால் இத்துறையில் 1960 முதல் உள்ள பதினைந்து வருடகால எல்லையில் தீவிரமாக செயற்பட்ட ஒருசிலரில் தலைமைத் தானத்தை அவர் வகித்தார் என்று கூறலாம்.

கைலாசபதியின் நூல்களை உன்னிப்பாக நோக்குபவர்கள் ஒன்றை உணர்வர். தேவிபிரசாத் சட்டோபாத்யாய, டி.டி.கோசம்பி, ஏ. ஆர். தேசாய், ஹிரேன் முக்கர்ஜி ஆகிய இந்திய மார்க்சிஸ்டுகள் மீது கைலாசபதி மிகுந்த ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். அவர்களின் கருத்துக்களை உள்வாங்கி தமது மார்க்சிய இலக்கிய விமர்சனத்தை வரலாற்றியல், சமூகவியல் நோக்கில் அமைத்துக் கொண்டார். ஜோர்ஜ் பொலிட்சர், ராகுல் சாங்கிருத்தியாயன் ஆகியோரது நூல்களில் தமிழ் மொழிபெயர்ப்புகளிலிருந்து மேற்கோள்களைத் தம் கட்டுரைகளில் தாராளமாக இவர் எடுத்தாள்வார். நா. வானமாலை, எஸ். ராமகிருஷ்ணன், ஆர்.கே. கண்ணன், தொ.மு.சி. ரகுநாதன் போன்ற தமிழக மார்க்சிஸ்டு எழுத்தாளர்கள் விமர்சனத்துறையில் ஈடுபட்டார்கள். இவர்கள் மார்க்சிய மெய்யியல், பொருளியல், அரசியல் பற்றிய அடிப்படைகளைக் கூறும் நூல்களைச் சுயமாக எழுதுவதிலும் மொழிபெயர்ப்பதிலும் ஈடுபட்டனர். கைலாசபதி அவ்விதம் செய்யவில்லை. மார்க்சியத்தை உள்வாங்கி தமிழ் விமர்சனத்துறையில் புகுத்துவதே அவர் பணியாக இருந்தது. இலக்கிய விமர்சனமே அவரது முனைப்புக்குரிய செயற்பாட்டுக்களமாக இருந்தது.

நவீன தமிழ் இலக்கியத்தின் அடிப்படைகளை 19ஆம் நூற்றாண்டினதும் 20 ஆம் நூற்றாண்டினது முற்பகுதியினதும் வளர்ச்சிகளைப் பரிசீலனை செய்வதன் மூலமே நிறுவமுடியும் என்று கைலாசபதி உறுதுணையாக நம்பினார். நாவலர், பாரதி, மாதவையர், ராஜம் ஐயர், சுந்தரம்பிள்ளை, மறை மலையடிகள், டி.கே.சி ஆகியோரின் படைப்புக்கள், சிந்தனை, நோக்குமுறை ஆகியவற்றைத் தெளிவுபடுத்தும் வகையில் இவர் எழுதியவை தமிழ் இலக்கிய விமர்சனத்துறையில் சாகாவரம் பெற்ற எழுத்துக்களாகும். பாரதியியலின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களுள் கைலாசபதி முக்கிய இடம் பெறுகின்றார். தமிழ் நாவல் இலக்கியம் எனும் இவரது நூல் நாவலின் தோற்றம், வளர்ச்சி பற்றிய சிந்தனையைத் தமிழில் புதிய தளத்திற்கு எடுத்துச் சென்றது.

நவீன தமிழ் இலக்கியத்தில் காலூன்றி நின்ற கைலாசபதி 19 ஆம் நூற்றாண்டுடன் மட்டும் தன் பின்னோக்குப் பார்வையை நிறுத்திவிடவில்லை. தமிழ் வீரயுகக் கவிதை என்னும் இவரது ஆங்கில நூல் சங்க இலக்கியம் பற்றிய புதிய சிந்தனையைத் தமிழர்களுக்கு வழங்கியது. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ஒப்பியல் இலக்கியம், அடியும் முடியும் ஆகிய இவரது நூல்களில் உள்ள கட்டுரைகள் சங்ககாலம் முதல் நவீன காலம் வரையிலான இலக்கிய வரலாற்றைப் பற்றிய ஒன்றித்த நோக்கு முறையொன்றை வழங்கியது.

கைலாசபதி எழுதிய காலத்தில் மார்க்சியம் என்ற சொல் தமிழ்ச் சூழலில் ஒரு குறிப்பிட்ட கருத்துப் போக்கையே குறித்தது. இன்று மார்க்சியம் என்று பேசும்பொழுது எந்தவகை மார்க்சியம்? என்ற கேள்வியைக் கேட்கும் தேவை தமிழ்ச் சூழலிலும் தோன்றி விட்டது. இப்பின்னணியில் கைலாசபதியின் நிறைகளும் குறைகளும் பலரால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

மார்க்சிய இலக்கிய விமர்சனம் ஒரு ஆய்வு முறையாக தமிழில் வேரூன்றாத காலத்தில் புது



விமர்சனக் கோட்பாடு கோலோச்சிய ஒரு சூழலில் கைலாசபதி புதுப்பாதை வகுத்தார் என்பதே அவரின் சாதனைகளில் மகத்தானது.

ஆனால் புதுவிமர்சனத்தின் அடிப்படைகளை கைலாசபதியால் முற்றாக நிராகரிக்கவும் முடியவில்லை. இறுதிவரை அவருள் ஒரு இலக்கிய ரசனையாளனும் மறைந்திருந்தான் என்பதே இக் கட்டுரையாள ரின் கருத்து. இதற்கு வலுவான ஆதாரம் ஒன்றையும் கைலாசபதி விட்டுச் சென்றுள்ளார். கவிதைநயம் என்ற நூல்தான் அதற்கான ஆதாரம். இந்நூல் கவிஞர் இ. முருகையனுடன் சேர்ந்து கைலாசபதி எழுதினார்.

**கந்தையா சண்முகலிங்கம்**

பேராசிரியர் வி. செல்வநாயகம் கவிதைநயம் நூல்பற்றி மதிப்புரை ஒன்றை எழுதியிருப்பாராயின் அவர் இப்படித்தான் கூறியிருப்பார் என்பது என் துணிவு.

''கவிதை பற்றியும் இலக்கியம் பற்றியும் நான் கொண்டிருந்த கருத்துக்களைச் சரியாக உள்வாங்கிக் கொண்ட எனது தலை மாணாக்கனாக நான் கைலாசபதியைத்தான் கருதுவேன். அவர் என் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டது மட்டுமன்றி அவற்றை (இ. முருகையனோடு இணைந்து) மிக நன்றாகவே எழுத்தில் பொறித் திருக்கிறார். 30 ஆண்டுகளுக்கு மேலாக நான் என் மாணவர்களுக்கு கற்பித்த அனுபவத்தைக் கொண்டு கவிதைநயம் பற்றிய பாடநூல் ஒன்றை எழுதும் ஆசை எனக்கு இருந்தது. நான் கருதிய பணியை என் மாணவர் கைலாசபதி நிறைவு செய்துவிட்டார்.''


## கண்ணீர் அஞ்சலி



பிரபல இசை விற்பன்னரும்
எனது குருநாதருமாகிய
சுர ராக லய விநோத சுரபி,
கலைச்செம்மல், கலாபூஷணம்
லயனல் திலகநாயகம் போல்
அவர்களின் பாதார
விந்தங்களில் கண்ணீரைக்
காணிக்கையாக்குகின்றேன்.

குருநாதா! - உன்
இசையை இனி எப்போ கேட்போம் - உனது
ஸ்வரமழையால் இனி எப்போ
எம்மை நனைய வைப்பாய் - உன்
அன்பான கட்டளையை எப்போ இடுவாய்
உன்முகம் காணாதே ஏங்குகின்றேன்.

நல்லூர். (சி/562978) திருமதி குமுதா உமாகாந்தன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 11 . 1929



உதிர்வு 18 . 12 . 2008

திருமதி மனோன்மணி திருநாவுக்கரசு

திதி: 07.12.2009

எம் அன்புத் தெய்வம் அம்மாவே! ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம் கண்ணை இமைகாப்பது போல் காத்திருந்த என் அன்புத் தாயே! ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதி காண என்றும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'திருமனோவாசா',
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. (92914) பிரிவால் துயருறும்: பிள்ளைகள், பேரன்.

## தோட்டக்காணி விற்பனை

இராச வீதியிலிருந்து (லைடன் பாம் ஒழுங்கையில்) 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள 18 பரப்புத் தோட்டக்காணி- (தனிக் கிணறும், பங்குக் கிணறும் கொண்ட) விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: 0718609753, 0777420240 (92909)

## காணி விற்பனை

கோப்பாய் இராசவீதியில்-கோண்டாவில் இருபாலை வீதி சந்தியிலிருந்து கோப்பாய் நோக்கி 200 மீற்றர் தூரத்தில் வற்றாத கிணற்றுடன் ஏறக்குறைய 21 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:0112367977, 0777221809 (92908)

## தேவை

சாரதிப்பயிற்சி நிலையத்திற்கு சிங்களம் உரையாடத்தெரிந்த, ஆங்கில அறிவுள்ள பெண் பிள்ளை தேவை. தகைமை உள்ளவர்கள் நாளை (08.12.2009) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 1மணி வரையிலான நேரத்தில் காரியாலயத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

நெல்சன் லேனர்ஸ்,
Y.M.C.A கட்டடத் தொகுதி,
109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0213206252, 0773620949 (92900)

## House For Rent

2 Storied house at Point Pedto Road, Anaipanthy with ample parking facilities, previously occupied by an INGO, available for lease/ rent. NGO/ Office preferred.

Cont. 077 2306704/ 0673690019

## வாடகைக்கு

(AC/NonAC) அறைகள் சகல வசதிகளுடனும் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.

27, ... ரோட், ... 0114878686

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி தனலக்ஷ்மி ஈஸ்வரன் அவர்களின் அன்புத் தாய்
அமரர் நாகலிங்கம் மனோன்மணி
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை,
உடுவில், சுன்னாகம்.
(சி/92905)

## மரண அறிவித்தல்

### செல்வன் பிறேமரூபன் விஜிதன்



ஹொலண்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிறேமரூபன் விஜிதன் 28.11.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பிறேமரூபன் - சரோஜாதேவியின் அன்புப் புதல்வரும் கிருஷாந், தர்ஷன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் விஷ்ணுகாந்தி மற்றும் நல்லம்மா (யாழ்ப்பாணம்), அமரர்களான கணபதிப்பிள்ளை-இராசமணி (சரவணை) ஆகியோரின் அன்புப் பேரனும், சுதாகர்(பகறின்) -சித்திராதேவி, ஹேமச்சந்திரன்-சுகிதா, சிவதாஸ், காலஞ்சென்றவர்களான தயாபரன், சுபாஸ்கரன் மற்றும் இளங்கோ-சுகன்ஜா, வடிவேலு -பாக்கியவதி, ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான வில்வராசா, பாலசுந்தரம்(இலங்கை) மற்றும் ரவிச்சந்திரன்- பத்மாசினி குடும்பம் (கொலண்ட்) நந்துஜா(யாழ்ப்பாணம்) ஆகியோரின் ஆசைமருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் CREMATORIUM UITVAART, CENTRUM NOORDERVELD, STRUCTUURBAAN-1, 3439 MA NIEUWEGEIN, HOLLAND எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இன்று (07.12.2009) திங்கட்கிழமை கொலண்ட் நேரப்படி 2.30 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89/2. பத்திரகாளி வீதி,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்
தொ.பே.: 0774649153, 0771882152
தகவல்: திருமதி விஷ்ணுகாந்தி நல்லம்மா குடும்பத்தினர்
(92919)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் இந்திய அரசு இரட்டை வேடம்!

## சபையில் அ.தி.மு.க. மற்றும் இடதுசாரிகள் கடும் சீற்றம்

சென்னை, டிச. 07

இலங்கைத் தமிழர் நிலையில் இந்தியாவின் இந்த இரட்டை வேடத்திற்குக் காரணம் என்ன என்பதை விளக்க வேண்டும். ஈழத் தமிழர்களின் படுகொலைக்குக் காரணமாக இந்திய அரசு இருந்துள்ளது எனக் குற்றம் சாட்டுகிறேன் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜா தெரிவித்தார்.

மக்களவையில் ஈழத் தமிழர் பிரச்சினை மீதான கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் இன்றைக்கு தமிழர்கள் அனுபவித்து வரும் துன்பம், உலகில் வேறு யாராவது அடைந்திருப்பார்களா என்று கூறமுடியாது.

இலங்கையில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்டது எனக் கூறப்படும் போர் தமிழர்கள் மீது தொடரப்பட்ட போராகும். இந்திய அரசின் முழு உதவியுடன் நடந்த போராக அது இருந்தது. இலங்கை கேட்டபோதெல்லாம் ஆயுதம் வழங்கியுள்ளது.

இவை அனைத்து தமிழர்களையும் கொல்லப்பயன்பட்டுள்ளன. 2 இராணுவக் கப்பல்களையும் அனுப்பி இந்தியா உதவி செய்துள்ளமை அந்த நாட்டினராலேயே அம்பலமாகியுள்ளது.

இலங்கைத் தமிழர் நிலையில் இந்தியாவின் இந்த இரட்டை வேடத்திற்கு காரணம் என்ன என்பதை விளக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் படுகொலைக்கு காரணமாக இந்திய அரசு இருந்துள்ளது என்று குற்றம் சாட்டுகிறேன்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கையை ஐ.நா.மன்றத்தில் கடுமையாக எதிர்த்த மனித உரிமை பிரதிநிதி நவநீதம்பிள்ளை மீது இந்தியா கடுமையாக நடந்து கொண்டது ஏன்? மனித உரிமை பாதுகாப்பில் ஏன் இந்தியா இரட்டை வேடம் போடுகிறது.

சுமார் ஒரு லட்சம் பேர் சொந்த இடங்களுக்கு சென்றுவிட்டனர் எனக் கூறும் இந்தியாவிடம் அவர்கள் உண்மையிலேயே அவர்கள் விரும்பிய இடங்களில் குடியமர்த்தப்பட்டார்களா என்பதை உறுதி செய்யும் ஆதாரங்கள் ஏதும் இல்லை.

தமிழர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனரா என்பதை கண்காணிக்கவும், நிவாரண உதவிகள் கிடைக்கின்றனவா என்று தெரிந்துகொள்ளவும், இந்தியாவிலிருந்து அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் கொண்ட குழு நேரடியாக சென்று ஆய்வு நடத்திவர மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் - என்றார்.

அ.தி.மு.க. உறுப்பினர் மணியன் பேசுகையில்,

இலங்கையில் போர் முடிவடைந்துள்ள நிலையில், முன்னாள் இராணுவத் தளபதி, சீனா மற்றும் பாகிஸ்தான் உதவியுடன் போரில் வெற்றி பெறவில்லை என்றும், இந்தியாவினால்தான் வெற்றி பெற முடிந்தது என்றும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இதுவரை 10 லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். இலங்கைக்கு ஆளும் கூட்டணி எம்.பி.க்கள் குழுவை அனுமதித்த மத்திய அரசு அனைத்துக் கட்சி குழுவை அனுப்பாதமை ஏன்?

குழுவில் சென்ற திருமாவளவன் வேதனை தெரிவித்திருக்கிறார். மற்றவர்கள் மௌனம் சாதிப்பது ஏன்? இந்திய பிரதமர், உள்துறை அமைச்சர், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஆகியோரில் ஒருவர் கூட இலங்கைத் தமிழர்களின் அவல நிலை பற்றி வாய் திறக்காதமை ஏன் - என்றார்.

**இந்தியச் செய்திகள்**

# முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, டிச. 07

லிபரான் குழுவின் அறிக்கையின்படி பா.ஜ.க. தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சென்னையில் உள்ள மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் வீட்டை முற்றுகையிட முயன்ற தவ்ஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோல தமிழகம் முழுவதும் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய ஏராளமான முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பாபர் மசூதி இடிப்பு தினமான (டிசம்பர் 6) நேற்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முஸ்லிம் அமைப்புகள் பல கண்டன ஆர்ப்பாட்டம், பேரணி ஆகியவற்றை மாநிலம் முழுவதும் நடத்தின.

சென்னையில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் சார்பில் அண்ணாசாலையில் உள்ள அண்ணா சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ்வமைப்பின் பொதுச்செயலாளர் எஸ்.ஹைதர் அலி, மாநிலச் செயலாளர் மௌலானா நாசர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு சாரதி உரிமம் வழங்க நடவடிக்கை

## புழல் முகாமில் ஸ்டாலின் அறிவிப்பு



செங்குன்றம், டிச. 07

விதிமுறைகளை தளர்த்தி இலங்கைத் தமிழர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

சென்னையை அடுத்த புழல் அகதிகள் முகாமில் இலவச கலர் ரி.வி. வழங்கும் விழா நடந்தது. ரி.விகளை வழங்கிவைத்துப் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்து நீண்டகாலமாக வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் வகையில் தமிழக முதல்வர் கருணாநிதி ரூபா 100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். அதனடிப்படையில் தமிழகத்தில் முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு பல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

விளையாட்டு சாதனங்களாக ரூபா 4 லட்சத்து ஆயிரம் ரூபாவும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவச பஸ் கட்டணம் ரூபா 8 லட்சத்து 7 ஆயிரமும், குடியிருப்புகளை பழுது பார்க்க குடிநீர் வசதி, கழிவறை கட்ட, பழைய கழிவறைகளைப் புதுப்பிக்க, புதிய கால்வாய்களை அமைக்க, கால்வாய்களை பழுது பார்க்க, வீதிகளை அமைக்க, புதிய மின்கம்பங்கள் இணைப்புகள் அமைக்க ரூபா 45 கோடியே 39 லட்சத்து 67 ஆயிரமும், கொங்கிரீட் வீடுகள் கட்ட ரூபா 54 கோடியே 60 லட்சத்து 33 ஆயிரம் என ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் சாரதி உரிமம் வழங்க அனைத்து விதிமுறைகளையும் தளர்த்தி உரிமம் வழங்க நடவடிக்கை எடுத்து உத்தரவிடப்பட்டுள்ளது. புழல் முகாமில் தற்போது ஜே.சி.பி. இயந்திரம் மூலம் வீதிகள் சரி செய்யப்பட்டுள்ளன. புதிய மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கழிவு நீர் அகற்றப்பட்டு விளையாட்டு மைதானங்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

440 குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு திருமண உதவிதொகையும், 2 பேருக்கு இறுதிச்சடங்கு நிதியும், இங்குள்ள இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் சாதனை திட்டமான இலவச மருத்துவக்காப்பீடு திட்டத்திற்கு புகைப்படம் எடுக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு தமிழக அரசு எப்போதும் துணையிருக்கும் - என்றார்.

# மீண்டும் இலங்கைக்கு எம்.பிக்களை அனுப்புவது கண்துடைப்பு நாடகமே

## ராமதாஸ் குற்றச்சாட்டு



தருமபுரி, டிச. 07

நிவாரணப் பணிகளைப் பார்வையிட இலங்கைக்கு எம்.பிக்கள் குழுவை அனுப்பவுள்ளோம் என மத்திய அரசு அறிவித்துள்ளமை கண்துடைப்பு நாடகமே - என்று பா.ம.கவின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறினார்.

தருமபுரியில் வன்னியர் சங்க மாநாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், பங்கேற்றஅவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கை முகாம்களை நடைபெறும் நிவாரணப் பணிகளைப் பார்வையிட இந்தியா விரைவில் எம்.பிக்கள் குழுவை அனுப்பி வைக்கும் என வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்திருந்தார்.

இலங்கை முகாம்களில் நிவாரணப் பணிகளைப் பார்வையிடுவதற்காக தமிழக அரசு அனுப்பிய எம்.பிக்களால் எவ்வித பயனுமில்லை. இந்நிலையில் இந்திய அரசு நிவாரணப் பணிகளை பார்வையிட அனுப்பும் எம்.பிக்கள் குழுவால் இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வித பயனும் இல்லை. இது மக்களை ஏமாற்றும் ஒரு கண்துடைப்பு நாடகம்.

ஆந்திரத்தில் தெலுங்கானவைத் தனியாகப் பிரிப்பது, மகாராஷ்டிரத்தில் விதர்பாவைத் தனியாக பிரிப்பதால், அம்மாநிலங்கள் சமூக, பொருளாதாரங்களில் முன்னேற்றமடையும்.

இலங்கையில் தனி ஈழ நாடு அமைக்க இந்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். இலங்கையில் தனி ஈழ நாடு அமைந்தால், இந்தியாவுக்கு அதிக பாதுகாப்பு இருக்கும் - என்றார்.

# இலங்கைக்கு மீண்டும் எம்.பிக்கள் குழு: அறிவிப்பு மகிழ்ச்சி என்கிறார் கலைஞர்

சென்னை, டிச. 07

இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பணிகளைப் பார்வையிட இலங்கைக்கு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அனுப்பப்படும் என்று நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அறிவித்திருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கிறது - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

மக்களவையில் பா.ஜ.க. துணைத்தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் கொண்டு வந்த கவனஈர்ப்புத் தீர்மானத்துக்கு பதிலளித்து அமைச்சர் கிருஷ்ணா, மக்களவையிலும், மாநிலங்களவையிலும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.



அந்த அறிக்கையில், இலங்கைக்கு எம்.பிக்கள் அடங்கிய மற்றொரு குழுவை அனுப்புவது பற்றி அரசு பரிசீலிக்கும். இலங்கைப் பிரச்சினையை தமிழர் பிரச்சினையாக மட்டுமின்றி தேசிய பிரச்சினையாக அணுகுகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தானாகவே முன்வந்து இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி பேசும்போது, இலங்கை அரசு இப்போது கவனம் செலுத்த வேண்டியது தமிழர்களை சொந்த இடங்களில் குடியமர்த்துவது, இயல்பு வாழ்க்கை தொடங்க நிவாரண உதவி அளிப்பது, சமரசப் பேச்சு நடத்துவது ஆகியவை மீதுதான். இந்த முயற்சிக்கு இந்தியா தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்யும்.

தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வகை செய்யும் திட்டத்தை அமுல்படுத்தும்படி இலங்கை அரசை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்று சொல்லியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் இப்படிப்பட்ட கருத்துகளைச் சொல்லியிருப்பது உள்ளபடியே நமக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகின்ற செய்திகளாகும் - என்றுள்ளது.

## பிரபாகரனின் படத்தைக் கிழித்து அவமானப்படுத்துவதா?

# காங். இளங்கோவனைக் கண்டித்து சீமான் தலைமையில் ஆர்ப்பாட்டம்!

சென்னை, டிச. 07

முன்னாள் மத்திய இணை அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனைக் கண்டித்து 'நாம் தமிழர்' இயக்கத் தலைவரும் இயக்குநருமான சீமான் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மெமோரியல் ஹால் அருகில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள் பெண்கள் உட்பட 500 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். கைகளில் கண்டன அட்டைகளும் வைத்திருந்தனர்.

இது குறித்து சீமான் கூறியவை வருமாறு -

கடந்த மாதம் 26ஆம் திகதி ஈரோட்டில் வைத்து தமிழரின் தேசியத் தலைவர் பிரபாகரனின் படத்தை கிழித்து ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவமானப்படுத்தினார். இந்த சம்பவம் இங்குள்ள தமிழர்களின் உணர்வை பாதிக்கும் என்று தெரிந்தும் அவர் இப்படி நடந்து கொண்டார். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்த நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் அவர் வீட்டின் மீது யாரோ பெற்றோல் குண்டை வீசியுள்ளனர். இது தொடர்பாக நாம் தமிழர் இயக்கத்தை சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் கைது செய்யப்பட்ட 4 பேரும் எந்தத் தவறும் செய்யாதவர்கள். அவர்கள் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 4 பேரின் மீதும் போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் விடுதலை செய்யப்படும் வரை எங்கள் போராட்டம் தொடரும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாபமாகத் தொடரை இழந்தது இலங்கை!



இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. அத்துடன், 3 போட்டிகளைக் கொண்ட தொடரையும் 0-2 என்ற கணக்கில் இழந்தது.

இந்தியா-இலங்கை அணிகளுக்கிடையில் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடந்து வந்தது.

இதில் முதல் போட்டி சமனிலையில் முடிவடைந்தது. இரண்டாவது போட்டியில் இந்திய அணி பெருவெற்றிகொண்டது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 393 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தனது இன்னிங்ஸிற்காக இந்திய அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 729 ஓட்டங்களைக் குவித்து, ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இந்திய அணியின் பாரிய ஓட்டக் குவிப்புக்கு ஷேவாக்கின் 293 ஓட்டங்களும் (254 பந்துகள், 40 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள்) டோனியின் 100 ஓட்டங்களும் (ஆட்டமிழக்காமல்) பேருதவியாக இருந்தது.

பின்னர் 336 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இலங்கை 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவின்போது எந்தவித விக்கெட்டுகள் இழப்புமின்றி 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு மேற்கொண்டு 322 ஓட்டங்களைச் சேர்க்க வேண்டிய கடுமையான நெருக்கடிக்கு மத்தியில் டில்ஷானும், பரனவிதானவும் முந்தைய நாள் ஓட்ட எண்ணிக்கையுடன் நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்டத்தைத் தொடங்கினார்கள்.

இலங்கை அணியை நோக்கி சுழல் மற்றும் வேகப்பந்து வீச்சு என இரண்டு விதமான தாக்குதல்களை இந்தியா மாறி மாறித் தொடுத்தது.

இலங்கை அணி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது டில்ஷான் (16), ஹர்பஜன் சிங் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

ஆனால், திரையில் பார்க்கும்போது பந்து 'லெக் ஸ்டம்'புக்கு மிகவும் வெளியே செல்வது தெளிவாகத் தெரியவந்தது. நடுவர் டேரில் ஹார்பரின் தவறான தீர்ப்புக்கு டில்ஷான் பலியானார். அவர் சதம் அடித்த முதல் இன்னிங்ஸிலும் தவறான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் அணித்தலைவர் சங்கக்கார, பரனவிதானவுடன் ஜோடி சேர்ந்தார். அணியின் நிலைமையை உணர்ந்து இருவரும் மிகவும் பொறுமையாக ஆடினார்கள்.

உணவு இடைவேளைக்குப் பின்னர் அணி 119 ஓட்டங்களை எட்டியபோது, இந்த ஜோடியை ஸ்ரீசாந்த் பிரித்தார். அவரது பந்தில் பரனவிதான (54) எல்.பி.டபிள்யூ. ஆனார். இதன் பின்னர் அடுத்த 15 ஓவர்கள் இடைவெளியில் மஹேல ஜெயவர்த்தன (12), சமரவீர (0), மத்யூஸ் (5) ஆகியோர் வரிசையாக ஆட்டம் இழந்தனர்.

அப்போது இலங்கை அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதனால், 4ஆவது நாளிலேயே ஆட்டம் முடியக்கூடிய சூழல் தென்பட்டது. ஆனால், அணித்தலைவர் சங்கக்கார நிலைத்து நின்று அந்த நிலைமையை மாற்றினார். 6ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தனவும் அவருக்கு ஓரளவு ஒத்துழைப்புக் கொடுத்ததால், அணி சற்று மீள்வது போல் தெரிந்தது. பின்னர் முக்கியமான கட்டத்தில் பிரசன்ன ஜெயவர்த்தன (32) ஒஜாவின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

அவரைத் தொடர்ந்து குலசேகர இறங்கினார். 6 விக்கெட்டுகள் சரிந்த பிறகு அணித்தலைவர் சங்கக்கார, தனது நிதான ஆட்டத்தைக் கைவிட்டு அதிரடியாக ஆடி தனது 21ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். இந்தியாவுக்கு எதிராக அவர் பெற்ற 3ஆவது சதம் இதுவாகும்.

மறுபுறத்தில் நின்ற குலசேகரவும் இந்தியத் தாக்குதலைச் சமாளித்து ஆடினார்.

பின்னர் 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களைப் பெற்றது. தனி வீரராகப் போராடிக் கொண்டிருந்த அணித்தலைவர் சங்கக்கார 133 ஓட்டங்களுடனும், குலசேகர 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்தது இலங்கை அணி. நேற்றுமுன்தினம் நம்பிக்கையுடன் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த சங்க்காரா மேலதிகமாக 4 ஓட்டங்களை மட்டும் பெற்று - மொத்தமாக 137 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து ஹேரத் (3), முரளிதரன் (13), குலசேகர (19) ஆகியோரும் ஆட்டமிழந்து வெளியேற இலங்கையின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது.



இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 309 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால், இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

கடைசியாகக் களமிறங்கிய வெலகெதர எந்தவித ஓட்டத்தையும் பெறாமல் களத்தில் இருந்தார்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில் சஹீர்கான் 5 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங், ஒஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், சிறிசாந் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் ஷேவாக் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியிலும் தோல்வியடைந்தமையால் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 0-2 என்ற கணக்கில் தொடரையும் இழந்தது.

## 'நம்பர்—1' இந்தியா

ஐ.சி.சியின் டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதல் முறையாக முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதன் மூலமே இந்திய அணிக்கு இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.

ஐ.சி.சியினால் நேற்று வெளியிடப்பட்ட டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் இந்திய அணி 124 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும் தென்னாபிரிக்கா 122 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் ஆஸ்திரேலிய அணி 116 ஓட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இலங்கை (115), இங்கிலாந்து (105), பாகிஸ்தான் (84), நியூஸிலாந்து (80), மேற்கிந்தியத் தீவுகள் (76), பங்களாதேஷ் (13) ஆகிய அணிகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

## ஆஸிக்கெதிரான டெஸ்ட்: மே.இ.தீவுகள் 35 ஓட்டங்களால் முன்னிலை

அடிலெய்ட், டிச.6-

மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 439 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடந்து வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி,

முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 336 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் 2ஆவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 451 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தது.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி, பதிலடி கொடுக்கும் விதமாக ஆடியது. 2ஆவது நாள் ஆட்ட நேரமுடிவில் விக்கெட் இழப்பின்றி 174 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. வோட்சன் 96 ஓட்டங்களுடனும், சைமன் கடிச் 71 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணி, 439 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்து.

ஆஸ்திரேலிய அணி சார்பாக வோட்ஷன் (96), கடிச் (80), கிளார்க் (71), ஹெடின் (55 ஆட்டமிழக்காமல்) ஆகியோர் சிறப்பாக விளையாடி அரைச் சதங்களைப் பூர்த்தி செய்தனர்.

ஏனைய வீரர்கள் குறுகிய ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில் பீன் 5 விக்கெட்டுக்களையும், ரோஜ் 3 விக்கெட்டுக்களையும் சமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 12 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது எந்தவித விக்கெட் இழப்புமின்றி 23 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

கெய்ல் 12 ஓட்டங்களுடனும், பாரத் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

## விளையாட்டு அரங்குகளில்

## நியூஸிலாந்துடனான டெஸ்ட்; பாக். வென்று சமன் செய்தது

வெலிங்டனில் பாகிஸ்தான், - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ஆம் நாளான நேற்று, பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொகமட் ஆஸிப்பின் அபாராத் தாக்குதலில் நியூஸிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் வெறும் 263 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன்மூலம் பாகிஸ்தான் 141 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை 1-1 என்று சமன் செய்துள்ளது.

பாகிஸ்தான் -நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்து வென்றது.

இந்நிலையில் இரண்டாவது போட்டி கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தனது இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து வெறும் 99 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 239 ஓட்டங்களைச் சேர்த்தது.

404 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய நியூஸிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து நேற்று 4ஆம் நாள் ஆட்டத்தைத் தொடங்கிய நியூஸிலாந்து அணி, புல்டனின் விக்கெட் மொகமட் ஆமீரின் அபாரப் பந்து வீச்சில் இழந்தது.

அவரைத் தொடர்ந்து கிராண்ட் எலியட் 6 ஓட்டங்களைப் பெற்றவேளை கனேரியாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

ஆனால், ரோஸ் ரெய்லர் மிகவும் அபாரமான ஒரு இன்னிங்ஸை விளையாடினார். அவர் 97 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆமீரின் பந்துவீச்சில் மிஸ்பாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிந்தபோது நியூஸிலாந்தின் நம்பிக்கையும் தகர்ந்தது.

ஏனைய வீரர்களான மக்கலம் (24), விற்றோரி (40), ஓ பிரையன் (31) ஆகியோரும் ஆட்டமிழக்க நியூஸிலாந்து 263 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன் மூலம் பாகிஸ்தான் அணி 141 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில் மொகமட் ஆஸிப் 5 விக்கெட்டுகளையும், கனேரியா 3 விக்கெட்டுகளையும், ஆமீர் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மொகமட் ஆஸிப் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, 3 போட்டிகளைக் கொண்ட தொடரை 1-1 என்ற கணக்கில் சமனிலைப்படுத்தியுள்ளது.

## ஓய்வுபெறுகிறார் ஓ பிரையன்

நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஓ பிரையன் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்ததும் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போகிறார் என அறிவித்துள்ளார்.

21 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 67 விக்கெட்டுகளையும், 10 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 14 விக்கெட்டுகளையும் ஓ பிரையன் வீழ்த்தி உள்ளார்.

தனது ஓய்வுகுறித்து ஓ பிரையன் கூறியவை வருமாறு:-


''எனது மனைவி இங்கிலாந்தில் வேலைசெய்து வருகிறார். எனவே எனது எதிர்காலம் இங்கிலாந்தைச் சார்ந்தே உள்ளது. எங்களுக்கு திருமணமாகி இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன.

ஆனால், வெறும் 9 மாதங்கள் மட்டுமே ஒன்றாக வாழ்ந்திருக்கிறோம். எனக்கு இப்போது 33 வயது ஆகிறது. எனது மனைவிக்கு நல்ல கணவராக இருந்து, குடும்ப வாழ்க்கையைத் தொடங்கி, அந்த நாட்டில் எனது எதிர்காலத்தை உறுதி செய்வதே முதல் நோக்கமாகும்.

ஓய்வுக்குப் பிறகு இங்கிலாந்து உள்ளூர் அணியில் விளையாட விரும்புகிறேன்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்ட ஐ. எஸ். ஓ. நிறுவனமும் நோர்வேயைத் தளமாகக் கொண்ட டி.என். பி. நிறுவனமும் இணைந்து யாழ்.யூரோவில் நிறுவனத்திற்கு தரமுகாமைத்துவ முறைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் நல்லூரில் உள்ள யூரோவில் நிறுவன மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நோர்வே டி.என்.பி. நிறுவனத்தின் தர நிர்ணய சேவைப்பிரிவு செயற்பாட்டு முகாமையாளர் கே.விவேகானந்தன் தரச் சான்றிதழை யூரோவில் பணிப்பாளர் சி.வி.கே.சிவஞானத்திடம் வழங்குவதையும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா விவேகானந்தனுக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதை மேல்வரிசையிலும்-

நிகழ்வில் சித்த ஆயுள் வேத அமைச்சர் திஸ்ஸ கெரலியத்த, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ். மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் உரையாற்றுவதை கீழ் வரிசையிலும் காணலாம். (படங்கள்:- லக்ஸ்மன்)

# நிதி சேகரிக்கும் ஆசாமிகளிடம் ஏமாறவேண்டாம்; படைத் தலைமையகம் மக்களை எச்சரிக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 7

குடாநாட்டில் போலி ஆசாமிகள் நிதி சேகரிப்பது குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு யாழ்ப்பாணத்தின் 51ஆவது படையணித் தலைமையகம் எச்சரித்திருக்கிறது.

ஊனமுற்ற படைவீரர்களுக்காக நிதி சேகரிப்பதற்காக யாழ்.பாதுகாப்பு படைகளின் தலையைகத்தால் எவருக்குமே அனுமதி வழங்கப்படவில்லை. படையினரின் பெயரில் எவராவது பலவந்தமாக நிதி அல்லது பொருள்கள் சேகரித்தால் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் படைத்தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து 51ஆவது படைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து 6 மாத காலத்துக்குள் மக்களுக்கு சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழக்கூடிய சூழ்நிலையை பாதுகாப்புப் படையினர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மக்களின் அன்றாட வாழ்விற்கு தடைகள் ஏற்படுத்தும் விதத்தில் சில நபர்கள் ஊனமுற்ற படைவீரர்களின் பிள்ளைகளது நலன்புரி நடவடிக்கைகளுக்கு என்றும்-

சிங்கள, தமிழ், முஸ்லிம் அநாதைச் சிறுவர்களுக்கு உணவளிப்பதற்கு என்றும் கூறிப் பொது மக்களிடமிருந்து வற்புறுத்தி பணம் சேகரிப்பது தெரியவந்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் பணம் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நபர்கள் தமிழில் உரையாடும் போது சிங்களவர்கள் தமிழ் கதைப்பது போன்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. எவ்வாறெனினும் குடாநாட்டுப் பாதுகாப்பு படைகளின் ஊனமுற்ற படைவீரர்களுக்காக நிதி சேகரிப்பதற்கு யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தால் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை மீண்டும் அறியத் தருகின்றோம் - என்றுள்ளது. (ஒ)

# “சிரம வாசனா” சீட்டிழுப்பு வெற்றியாளர் விவரம்

கொழும்பு, டிசெ.07

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 206 ஆம் இலக்க ''சிரம வாசனா'' லொத்தரில் வெற்றி பெறும் இலக்கங்கள் V, 17, 20, 37, 43 என்ற வரிசையில் அமைந்தன.

இச் சீட்டிழுப்பில் 4 இலக்கங்களையும் சரியாக எழுதிய ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபா பரிசாகக் கிடைத்துள்ளது. 3இலக்கங்களைச் சரியாக எழுதிய 163 பேருக்கு ஆயிரம் ரூபா வீதம் பரிசுகள் வழங்கபடும்.

2 இலக்கங்களைச் சரியாக எழுதிய 6,237 பேருக்கு 50 ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும்.

ஒரு இலக்கத்தைச் சரியாக எழுதிய 67,851 பேருக்கு இருபது ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும்.

இந்த விவரங்களை தேசிய லொத்தர் சபை நேற்றிரவு உத்தியோகபூர்வமாக வெளியிட்டது. (அ)

# முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இன்று நல்லூரில் கண்காட்சி, விற்பனை

யாழ்ப்பாணம் கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவினரின் ஏற்பாட்டில் கண்காட்சியும் விற்பனையும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சி.சி.த.க. பாடசாலையில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம், வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நடராசா, யுனிசெவ் நிறுவனச் செயற்றிட்ட அலுவலர் செல்வி பே.ராதிகா, சி.சி.த.க. பாடசாலை அதிபர் எஸ்.ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-4-86)

# கிளிநொச்சி அரச அலுவலர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபடலாம்

## உடன் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்து

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ள கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்துள்ள அரச அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தற்போது கடமை புரியும் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் அறிவித்துள்ளவை வருமாறு -

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தைச் சேர்ந்த அரச அலுவலர்கள், தற்போது தற்காலிக இணைப்புப் பெற்றுள்ளவர்கள் அத்தகைய தற்காலிக இணைப்பைப் பெற்றுள்ளவர்களில் எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்ற விரும்புகின்ற அரச அலுவலர்கள் தற்போது கடமைபுரியும் திணைக்களத் தலைவர்கள் ஊடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம். விண்ணப்பிக்க விரும்பும் அலுவலர்கள் விண்ணப்பங் களை விரைவாக அனுப்புவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ஒ-4-9)

## அகதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர்கள் இவ்வாறு தொடர்பின்றித் தடுத்துவைக்கப்படுவதினால் ஏற்படக் கூடிய அபாயத்தையும் சுட்டிக்காட்டியுள்ள கொக்ஸ் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பொதுமக்கள் விடுவிக்கப்படுவது சமீபகாலங்களில் அதிகரித்துள்ளபோதிலும் இதுதொடர்பான பல கரிசனைகள் இன்னமும் தொடர்ந்து காணப்படுகின்றன.

வவுனியாவில் முகாம்களில் உள்ள மக்களுக்கு அந்த முகாம்களில் இருப்பதற்கு அல்லது வேறு தங்குமிடங்களைத் தேடுவதற்கு அல்லது வீடு திரும்புவதற்கு உரிய அனுமதியை தான் வழங்குவதாக அரசு தெரிவித்துள்ளது.

எனினும், முகாம்களிலிருந்து வெளியேற விரும்பும் குடும்பங்கள்மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த மக்கள் 15 நாள்களில் மீண்டும் முகாமிற்கு வரவேண்டும் எனக் கேட்கப்பட்டனர் என ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாம்களிலிருந்து மக்களை நிரந்தரமாக விடுவிப்பதற்கு அப்பால் புதிய இடங்களில் அவர்கள் கைதுசெய்யப்படமாட்டார்கள், விசாரணைக்குட்படுத்தப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழி அவசியம்.

இடம்பெயர்ந்த மக்கள் எங்கு சென்றாலும் அவர்களைப் பராமரிப்பது என்ற தனது கடப்பாட்டை அரசு நிறைவேற்றுவது அவசியம்.

ஏற்கனவே விடுவிக்கப்பட்டவர்களுக்கு உரிய உதவி வழங்கப்படாதமையும் கரிசனைக்குரிய இன்னுமொரு விடயமாகும்.

இந்த மக்கள் இடைநடுவில் கைவிடப்பட்ட சம்பவங்களை பல கிறிஸ்தவ அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக முரணான தகவல்களை அரசு வெளியிடுகின்றது.

தற்போது வழங்கப்பட்டுள்ள நடமாட்ட சுதந்திரம் நாட்டின் அனைத்து முகாம்களுக்கும் பொருந்துமா என்பது தெரியாத விடயமாகவுள்ளது.

மக்கள் விடுவிக்கப்படுவதும், மீள்குடியேற்றப்படுவதும் துரிதப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் அந்த மக்கள் தங்களது மீள்குடியேற்றம் தொடர்பான முடிவைத் தாங்களே எடுப்பதற்கு அரச அதிகாரிகள் அனுமதிக்கவேண்டும்.

அந்த மக்களின் வாழ்விடங்களின் தற்போதைய நிலைமை குறித்து அதிகாரிகள் அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் - என்று கூறினார். (சி)

## யுத்தத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக அந்த நாட்டு வங்கியிடமிருந்து உயர் வட்டிக்குப் பல்லாயிரம் கோடி ரூபாவைக் கடனாக இலங்கை பெறுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் யுத்தத்திற்குப் பிந்தைய அபிவிருத்தித் திட்டங்களின் பெரும் பகுதியை சீனாவே பொறுப்பெடுத்துள்ளது.

சுமார் எழுநூறு கோடி ரூபா பெறுமதியிலான அபிவிருத்தித் திட்டங்களை அது முன்னெடுக்கிறது.

இதற்கான நிதி சீனாவின் எக்ஸிம் வங்கியிலிருந்தே பெறப்படுகின்றது. இதன் காரணமாகப் பல வருடங்களுக்கு வட்டியுடன் இதனை மீளச் செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை உள்ளது.

வங்கியில் வீதிகளை நிர்மாணிக்கும் பொறுப்பு நான்கு சீன நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபரில் அமைச்சரவை இது குறித்து தீர்மானித்தது. மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரட்ண வீதி அபிவிருத்தி அதிகாரசபையை சீன ஒப்பந்தக்காரர்களுடன் உடனடியாக ஒப்பந்தங்களைச் செய்யுமாறு கோரியுள்ளார்.

சீனாவின் தேசிய விமானத் தொழில்நுட்ப ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம், சீனத் துறைமுகம், சீன ரயில்வே சேவை உட்பட நான்கு நிறுவனங்களிடம் 9 ஆயிரத்து430 கோடி ரூபா பெறுமதியான திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சீனத் தரப்பு முன்னெடுக்கும் இந்தப் புனர்நிர்மாண அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கையர்கள் எவரும் பணியில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். சீனாவைச் சேர்ந்த தொழிலாளர்களே ஈடுபடுத்தப்படுவர் என்றும் கூறப்பட்டது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானி கெலியின் மரணத்தில் மர்மம் நீடிக்கிறது பிரிட்டிஷ் வைத்தியர்கள் ஆறு பேர் சட்ட நடவடிக்கை



ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கவில்லை என்ற அடித்துக் கூறிய ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத பரிசோதகரும், விஞ்ஞா னியுமான கலாநிதி டேவிட் கெலி (வயது 59) இன் திடீர் மரணம் குறித்து மறுபடியும் விசாரிக்க வேண்டுமென்று மரணம் இடம் பெற்று ஆறு வருடங்களின் பின் பிரித்தானியாவின் சிரேஷ்ட வைத்தியர்கள் ஆறு பேர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்கவில்லை; அந்நாட்டை ஆக்கிரமிக்கின்றமையை நியாயப்படுத்தவே இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டது என்று கெலி 2003 ஆம் ஆண்டு தாம் இறப்பதற்கு சில நாள்களுக்கு முன் பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அவரின் மரணம் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தீர்ப்பு தவறானது, அவர் கொல்லப்பட்டிருக்கின்றார் என்று தெரிவித்து இந்த வைத்தியர்கள் தற்போது சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் இம்மரணம் தொடர்பான விசாரணைகளை மீண்டும் நடத்தவேண்டும் என்று சட்டமா அதிபரைக் கோரி உள்ளார்கள்.

அன்றைய பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயரால் இம்மரணம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இம்மரணம் தற்கொலை என்ற அறிவித்துள்ளமை தவறானது என்று இம்மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதற்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி இரணைமடு நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு குழாய் நீர் வழங்கும் வசதிகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது திட்டத்தின் நிர்மாணப் பணிகளை அடுத்த வருடம் ஆரம்பித்துவைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்தின் நிர்மாணப் பணிகளைத் துரித கதியில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளும் யாழ். குடாநாட்டில் பதிவாகவில்லை. குறித்த பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் இராணுவத்தினரின் பல்வேறு பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

40 ஆயிரம் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ள பூரணமான சுதந்திர நடமாட்ட சந்தர்ப்பத்தை மக்கள் இழந்துள்ளனர் -

இயல்பு நிலைமைக்குத் திரும்பியதன் பின்னரும் மிகப்பெரும் எண்ணிக்கையான படையினரை யாழ்ப்பாணத்தில் குவிக்க வேண்டிய அவசியமில்லை -

யுத்த காலத்தில் பெருந்தொகையான படையினரின் பிரசன்னம் இன்றியமையாதது என்ற போதிலும், தற்போது நிலைமைகள் மாறியுள்ளது -

யாழ்ப்பாண குடாநாட்டின் சகல பகுதிகளிலும் நிலை நிறுத்தப்பட்டுள்ள படையினரால் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன -

சோதனைச் சாவடிகள் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ-சி)

## இருதரப்புகளுடனும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மையினரின் இனப்பிரச்சினை விடயத்திற்கான தீர்வு, அவர்களின் உடனடிப் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்கான உத்தேசங்கள் போன்றவை தொடர்பில் இரு பிரதான வேட்பாளர்களின் கருத்து நிலைப்பாட்டையும் கேட்டறிந்த பின்னரே தமது தீர்மானத்தை எடுப்பது என்று தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள்.

"இரு வேட்பாளர்கள் தரப்பிலும் (ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் தரப்பிலும்) இருந்து வரக்கூடிய திட்டங்கள், தீர்வு யோசனைகளுக்கு இடமளிப்போம். அவற்றை ஆராய்ந்து முடிவு செய்வோம்.

''போகின்ற நிலைமையைப் பார்த்தால் தமிழ் மக்களின் ஆதரவின்றி எந்த வேட்பாளரும் வெல்ல முடியாது என்ற நிலைமை உறுதியாகி வருகிறது. இந்தச் சூழலில் எங்களுக்கு (தமிழர்களுக்கு) என்ன நியாயத்தைச் செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். இரு தரப்புகளும் தத்தமது நிலைப்பாட்டைக் கூறுவதற்கு - விடயங்களை 'கக்குவதற்கு' - இடமளித்துப் பார்த்திருப்போம். உரியவேளை வரும்போது அவற்றை சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்வோம். இப்போது அவசரப்பட்டு முடிவு எடுப்பதற்கு எதுவும் இல்லை'' - என்று தமிழ்க் கூட்டமைப்பின் மூத்த தலைவர் ஒருவர் 'உதயன்' - ' சுடர் ஒளி'க்குத் தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பின் சில பிரமுகர்கள் தத்தமது பாட்டில் வெவ்வேறு கருத்துகளை அவ்வப்போது வெளியிட்டு வந்தாலும், இறுதி முடிவைக் கூட்டமைப்பு எடுக்கும்போது அவர்கள் அனைவரும் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள் என்று தாம் நம்புகிறார் எனவும் உறுதி கூறினார் அத் தலைவர்.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஏற்கனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் சந்தித்துப் பேசியிருக்கின்றார். தமது கூட்டமைப்பின் எல்லா எம்.பிக்களுடனும் ஜனாதிபதி பேசவேண்டும் என சம்பந்தன் வலியுறுத்தியதன் பேரிலேயே கூட்டமைப்பின் முழு எம்.பிக்களுடனுமான சந்திப்புக்கு ஆளும் தரப்பில் இருந்து அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம், நேற்று மாலை எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சம்பந்தன் பேசவிருந்தார். இதன்பின்னர் - பெரும்பாலும் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுகின்ற நாளுக்கு - டிசெம்பர் 17 ஆம் திகதிக்கு - ஓரிரு நாள்கள் முன்னதாக அவர் மீண்டும் ஜெனரல் சரத் பொன்சேகா - ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் ஒன்றாகச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகின்றது.

''இந்தத் தடவை எந்தத் தரப்புடனாவது இந்தத் தேர்தலை ஒட்டி ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு - உடன்பாட்டுக்கு - நாம் வருவோமானால், அதில் உறுதியளிக்கப்படும் விடயங்களை நிறைவு செய்வதற்கு சர்வதேச தரப்பு ஒன்று அல்லது பலவற்றின் உறுதிமொழியையும் அதனுடன் சேர்த்துப் பெற்றுக்கொள்ளத் தவறமாட்டோம்!''- என்றார் கூட்டமைப்பின் அந்த சிரேஷ்ட தலைவர். (சி)

## ஐ.நா. பிரதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இங்கு நேரடியாகக் கணிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளார் எனக் கூறப்பட்டது. நேரடியாக யுத்த பிரதேசங்களுக்குச் சென்று சிறார்கள் தொடர்பாகவும், அவர்களின் நிலைமை குறித்தும் அவர் ஆராய்வார் என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் தெரிவித்தார். (சி)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான ஒரு நிலைமையில் எஸ்.பி. திஸ்ஸநாயக்க ஜனாதிபதியைச் சந்தித்தமை ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்திலேயே எஸ்.பி. திஸ்ஸாநாயக்க நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாநாட்டிலும் கலந்து கொள்ளவில்லை. இதுகுறித்து நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, எஸ்.பி. திஸ்ஸாநாயக்க சுகயீனம் காரணமாகவே குறித்த மாநாட்டிற்கு வரவில்லை எனவும், நேற்று அவர் தன்னுடன் தொலைபேசியில் உரையாடினர் எனவும் கூறினார்.

இந்நிலையில் ஜனாதிபதியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து எஸ்.பி. திஸ்ஸாநாயக்க இன்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது அவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசின் பக்கம் தாவும் வாய்ப்புள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அவருக்கு அளிக்கும் பட்சத்தில் எவரும் 50 வீத வாக்குகளைப் பெறாமல் இரண்டாம் சுற்றுக்கு தள்ளப்படுவார்கள். யார் சிறுபான்மை மக்களுக்கு அதிகபட்ச உரிமைகளை வழங்குகிறார்களோ அவர்களுக்கு எமது இரண்டாவது வாக்கை கடைசி நேரத்தில் அளிக்க முடியும்.

ஏனைய நாடுகளில் சிறுபான்மை மக்கள் இந்த முறையைப் பின்பற்றியே ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து வருகிறார்கள். இதனடிப்படையிலேயே நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்துள்ளேன். எனவே, தமிழ் முஸ்லிம் மக்கள் சிந்தித்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தும் பட்சத்தில் நான் வேட்பாளர் பட்டியலில் இருந்து வாபஸ் பெறவும் தயாராக இருக்கிறேன்.

எனவே, தமிழ் - முஸ்லிம் தலைவர்களும் மக்களும் இவ்விடயத்தில் சிந்தித்துச் செயற்படுவீர்கள் என எதிர்பார்க்கிறேன் - என்றுள்ளது. (அ-சி)


## பதவி வெற்றிடம்

கணனிப் பயிற்சி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிநிலை வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) Manager
முகாமையாளர்- 1
2) Computer Instructor
கணனிப் போதனாசிரியர்- 6
3) Lab Demonstrator
பயிற்சியக விவரிப்பாளர்- 2
4) Course Counselor (பெண்)
பாடநெறி ஆலோசகர்- 1

தகுதியும் அனுபவமும் உள்ள ஆண், பெண் இருபாலாரும் 20.12.2009 இற்கு முன் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மனிதவள முகாமையாளர், இல.344, கஸ்தூரியார் வீதி, உதயன் பணிமனை முன்பாக, யாழ்ப்பாணம்.

(92889)








இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org